விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii



E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே



சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 13 வியாழக்கிழமை (25.02.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 068


## ஹரிஸ்ணவியின் படுகொலைக்கு நீதிகோரி

# வடக்கு முழுவதும் நேற்று ஸ்தம்பிதம்

### வன்முறைகள் அற்றநிலையில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்) வன்புணர்வின் பின் கொல்லப்பட்ட வவுனியா விபுலானந்த கல்லூரி மாணவியான ஹரிஸ்ணவியின் படுகொலைக்கு நீதிகேட்டு நேற்று புதன்கிழமை வடக்கு மாகாணம் முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் வடக்கின் இயல்புநிலை ஸ்தம்பித்து காணப்பட்டது. ஆசிரியர் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்கள், யாழ் பல்கலைச் சமூகம், அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்கள் எனப் பலரும் மேற்படி ஹர்த்தாலுக்கு தமது பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தனர். (24ஆம் பக்கம் பார்க்க)



### ஹரிஸ்ணவிக்கு நீதிகோரி நேற்று யாழில் கவனயீர்ப்பு போராட்டம்!



(யாழ்ப்பாணம்)
வவுனியா விபுலானந்தக் கல்லூரி மாணவி வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமைக்கு நீதிகோரி யாழ்.வைமன் வீதியில் கவனயீர்ப்பு 24ஆம் பக்கம் பார்க்க....

## சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தினாலும் விசாரணைகளைத் தடுக்கமாட்டேன்

### குடும்பத்தை காப்பாற்ற குற்றங்களை மறைக்க முடியாது – மைத்திரி



(கொழும்பு)
தமது குடும்பத்தினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் குற்ற விசாரணைகளை மூடிமறைத்து கொள்ளும் நோக்கிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை இரண்டாக உடைத்து புதிய கட்சியை ஆரம்பிக்கப் போவதாக கூறி வருகிறார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டாக பிளவுபட்டாலும் விசாரணைகளை நிறுத்த தான் இணங்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்.

ராஜபகஷ குடும்பத்தினருக்கு எதிராக நடத் 23ஆம் பக்கம் பார்க்க....

## தொடர் உணவுத்தவிர்ப்பில் தமிழ் அரசியல் கைதிகள்

### உடல் சோர்விலும் விடுதலைக்காக போராட்டம்

(அநுராதபுரம்)
அநுராதபுரம் மற்றும் புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 16 பேர் நேற்றையதினம் 3ஆவது நாளாகவும் தமது உண்ணா விரத போராட்டத்தை தொடர்ந்துள்ளனர். அநுராதபுரம் சிறைச்சாலையில் 24ஆம் பக்கம் பார்க்க....

## கைக்குண்டு யாழில் மீட்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம்பண்ணை பகுதியில் அமைந்துள்ள 24ஆம் பக்கம் பார்க்க....

### அரசியல் கைதிகள் 9 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)
பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த அரசியல் கைதி ஒருவரும் ஏற்கெனவே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த 8 பேர் உட்பட 9 தமிழ் அரசியல் கைதிகள் நேற்றைய தினம் கொழும்பு நீதவான் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் மலேசியாவில் வைதது கைது செய்யப்பட்ட செல்லத்துரை கிருபானந்தம் என்பவரே நேற்றையதினம் விடுதலை செய்யப்பட்டவராவார்.

இவருக்கு ஒரு வருடகால புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்வதாக கடந்த வழக்குகளின்போது தெரிவிக்கப்பட்டிருநத நிலையில் அவர் 24ஆம் பக்கம் பார்க்க....

### தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள

## 12 மணிநேர அனுமதியுடன் வெளியே வந்தார் நளினி!



(சென்னை)
இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு கடந்த 25 வருடங்களாக சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள நளினி, தனது தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்து 24ஆம் பக்கம் பார்க்க....


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பரீட்சை மண்டப அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் சட்டமாணிக் கற்கை நெறிக்கான தெரிவுப்பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பரீட்சை மண்டபங்கள் மற்றும் கலைப்பீட பரீட்சை மண்டபங்கள் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறாதவர்கள் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்துடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (செ)

# கிராமசேவகர் கடத்தல் கைதான 5 நபர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வரணி பகுதியில் கிராம சேவகரை கடத்தியதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 5 பேரை எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிப்பதி சிறிநிதி நந்தசேகரன் உத்தரவிட்டுள்ளார்.

வரணி, இயற்றாலை, கலைவாணி வீதியை சேர்ந்த மேற்படி பெண் கிராமசேவகரை கடந்த ஜனவரி மாதம் 21ஆம் திகதி காலை 8.45 மணியளவில் அலுவலகத்திற்கு சகோதரனுடன் செல்லும்போது வழி மறித்து தாக்கிய கும்பல் ஒன்று குறித்த பெண் கிராமசேவகரை தாக்கி வெற்று பத்திரம் ஒன்றில் கையெழுத்து கேட்டுள்ளனர். அதற்கு அவர் மறுப்பு தெரிவித்த நிலையில் ஹயஸ் வாகனத்தில் குறித்த பெண்ணை மேற்படி மர்மக் கும்பல் கடத்தியுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரத்தில் வைத்து மேற்படி கிராம சேவகரை பாதுகாப்பாக மீட்டதுடன், அவரை கடத்த பயன்படுத்திய ஹயஸ் வாகனம் மற்றும் கடத்தலில் ஈடுபட்ட மூவரையும் கைது செய்து செய்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 2 சந்தேக நபர்கள் பொலிஸாரால் தேடப்பட்டு அவர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி சந்தேக நபர்கள் 5 பேரையும் 3 ஆவது தடவையாக நேற்றைய தினம மன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே அவர்களை 9ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிபதி உத்தர விட்டார்.

குறித்த கடத்தல் சம்பவம் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

## உயிர்வாழ் சான்றிதழ் சமர்ப்பியுங்கள்

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஓய்வூதியர்கள் தங்களது உயிர்வாழ் சான்றிதழை தங்களது உரிய கிராம அலுவலர்களிடம் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 29ஆம் திகதி ஆகும்.

எனவே இதுவரை சமர்ப்பிக்காதவர்கள் உரிய கிராம அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு இதனைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்வதுடன் இதனைச் செலுத்தாதவர்களுக்கு அவர்கள் எமது பிரதேச செயலகப் பிரிவுக்குள் வதிவதில்லை எனக் கருத்திற் கொண்டு மார்ச் மாதத்திலிருந்து ஓய்வூதியமானது தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என நல்லூர் பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தெரிவித்துள்ளார். (செ)

# கஞ்சா, ஹெரோயின் கடத்தியவருக்கு மார்ச் 4 வரை விளக்கமறியல்

(கரணவாய்)

கஞ்சா மற்றும் ஹெரோயின் கடத்திய ஒருவரை எதிர்வரும் மார்ச் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

9 பைக்கற்றுகளைக் கொண்ட ஆயிரம் மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 5 பைக்கற்றுக்களைக் கொண்ட 5 ஆயிரம் மில்லிகிராம் கஞ்சா பொதிகளுடன் 25வயதுடைய இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு கலிகைச் சந்தி துன்னாலைப் பகுதியில் இடம்பெற்றதோடு நபரை காங்கேசன் துறை பொலிஸார் கைது செய்து நெல்லியடி பொலிஸில் ஒப்படைத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்றையதினம் பருத்தித்துறை நீதிமன்றில் சந்தேக நபரை ஆஜர்ப்படுத்திய போதே நீதிபதி மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளார். (செ-60)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம் K.K.S வீதி பன்றிக்கோட்டு பிள்ளையார் கோவிலுக்கு முன் ஒழுங்கையில் சகல தளபாட வசதிகளுடன் கூடிய வீடு வாகன தரிப்பிட வசதியுடனும் நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு.

(3691) **0777035457**

# செய்தியில் திருத்தம்

இன்றைய வலம்புரிப் பத்திரிகையின் 9ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள *வீதியில் கண்டெடுத்த பணம் கௌரவத்துடன் கையளிப்பு* எனும் செய்தியில் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்ட பணம் ஒரு இலட்சத்து மூவாயிரத்து அறுநூற்று எழுபது ரூபாய் என பிரசுரமாவதற்கு பதிலாக 3670 ரூபாய் என அச்சு பிழையாக பதிவுபடுத்தப்பட்டுள்ளது. மேற்படி செய்தியை திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஓய்வுபெற்ற
அதிபரும் நீண்டநாள் ஆசிரியருமாகிய
அமரர் **செல்லையா இராமுப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற அதிபர் - வியாவில் சைவ வித்தியாசாலை)
அவர்கள் 23.02.2016 செவ்வாய்க்கிழமை
இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின்
இழப்பினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர்
அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

**வியாவில், காரைநகர்.** (3690)

**அதிபர், ஆசிரியர்கள்**
**பாடசாலைச் சமூகம்,**
**வியாவில் சைவ வித்தியாசாலை**

## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

### பதவி வெற்றிடம் - வெளிவாரியான விண்ணப்பம்

மேற்படி சங்கத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பதவி வெற்றிடமாகவிருப்பதால் இவற்றை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

01 ) பதவி : உற்பத்தி முகாமையாளர்
குறியீட்டு இல. : 107/12
சம்பள அளவுத்திட்டம் : 10200 - 90X10-100X10-12100

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

(அ) கூட்டுறவு ஊழியர் 13வது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது 4 ஆண்டு கால அனுபவம்

**அல்லது**

(ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரம்/க.பொ.த உயர்தரப் பத்திரம் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும்/பங்கீடும்/பொருள் இறக்குமதியும் ஏற்றுமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

02 ) களஞ்சியப் பொறுப்பாளர்
குறியீட்டு இல. : 202/13
சம்பள அளவுத்திட்டம் : 9950 - 85X10-90X10-11700

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

(அ) கூட்டுறவுப் பணியாளர் 14வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் இரண்டு(02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப் பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

(ஆ) கூட்டுறவு பணியாளர் (சாதாரணதரம்) அல்லது க.பொ.த.(சாதாரணதரம்) எண்கணிதம் அல்லது க.பொ.த(சாதாரணதரம்) அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் சிங்கள அல்லது தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்டதுறைப் பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

(மேற்காணும் அனைத்துப் பதவிகளுக்கும் சுற்று நிருபத்திற்கமைய 15%மும், வாழ்க்கைச்செலவுப்படி ரூபா 7800/-ம் சங்கம் இலாபம் ஏற்படும் காலங்களில் கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)

வயதெல்லை :- 18 தொடக்கம் 45 வரை (சங்க எல்லைப் பரப்பிற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

விண்ணப்பங்கள் யாவும் பூரணப்படுத்தப்பட்டு 09.03.2016-ம் திகதிக்கு முன் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேற்படி முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**இங்ஙனம்**
**கூட்டுறவுச் சேவையிலுள்ள,**
**தலைவர்** (3689)

**சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக்**
**கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**பிரதான வீதி, சங்கானை.**


மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



“பொன்மனச் செம்மல்”
“மனிதநேய ஈகையாளன்”
“கல்விக் காருண்யன்”
எனும் பட்டங்களைப் பெற்ற
உயர்திரு.
E.S.P. நாகரத்தினம்
அவர்களின்
கருணை உள்ளம் என்றும் நிலைத்திட
கற்பகதரு போல் சேவைகள் தொடர்ந்திட
இன்னும் பலகாலம் சிறப்புடன் வாழ்ந்திட
வாழ்த்துகின்றோம்
இறும்பூதெய்துகிறோம்...

(C-3830)

வாழ்த்துவோர்:
NISSHA Civil Engineering Constructions
27B, பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

# ஹர்த்தால் அனுஷ்டிப்பு



யாழ்.நகர்ப்பகுதியில்



வவுனியாவில் பாடசாலை மாணவி வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து வடக்கு முழுவதும் நேற்றைய தினம் பூரண ஹர்த்தால் அனுஷடிக்கப்பட்டது. இதன் போது தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவினை வழங்கியிருந்ததோடு, வர்த்தக நிறுவனங்களும், பாடசாலைகளும் மூடப்பட்டு அத்தியாவசிய தேவை நிறுவனங்கள் மாத்திரம் இயங்கியதனை அவதானிக்க முடிந்தது. மேலும் படங்களை 5, 6 ஆம் பக்கங்களில் பார்க்க...

(படங்கள்- உ.சாளின்)

## மாணவி ஹரிஸ்ணவியின் கொலை கண்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம்

### மன்னார் மறை மாவட்ட பரிபாலகர் ஆயர் கண்டனம்

வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவி க.ஹரிஸ்ணவி வன்புணர்வுக்குள்ளாககப்பட்டு கொலை செய்யப்பட்டமையை வன்மையாக கண்டிப்பதாக மன்னார் மறை மாவட்ட பரிபாலகர் முன்னாள் ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

நல்லாட்சியில் நாட்டில் வன்புணர்வு உள்ளிட்ட சட்ட விரோத செயல்கள் அதிகரித்து வருவது கவலையளிக்கின்றது.

குறிப்பாக வன்புணர்வுகளுக்குள்ளாக்கப்பட்ட சிறுவர்களின் கொலை அதிகரித்து வருகிறது. இது சமூகங்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்தகாலங்களில்மாணவி வித்யா, கொட்டதெனிய சிறுமி சேயாவும் அதேபோன்று கடந்த 16 ஆம் திகதி வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவி க. ஹரிஸ்ணவி ஆகியோர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு மனதை உருக்கும்மனிதாபிமானமற்றசெயலை வன்மையாக கண்டிக்கின்றோம்.

மனதில் இரக்கமற்று காமுக அரக்கர்களால் செய்யப்பட்ட செயல் மிகவும் கொடூரமானது.

இவர்கள்சட்டத்தின்முன்னிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். எனவே பொலிஸார் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதன் மூலம் இவ்வாறான குற்றச் செயல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சிறுவர் உள்ளங்களில் இறைவன் குடி கொண்டிருப்பார் என சொல்வார்கள். இதுவே உண்மையானதும் கூட. ஆனால் பிஞ்சு சிறார்களை இரக்கமற்று வன்புணரவுக்குள்ளாக்கி கொலை செய்வது கண்டு நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

சிறுவர்கள் தொடர்பாக பெற்றோர் அதிக கவனம் எடுக்கவேண்டும். சிறுவர்களே நாட்டின் எதிர்காலம்.

ஹரிஸ்ணவியை இழந்து தவிக்கும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு மன்னார் ஆயர் இல்லம் சார்பாகவும் குருக்கள் சார்பாகவும் எனது சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம. இறைவன் அவர்களை ஆற்றுவாராக என்று தெரிவித்துள்ளார். (2-3-281)

## அரசே! மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய் விவசாயக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(பனிக்கன்குளம்)

பாலியல் வன்புணர்விற்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வவு/விபுலானந்தாக் கல்லூரி மாணவி கங்காதரன் ஹரிஸ்ணவிக்கு நீதி கேட்டு வவுனியா விவசாயக் கல்லூரி மாணவர்கள் நேற்றுக் காலை சுமார் ஒரு மணித்தியாலயம் வரை வவுனியா விவசாயக் கல்லூரிக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது "தண்டனை வழங்க தெரியாவிடின் குற்றவாளிகளை மக்களிடம் கொடு; வன்புணர்விற்கு தண்டனையை கடுமையாக்கு; அரசே! மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்; எம் நாட்டில் பணத்திற்கு பறிபோகின்றதா நீதி" என்ற வாசகங்களைத் தாங்கிய பதாகைகளை பிடித்தவாறு மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (2-3-281)






## போதைப்பொருள் குற்றங்கள்; 5 வருடங்களில் 551 மாணவர்கள் கைது

(கொழும்பு)

கடந்த ஐந்து வருடங்களில், போதைப்பொருட்கள் தொடர்பான குற்றங்களுக்காக, பாடசாலை மாணவர்கள் 551 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்" என, வெகுசன ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க, நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இடையீட்டு கேள்விகளை எழுப்பிய புத்திக பத்திரண எம்.பி, பாடசாலைக்குள் ளும், பாடசாலைகளுக்கு அண்மையில் உள்ள வர்த்தக நிலையங்களிலும் மற்றும் பாட சாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பேருந்துகளுக்குள்ளும் பாபுல், பீடா மற்றும் மதனமோதகம் உள்ளிட்ட போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது. அதுதொடர்பில் சோதனை நடத்துவதற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா?

போதைப்பொருட்களை விற்பனை செய்வதற்கான இடைத்தரகர்களாக பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தப்படுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. சுவையூட்டப்பட்ட பாக்கு மற்றும் குளிர்பானங்கள் பாடசாலைகளுக்கு அருகில் விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றை தடுப்பதற்கு ஔடத கட்டுப்பாட்டுச் சபை தலையிடுவதற்கு ஏதாவது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்றும் வினவினார்.

இக்கேள்விகளுக்கு பதிலளிக்கையில், "போதைபபொருட்களை, மாணவர்கள் பயனபடுத்துகின்றனரா உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை தேடியறிவதற்கு, பிரஜா பொலிஸ் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதுடன் ஔடத கட்டுப்பாட்டுச் சபை இதில் தலையிடமுடியுமா? என்பது தொடர்பில் கலந்துரையாடி முடிவெடுக்கப்படும்" எனவும் போதைப் பொருள் குற்றச்சாட்டின் கீழ் 5 வருடங்களில் 551 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (இ)




# நியூசிலாந்தை வீழ்த்தி தொடரை வென்றது ஆஸி

## சாதனையுடன் விடைபெற்றார் மக்கலம்



நியூசிலாந்து அணித் தலைவர் பிரெண்டன் மக்கலமின் பிரியாவிடை டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதுடன், டெஸ்ட் தொடரையும் 2:0 என்ற கணக்கில் கைப்பற்றி வெள்ளையடித்தது.

அவுஸ்திரேலிய-நியூசிலாந்து அணிகள் மோதிய 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கிறைஸ்ட்சேர்ச் நகரில் நடந்தது.

நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 370, அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 505 ஓட்டங்களும் எடுத்தன. 135 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 335 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் 201 ஓட்டங்களை வெற்றியிலக்கக் கொண்டு தமது 2ஆவது இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் 4ஆவது நாள் ஆட்டநேர நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 71 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

நேற்று 5ஆவதும் இறுதியுமான நாளாட்டம் நடந்தது. தொடர்ந்து விளையாடிய அவுஸ்திரேலியா 54 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை 7 விக்கெட்டுக்களால் அடைந்து அபார வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜோ பேர்ன்ஸ் 65, அணித் தலைவர் ஸ்மித் 53 ஓட்டங்கள் எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம் அவுஸ்திரேலியா 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றி நியூசிலாந்துக்கு வெள்ளையடித்தது.

வெலிங்டனில் நடந்த முதல் டெஸ்டில் ஆஸி இன்னிங்ஸ் மற்றும் 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருந்தது.

இந்த டெஸ்டில் வெற்றி பெற்றதன் மூலம் அவுஸ்திரேலியா தரவரிசையில் 'நம்பர் வன்' இடத்தை பிடித்தது.

இந்த டெஸ்ட் தொடரோடு நியூசிலாந்து அணியின் தலைவர் மக்கலம் சர்வதேச போட்டிகளில் இருந்து முழுமையாக விடைபெற்றார். தனது கடைசி டெஸ்டில் முத்திரை பதித்த அவர், 54 பந்தில் சதம் அடித்து ரிச்சர்ட்ஸ், மிஸ்பா சாதனையை முறியடித்து உலக சாதனை படைத்தார்.

34 வயதான மக்கலம் இதுவரை 101 டெஸ்ட்களில் 6 ஆயிரத்து 453 ஓட்டங்களும், 260 ஒருநாள் போட்டியில் 6 ஆயிரத்து 083 ஓட்டங்களும் எடுத்தார். (க)

# ஆசிய கிண்ண கிரிக்கெட் இந்திய அணி வெற்றி

ரோகித்தின் துடுப்பாட்டமும் நெஹ்ராவின் அபாரமான பந்துவீச்சும் கைகொடுக்க ஆசிய கிண்ண தொடரின் முதலாவது லீக் போட்டியில் இந்திய அணி 45 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

ஆசிய கிண்ண இருபது-20 போட்டிகள் பங்களாதேஷில் நேற்று ஆரம்பமானது. தொடரின் முதல் லீக் போட்டியில் இந்திய-பங்களாதேஷ் அணிகள் மிர்பூரில் பலப்பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய இந்திய அணிக்கு ரோகித் -தவான் ஆரம்பம் வழங்கினர். ஆரம்பத்தில் பங்களாதேஷ் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் இந்தியா விக்கெட்டுகளை இழந்து தடுமாறினாலும் ரோகித் ஷர்மாவின் துடுப்பாட்டம் கைகொடுக்க இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 166 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணியில் அதிகபட்சமாக ரோகித் ஷர்மா 83, ஹர்திக் பாண்டியா அதிரடியாக 31 ஓட்டங்கள் எடுத்தனர்.

பங்களாதேஷ் பந்துவீச்சில் அல் அமின் குசேன் 3, மோர்டசா, மகமதுல்லா, ஷாகிப் அல் ஹசன் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றி னர்.

167 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு சர்க்கார் - மிதுன் இணை ஆரம்பம் வழங்கியது.

இந்திய அணியின் சிறப்பான பந்து வீச்சால் பங்களாதேஷ் அணியின் முன்னணி விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்த்தப்பட்டன.

இதன்காரணமாக பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 121 ஓட்டங்கள் எடுத்து 45 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

தாக்குப்பிடித்து ஆடிய சபீர் ரகுமான் அதிகபட்சமாக 44 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் இந்தியா சார்பில் அசத்திய நெஹ்ரா 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணியின் ரோகித் ஷர்மா தெரிவானார். (க)

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் சிவசுப்பிரமணியம்



மூளாய் மேற்கைச் சேர்ந்த மயில்வாகனம் சிவசுப்பிரமணியம் 24-02-2016 புதன்கிழமை மாலை 06.10 மணியளவில் சிவபதமடைந்தார்.

இவர் சங்கானை பிரதேச சபையின் ஓய்வுபெற்ற வருமானவரி மேற்பார்வை உத்தியோகத்தராவார். அத்துடன் சங்கானை ப.நோ.கூ சங்கம், யாழ். மாவட்ட நுகர்ச்சி சங்க சமாசம், இடம்பெயர்ந்த சங்கானை-காரைநகர் ப.நோ.கூ சங்கம் ஆகியவற்றின் தலைவரும், மூளாயைச் சேர்ந்த பல்வேறு சமூக அமைப்புக்களின் தலைவர், உபதலைவர், போசகராக இருந்தவராவார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும்,

காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-நாகம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம்-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அத்துடன் சிவமோகன்(பூச்சியியல் உதவியாளர்- யாழ் பிராந்திய மலேரியா தடை இயக்கம், நிகழ்ச்சி இணைப்பாளர்/ யாழ் இராமகிருஷ்ண நலன்புரி நிலையம்), சி.சிவஞானவேல்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கயமலா(ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர்/கீரிமலை கிராமிய ஆயுர்வேத வைத்தியசாலை), சி.தனுசா(பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், சி.நிவேதிதையின்(யாழ் இந்து ஆரம்ப பாடசாலை) அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (25-02.2016) இன்று வியாழக்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று இறுதி ஊர்வலம் பி.ப 2 மணியளவில் ஆரம்பமாகி மூளாய் பித்தனை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பாசமிகு மகன்கள் :
சி.சிவமோகன்
சி.சிவஞானவேல்
தொ.இல : 0772397056

(3693)

# பாகிஸ்தான் சுப்பர் லீக் இஸ்லாமபாத் அணி சம்பியன்




பாகிஸ்தான் சுப்பர் லீக் இறுதிப் போட்டியில் 6 விக்கெட்டுகளால் குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணியை வீழ்த்திய இஸ்லாமபாத் யுனைரெட் அணி சம்பியன் பட்டம் வென்றது.

பாகிஸ்தான் சுப்பர் லீக் தொடரில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் குயெட்டா கிளாடியேட்டர்ஸ்- இஸ்லாமபாத் யுனைரெட் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய குவெட்டா கிளாடியேட்டர்ஸ் அணி சங்கக்கார, ஷெசாட் அதிரடியால் 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சங்கக்கார 32 பந்துகளில் 7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 55, ஷெஷாட் 39 பந்தில் 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 64 ஓட்டங்கள் எடுத்தனர்.

சற்று கடினமான வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய இஸ்லாமபாத் யுனைரெட் அணிக்கு தொடக்க வீரர் டுவைன் ஸ்மித் அதிரடி காட்டினார். அவர் 51 பந்தில் 7 பவுண்டரி 4 சிக்சர் என 73 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன்பிறகு வந்த பிரட் ஹடினும் தன் பங்குக்கு விளாசித்தள்ள, இஸ்லாமபாத் அணி 18.4 ஓவர்களில் 175 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

சிறப்பாக ஆடிய பிரட் ஹடின் ஆட்டமிழக்காமல் 39 பந்துகளில் 61 ஓட்டங்கள் (2 பவுண்டரிகள், 5 சிக்ஸர்) எடுத்தார்.

போட்டியின் ஆட்டநாயகனாக இஸ்லாமபாத்தின் டுவைன் ஸ்மித்தும் போட்டித் தொடரின் நாயகனாக ரவி போபராவும் தெரிவாகினர். (க)

# ஹரிஸ்ணவிக்கு நீதி கோரி ஹர்த்தால்



நெல்லியடி



பருத்தித்துறை



யாழ்.நகர் பகுதி



திருநெல்வேலி



பண்டத்தரிப்பு



சங்கானை



உரும்பிராய்




சாவகச்சேரி

வவுனியாவில் பாடசாலை மாணவி வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்து வடக்கு முழுவதும் நேற்றைய தினம் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (படங்கள்: சாளின், மகாலிங்கம், சோபிகா, கோபி, கிஷோர்)

**வவுனியா**







(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

**மன்னார்**







(படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

**முல்லைத்தீவு**







(படங்கள்:-பனிக்கன்குளம்,தண்ணீரூற்று ,வற்றாப்பளை,முள்ளியவளை செய்தியாளர்கள்)

**கிளிநொச்சி**







(படங்கள்:-கிளிநொச்சி ,பனிக்கன்குளம், முக்கொம்பன் ,மல்லாவி செய்தியாளர்கள்)

# ஹரிஸ்ணவிக்கு நீதி கேட்டு ஹர்த்தால் நேற்று அனுஷ்டிப்பு

(மல்லாவி)

**வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவி கங்காதரன் ஹரிஸ்ணவிக்கு நடந்த கொடூர சம்பவத்தை கண்டித்தும் படுகொலைக்கு நீதி கேட்டும் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பூரண ஹர்த்தால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.**

இதனால் அனைத்து இடங்களும் மக்கள் நடமாட்டமின்றி முடங்கிக் காணப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்றையதினம் பூரண ஹர்த்தால்அனுஷ்டிக்கப்பட்டது. அரச திணைக்களங்கள் வழமைபோல் இயங்கிய போதிலும் மக்கள் சேவைகளை பெற்றுக் கொள்ளச் சென்றமை குறைவாகவே காணப்பட்டது.

இதேவேளை பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகமளிக்காமையால் கற்றல் செயற்பாடுகள் இடம் பெறவில்லை. அத்தியாவசிய தேவைகளுக்காக மருந்தகங்கள், தேநீர்ச் சாலைகள் திறக்கப்பட்ட போதிலும் ஏனைய வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டு ஹர்த்தால் கடைப் பிடிக்கப்பட்டது.

அரசபேருந்துகள் ஒரு சில சேவையில் ஈடுபட்ட போதிலும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபட வில்லை. இதனால் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டது.

எனினும் நேற்றைய தினம் வட மாகாணத்தின் எந்தவொரு பாடசாலையும் மூடப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டபோதும் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு மாணவர்கள் எவரும் சமுகமளிக்காத நிலையில் பாடசாலைகளும் இயங்காமல் இருந்தன.

இதேவேளை முல்லைத்தீவில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதுடன் தனியார் போக்குவரத்து சேவைகளும் இடம்பெறவில்லை. அத்துடன் பாடசாலைகளுக்கு மாணவர்கள் சமுகமளிக்கவில்லை.

மேலும் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டமையினால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்கினர். இதேவேளை அரச திணைக்களங்கள் இயங்கிய போதும் மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாகவே இருந்தது.

மாணவி ஹரிஸ்ணவியின் படுகொலையைக் கண்டித்து மன்னாரில் போக்குவரத்துச் சேவைகள் நிறுத்தப்பட்டு பணிப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் சகல விதமான போக்குவரத்துச் சேவைகளும் நிறுத்தப்பட்டன. நேற்றுக்காலை 6 மணி முதல் தனியார் பேருந்து சங்கத்திலிருந்து உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கான சகல விதமான போக்குவரத்துச் சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனால் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு போக்குவரத்தை மேற்கொள்ளவிருந்த அரச திணைக்கள அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தனர். எனினும் மன்னாரில் அரச போக்குவரத்து சேவையின் உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட சேவைகள் வழமை போன்று இடம்பெற்றன.

இதேவேளை வவுனியாவில்மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் காரணமாக வவுனியா மாவட்டம் முற்றாக செயலிழந்தது.

சமூக வன்முறைக்கு எதிரான மக்கள் அமைப்பு விடுத்த வேண்டுகோளுக்கு அமைய வவுனியா மாவட்டத்தில் அனைத்து தமிழ் முஸ்லிம் வர்த்தகர்களும் வர்த்தக நிலையங்களைப்பூட்டி நீதிகோரும் எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதேவேளை தனியார் பேருந்துகள், முச்சக்கரவண்டிகள், வவுனியா இ.போ.சாலை பேருந்துகள் சேவையில் ஈடுபடாத நிலையில் ஏனைய மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட இலங்கை பேருந்து சபைக்குச் சொந்தமான பேருந்துகள் சேவையில் ஈடுபட்டிருந் தன.

இதன்போது தனியார் மற்றும் அரச வங்கிகள் வழமைபோல் இயங்கியதுடன் அரச திணைக்களங்கள் வெறிச்சோடிக் காணப்பட்டிருந்தன. பாடசாலைகள் யாவும் செயலிழந்து காணப்பட்டன.

(2-3-271-15-281-283-292-250-310-302)

# இந்திய அம்புலன்ஸ் சேவையை பெற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பு





இந்தியாவிடமிருந்து அம்புலன்ஸ் சேவையை பெற்றுக் கொள்வது தொடர்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சபையில் பிரதமருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையே கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றன.

இதன்போது இலங்கையில் இவ்வாறானதோர் சேவையை வழங்குவதற்கு எவராவது இருந்தால் அவர்களை இச் சபையில் அறிவிக்கவும் என்று பிரதமர் தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் கருஜய சூரிய தலைமையில் கூடியது. இதன்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் விசேட அறிக்கையொன்றை விடுத்து உரையாற்றினார்.

இதன் பின்னர் பந்துல குணவர்த்தன எம்.பி. கேள்வியொன்றை எழுப்பினார்.

அக் கேள்வியில் இந்தியாவுடன் உடன்படிக்கை செய்து கொள்வதற்கு முன்பதாக இந்தியாவில் அரச சார்பற்ற நிறுவனமொன்றிற்கு இலங்கையில் அம்புலன்ஸ் சேவை ஒன்றை நடத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது எந்த அடிப் படையில் வழங்கப்பட்டது என பிரதமரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர்,

இலங்கையில் இவ்விதமானதோர் சேவையை வழங்குவதற்கு எவரும் இல்லை. அப்படியிருந்தால்அறிவியுங்கள்.

இந்தியாவில் விசேடமாக கிராமங்களில் அவசர மருத்துவச் சேவையை வழங்க அம்புலன்ஸ் சேவை இடம் பெறுகிறது.

அதேபோன்று அவசர மோட்டார் சைக்கிள் சேவைகளும் இயங்குகின்றன.

எனவே எமது கிராமங்களிலும் இந்தச் சேவையை வழங்குவதற்கே நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்.

இதற்கு இந்திய அரசு பணம் செலவழிக்கின்றது. உங்கள் ஆட்சியில் சுகாதாரத திற்கான நிதி குறைக்கப்பட்டது. நோயாளர்களை கொலை செய்ய வேண்டுமென்றா கூறுகின்றீர்கள். நாம் நோயாளர்களை கொலை செய்ய மாட்டோம். அதற்கு தயாரில்லை என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதன் போது சபையில் எழுந்த ஜே.வி.பி எம்.பி. அநுர திஸாநாயக்க தற்போது இலங்கையில் இந்தியாவின் 100 அம்புலன்ஸ்கள் இயங்க ஆரம்பித்துள்ளன.

அதற்கு பணம் வழங்கப்படுகிறதா? இல்லையென்றால் அது பரிசாக வழங்கப்பட்டுள்ளதா? என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர்அச்சேவைகளின்சேவை கொடுப்பனவு வழங்கப்படுகின்றது என்றார்.

அநுர திஸாநாயக்க எம்.பி கேள்விக் கோரல் இல்லாமல் இச் சேவை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா எனக் கேட்ட போது,

பிரதமர் தனது பதிலில் இது தொடர்பான முழுத் தகவலகளை அச் சபைக்கு விரைவில் வழங்குவோம்.

இதன் போது எதிர்த்தரப்பினர் மீண்டும் இலங்கையில் இவ்வாறான அம்புலன்ஸ் சேவையை வழங்க எவரும் இல்லையா?. ஏன் இந்தியாவின் சேவையை பெறவேண்டும் எனக் கேள்வியெழுப்பினர்.

இதன்போது பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்று இடதுசாரிகள் எனத் தம்மை அடையாளம் காட்டிக் கொள்வோர். முதலாளித்துவத்தை பாதுகாக்கும் பாதுகாவலர்களாகவே செயற்படுகின்றனர்.

என்னிடம் திருடர்கள் தொடர்பான பைல்கள், தகவல்கள் உள்ளன. திருடர்களின் பெயர்களை வெளியிடலாம். ஆனால் நான் அதனை செய்யவில்லை.

கடந்த காலங்களில் நோயாளர்களை கொன்ற சுகாதாரத்திற்கு நிதியை குறைத்த இலவச சுகாதார சேவையை இல்லாமல் செய்தவர்களே இன்று அம்புலன்ஸ் சேவை தொடர்பாக பேசுகின்றார்கள் என மேலும் தெரிவித்தார். (இ)

## மகிந்த சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் திருமண நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன

### தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை சூரியவெவ மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில், திருமண நிகழ்வுகள் நடத்தப்படுவதாக விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இவ்வாறு கூறியிருந்தார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடைபெறாத காரணத்தினால் பிரதான நுழைவரங்கு திருமண விருந்துபசார மணடபமாக செயற்பட்டு வருகின்றது.

நாளொன்றுக்கு 10 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் திருமண நிகழ்வுகளுக்காக குறித்த அரங்கம் வழங்கப்படுகின்றது.

இந்த விளையாட்டு அரங்கம் மூடப்படமாட்டாது. விளையாட்டு மைதானத்தை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சர்வதேச பயிற்சிகளை நடத்தக் கூடிய ஓர் மைதானமாக இந்த மைதானத்தை மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளோம்.

சூரியவெவ பிரதேசத்தில் விளையாட்டு வீரர்கள் தங்குவதற்கு உசிதமான ஹோட்டல்கள் கிடையாது எனவும் அவ்வாறான ஹோட்டல்கள் நிர்மாணிக்கப்பட வேண்டுமென பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார் எனவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (இ)

## மகாசிவராத்திரிப் பெருவிழா

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 7ஆம் திகதி மகா சிவராத்திரிப் பெருவிழா வழிபாடுகள் இடம் பெறும். சிவ லிங்கத்திற்கு நான்கு சாமங்களும் திருமுழுக்கும் பூசைகளும் நடைபெறும்.

முற்பகல் 10மணி முதல் மாமன்றத்தில் சிவ தீட்சை வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. சிவ தொண்டர் அணியில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவமாணவியரும்ஏனையோரும் சிவ தீட்சை பெற்றுக் கொள்ளலாம். இவ ற்றிற்காக 02.03.2016ஆம் திகதிக்கு முன்னதாக அகில இலங்கை இந்து மாமன்றத்திலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் முன்பதிவு செய்து கொள்ளவும்.

அகில இலங்கை இந்து மாமன்றம்-011 243 4990

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்-011 258 5975

என்ற தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனப் பொது செயலாளர் தில்லைநடராஜா அறிவித்துள்ளார். (இ)


CAMBRIDGE ENGLISH

PET UNIVERSITY OF CAMBRIDGE



August மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞானமுகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமமுமின்றி விரிவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள அரிய சந்தர்ப்பம்.

Exam Date 27.05.2016-Colombo

- Around 4 million people a year take cambridge English exam
- 13000 universities and employers globally recognise our certificates
- Cambridge have an international network of 2,700 authorised exam Centres in 130 countries
- 40,000 Schools and institutions prepare students for cambridge English exam
- Cambridge have 100 years of experience and expertise in English language assessment
- நீங்கள IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானல், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்

FCE Cambridge First Certificate in English

FCE is an upper intermediate level exam.It tests the ability to deal confidently with range of written and spoken. communication.FCE is the most widely taken of the general English exam.with over 250,000 candidates every year. this exam is at CEFR level B2. Exam Date:07.06.2016

Course Schedule

| | Mo,tuse, wed,thue | Saturday & Sunday |
|---|---|---|
| Duaration | 10 week | 10 week |
| Time | 10.30-12.30 | 2.00-5.00 |

புதிய பிரிவுகள் 01.03.2016 இல் ஆரம்பமாகும்

BRITISH COLLEGE OF ENGLISH

NO.192,Navalar Road,Jaffna.

(பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)

Tel: 021 222 0384,077 880 3887



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா:13<br>உயரம்: 158CM<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5400 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்<br>தொ.இ: G/4032 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 37சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:Bed/ஆசிரியர்<br>தொ.இ: B/455 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 79செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BSC/தனியார் தொழில் லண்டன் PR<br>தொ.இ: G/4034 |
| பிறப்பு: 1963 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/433 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 47செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4035 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 56<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BA/ஆசிரியர்<br>தொ.இ: B/2873 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 48செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4040 |

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாக பணம் பெறும் முகவர்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை

## யாராவது செயற்பட்டிருந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர்

**வன்னி மாவட்டத்தில் அரச துறையில் வேலைவாய்ப்பை பெற்றுத் தருவதாகக் கூறி சில முகவர்கள் இயங்குவதாகவும் அதற்காக பணம் பெற்றுக்கொள்வதாகவும் சமூக வலைத்தளம் ஒன்றில் செய்தி வெளிவருவதற்கும் தனக்கும் எந்தவிதத் தொடர்புமில்லையென வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அமைச்சரின் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எனது பெயரையும் ஏனைய சில அரசியல் பிரநிதிதிகளின் பெயரையும் பயன்படுத்தி சில முகவர்கள் கிராமங்களில் அரச துறையில் வேலை பெற்றுத் தருவதாககூறி பணம் பெறுவதாக அண்மையில் அநாமதேய முகப்புத்தகமொன்றில் பதிவேற்றம் செய்யப்பட்டிருந்தது. இதே செய்தி சமூக வலைத்தளமொன்றில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான குற்றச் சாட்டுக்கும் எமக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை. எனது பிரத்தியேக ஆளணியை தவிர்ந்த வேறுயாரும் கிராமங்களில் எனது இணைப்பாளராக கடமையாற்றவில்லை. அவ்வாறு யாரும் நியமிக்கப்படவும் இல்லை. எனவே இது தொடர்பில் பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

யாராவது எனது பெயருக்கு பங்கம் விளைவிக்கும் நோக்கில் அவ்வாறு செயற்பட்டிருந்தால் தகுந்த ஆதாரங்களுடன் எனது வவுனியா மாவட்ட இணைப்பு அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அவ்வாறு யாராவது செயற்பட்டிருந்தால் அவர்களுக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென மேலும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-3-281)

# கிளி.பாடசாலைகளின் அருகே இராணுவ முகாம்கள் . கல்விப்புலத்தை சீரழிக்கும் கபடத்தனமான செயல்கள்

## பூநகரி விக்னேஸ்வராவின் 3 பக்கமும் இராணுவ முகாம்கள் என்கிறார் சிறீதரன் எம்.பி

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளின் அருகே இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு படையினர் நிலை கொண்டுள்ளமை கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி முன்னேற்றத்தில் பெரும் தடையாக அமைந்திருக்கிறது. இந் நிலைமை குறித்து நேரில் அவதானிப்பதற்காக பூநகரி விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் திடீர் விஜயம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டார். பாடசாலையின் மூன்று புறமும படைமுகாம்கள் அமைக்கப்பட்டு ஆயுதமேந்திய படையினர் நிலைகொண்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அச்சம் மிகுந்த சூழலில் கல்விச்செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. படையினரின் பிரசன்னம் பாடசாலை வளாகத்துக்குள் இருப்பதுடன் அங்கு தமது இராணுவ அடையாளங்களை பிரதிபலிக்கக்கூடிய மதில் வேலைகளில் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மாணவர்களுக்கென இராணுவத்தால் ஆபத்தான அரை நிரந்தரக்கட்டட தொகுதி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

அண்மையில் முழங்காவில் தேசிய பாடசாலையின் ஆசிரியைகளின் விடுதிக்குள் அருகிலிருந்த இராணுவத்தினர் உட்புக முனைந்தமையால் அங்கும் அச்சமான சூழல் தோன்றியிருக்கிறது. இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தில் பல பாடசாலைகளுக்கு அருகில் ஆயுதப் படைகள் தங்கியிருப்பது சுதந்திரமான கற்றல் கற்பித்தல் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது . ஆட்சி மாறி நல்லாட்சி நிலை தோன்றியிருப்பதாக சர்வதேசம் எங்கும் கூறுகின்ற ஆட்சியாளர்கள் இராணுவ ஆக்கிரமிப்பு சிந்தனைகளிலிருந்து இன்னும் விடுபடவில்லை என்பதுடன் தமிழ் மக்களின் பெரும் சொத்தாகிய கல்விப் புலத்தை சீரழிக்கும் கபடத்தனமான செயலாகவே பாடசாலைகள் அருகே இராணுவ முகாம்களை அமைத்திருப்பது வெளிப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைதீவு றோ.க. வித்தியாலயம், கௌதாரி முனை அ.த.க பாடசாலை, கிளிநொச்சி அழகியல் கலைத்துறைப்பள்ளி ஆகியன முழுமையாக இராணுவத்தால் விடுவிக்கப்படவில்லை . கிளிநொச்சி மகாவித்தியாலயம், பூநகரி விக்கினேஸ்வரா வித்தியாலயம், முழங்காவில் தேசியப்பாடசாலை முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம், ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க பாடசாலை, கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் என்பனவற்றின் அருகே இராணுவ நிலைகளும் முகாம்களும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். (2-3-281)






பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சிறுமி க.ஹரிஸ்ணவி மரணத்திற்கு காரணமானவர்களை கைது செய்து தண்டிக்கக்கோரியும் இது தொடராமல் தடை செய்யக் கோரி நேற்று திருமுறிகண்டியில் முழுகடையடைப்பு இடம்பெற்றதைப் படத்தில் காணலாம்.

# தேங்காய் எண்ணெய் தொழிற்சாலை கட்டடம் இதுவரை திறக்கப்படவில்லை

## தெங்கு உற்பத்தியாளர்கள் விசனம்



"வடக்கின் வசந்தம்" திட்டத்தின் கீழ 21.12.2010 இல் தெங்கு கைத்தொழில் மேம்பாட்டிற்கான ஒரு அம்சமாக தேங்காய் எண்ணெய் தொழிற்சாலைக்காக அமைக்கப்பட்ட கட்டடம் இதுவரையில் திறக்கப்படாமை குறித்து தெங்கு உற்பத்தியாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

*கிளிநொச்சி* 155ஆம் கட்டையில் அமைந்துள்ள இக் கட்டடம் 2010 ஆம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டது. தற்போது இதனைச் சுற்றி பற்றைக் காடுகள் சூழ்ந்து காணப்படுவதாகவும் இதனால் மது அருந்துதல் மற்றும் பல சமூகச் சீர்கேடான வேலைகள் இக் கட்டடத்துக்குள் நடைபெறுவதாகவும் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் கூறுகின்றனர்.

இக் கட்டடம் திறக்கப்படாமையால் தேங்காய் எண்ணெய் உற்பத்திக்காக தூரப் பிரதேசம் செல்ல வேண்டியுள்ளதால் தமக்கு அதிகளவு பணம் செலவாகின்றதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனமெடுக்கும் பட்சத்தில் தங்கள் வாழ்வாதாரம் மேம்படும் என தெங்கு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.(2-3-311)

# மத்தியஸ்த சபை பயிற்சிப்பட்டறை

மன்னார் மடு பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான நிதிசார் மத்தியஸ்தம் தொடர்பான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் மார்ச் மாதம் 3,4,5 ஆம் திகதிகளில் மடு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதே திகதிகளில் வவுனியா வடக்கு மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு பயி ற்சிப்பட்டறையும் வவுனியா இந்திரன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. (2-3-134)



மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டு ஆறு வருடங்களுக்கு பின்னர் இந்துபுரம் 9 ஆவது வீட்டுத்திட்டம்மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. ஒட்டுசுட்டான் செயலக பிரிவுக்கு உட்பட்ட இந்துபுரம் கிராமத்தின் 9 வீட்டுத் திட்டப் பகுதிகளுக்கு கடந்த 23 ஆம் திகதி இலங்கை மின்சார சபையினால் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வீட்டு திட்டத்தை சுற்றி பற்றைக் காடுகள் காணப்படுகின்றன. இதனால் இரவு வேளைகளில் விஷ ஜந்துகளின் நடமாட்டம் இருந்ததாகவும் தற்போது மின்சாரம் கிடைத்தமையால் அச்சமின்றி மக்கள் இரவில் நடமாட முடிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-3-311)

# நாட்டில் பாலியல் வன்கொடுமைகளுக்கு எதிராக அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும்

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா அழைப்பு

(பனிக்கன்குளம்)

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிராக நிகழ்த்தப்பட்டு வரும் பாலியல் வன்முறைகளுக்கெதிராக இலங்கையின் சகல இன மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்காந்தராசா கோரிக்கை விடுத்துள்ளார்

இதுபற்றி அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், இலங்கையில் தற்போது சிறுவர்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்து வருகின்றதனை அவதானிக்க முடிகின்றது. கடந்த ஒரு வருடத்திற்குள் மன்ன குளத்தில் சரண்யா,புங்குடுதீவில் வித்தியா, கொட்டதெனியா சேயா,தற்போது வவுனியாவில் ஹரிஸ்ணவி என சிறு பிள்ளைகள் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுகின்றனர்.இவர்களுக்கு எதிராக இகப்பாதக செயலைப் புரிந்தவர்கள் உடனடியாக கண்டறியப்படல் வேண்டும். எத்தனை காலங்களுக்கு இந் நிலை தொடர்ந்து செல்லும் எங்களுடைய சமூகத்தில் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் யாரால் உருவாகி வருகின்றது? எனவே இந்நிலைமைகள் இனி வருகின்ற காலங்களில் தொடராமல் இருக்க முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும்.எமது சமூகம் தீய வழிக்கு செல்வதனை தடுக்க வேண்டும். அரை நூற்றாண்டு காலமாக எமது மண்ணில் எத்தனை அவலங்களை அழிவுகளை நாம் சந்தித்துள்ளோம்.

எமது உரிமைகளுக் காக எத்தனை இழப்புக்களை சந்தித்தோம்.அதனை விளங்கி எமது இனத்தின் மேன்மைக்காக நாம் ஒன்றுபட்டு நிற்கவேண்டிய வேளையில் அதிகரித்துள்ள மது பாவனை பழக்கங்களும் போதைப் பொருள் பாவனையும் ஆபாச இணையத்தளங்களும் பிரதான அம்சமாக மாறி ஒழுங்கற்ற மிருகத்தனமான சமூகத்தை உருவாக்குகி வருகின்றது.

கட்டுக்கோப்புடன் இருந்து வந்த எமது வட பகுதிகளில் தற்போது தலைவிரித்தாடும் இச் சமூக அநீதிக்கெதிராக கிராமங்கள் தோறும் அனைவரும விழிப்புணர்வு கொள்ள வேண்டும் புங்குடுதீவில் வித்தியாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கும் முன்னரே வவுனியாவில் ஹரிஸ்ணவிக்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டது.

இதனூடாக இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் வன்முறைகளுக்கெதிரான சட்டங்களின் குறைபாடுகள்வெளிப்படுகின்றது.

எனவே சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிராக நிகழ்த்தப்படும் பாலியல் வன்கொடுமை புரிவோர்க்கெதிராக விஷேட சட்டங்கள் அமுலாக்கப்பட்டு குற்றவாளிகள் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும்.

எமது எதிர்கால சந்ததியினர் இவ்வாறான அநீதிகளுக்கு ஆளாகி வருகின்ற நிலைமையானது பெற்றோர்கள் மத்தியில் பாரிய அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

எனவே இவ்வாறு சிறுவர்கள் மீது பாலியல் வன்கொடுமை புரிவோருக்கு எதிராக கடுமையான புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டு அமுலபடுத்தப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (2-3-281)

# இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த பண்ணை பிரதேச செயலாளரிடம்

## நேற்று உயரதிகாரிகளால் கையளிப்பு



இராணுவத்தினரின் கட்டுப் பாட்டில் இருந்த சுமன் பண்ணை நேற்றைய தினம் இராணுவ உயர திகாரியினால் பூநகரி பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்ப ட்டுள்ளது.

மேற்படி பண்ணையை பொது மக்களுக்காக கையளித்த இரா ணுவத்துக்கு நன்றி தெரிவிப்பதாக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனிஸ்வரன் தெரிவித்துள் ளார்.

முழங்காவில் பிரதேசத்தில் இருக்கின்ற குறித்த பண்ணை யானது கடந்த காலத்தில் பிரதேச செயலாளரினால் நடுத்தர வகுப்பி னருக்கு ஏறத்தாழ 10 நபர்களுக்கு தலா 2 ஏக்கர் வீதம் வழங்க ப்பட்டிருந்தது.

பின்னரான காலப்பகுதியில் குறித்த நபர்கள் வெளிநாடுகளுக்கு சென்றமையினாலும், அந்தக் காணி களை பராமரிக்காமல் விட்டமை யினாலும் விடுதலைப்புலிகள் தம் வசம் எடுத்து விடுதலைப்புலிகளின் லெப்டினன் கேணல் சுமன் பெய ரில் ஒரு விவசாயப் பண்ணை யினை நடத்தி வந்திருந்தனர்.

அதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக 2009ம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின் னர் இராணுவத்தினர் அந்தப் பண்ணையினை கையகப்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற் கொண்டுவந்திருந்தமை தெரிய வருகின்றது.

அண்மையில் அப்பகுதியில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட அசௌ கரியங்கள் தொடர்பில் அங்கி ருக்கின்ற பொறுப்புவாய்ந்த இரா ணுவ அதிகாரிக்குத் தெரியப்படுத் தியதன் அடிப்படையில் இராணுவ அதிகாரி உடனடியாக செயற்பட்டு அங்கிருந்த இராணுவத்தினரை பிரதான முகாமிற்கு உள்வாங்கி யிருக்கின்றார்.

ஆகவே மேற்படி பொறுப்புடன் செயற்பட்ட இராணுவ அதிகாரிக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்கிறேன்.

மேலும் அக்குறிப்பிட்ட காணி யினை அருகில் இருக்கின்ற கிளி/ முழங்காவில் ஆரம்ப பாடசாலை க்கும், மத்திய மகா வித்தியால யத்துக்கும் பொதுத் தேவையின் அடிப்படையில்,தேவை இருப்பத னையும் உணர்ந்து சம்பந்தப்பட்ட காணியினை குறித்த பிரதேச செயலாளர் ஊடாக உரிய சட்ட நட வடிக்கைகளுக்கு அமைவாகவும், பாடசாலைக்கு பகிர்ந்தளிக்க வேண் டிய நடவடிக்கையினை எதிர்கா லத்தில் மேற்கொள்ளவுள்ளோம்.

இதுபோன்ற பல்வேறு பண் ணைகளும், பொதுமக்களின் காணி களும் இன்னும் இராணுவத்தின் வசம் இருக்கின்றது உண்மையில் மேற்படி உயர் இராணுவ அதிகாரி செயற்பட்டது போன்று ஏனைய பிரதேசங்களில் இருக்கின்ற உயர் அதிகாரிகள் மக்களின் தேவை அறி ந்து, பொது முக்கியத்துவம் அறிந்து தேவையற்ற இடங்களில் இருக்கி ன்ற இராணுவத்தினரை தமது பிரதான முகாம்களுக்கு எடுப்பார் கள் என்று சொன்னால் பொதுமக்க ளுக்கும், இந்த நல்லாட்சிக்கும் இடை யில் ஓர் புரிந்துணர்வு முன் னோக்கி நகர்த்தப்படும் என்றும், பொறுப்புடனும், கடமையுணர்வு டனும் செயற்படுகின்ற அதிகாரி களை நாம் பாராட்டுவது எமது கடமை ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-281)

# ஜேர்மனியில் உலகத் தமிழர் பேரவை முக்கியஸ்தர்களுடன் மங்கள சந்திப்பு

வெளிவிவகார அமைச்சர் மங் கள சமரவீர உலகத்தமிழர் பேர வையின் முக்கியஸ்தர்களுடன் ஜேர்மனியில் சந்திப்பொன்றை நடத்தியிருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உலகத் தமிழர் பேரவையின் முக்கியஸ்தர்களான அருட்தந்தை இம்மானுவேல் அடிகளார் மற்றும் சுரேன் சுரேந்திரன் ஆகியோரு க்கும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையி லான சந்திப்பொன்று ஜேர்மனியில் பேர்லினில் நடைபெற்றுள்ளது.

பேர்லினில் உள்ள மெரியட் ஹோட்டலில் நடைபெற்ற இந்த சந்திப்பிற்கு முன்னதாக அருட் தந்தை இம்மானுவேல் அடிகளார் மற்றும் சுரேன் சுரேந்திரன் ஆகி யோர் ஹோட்டலின் வரவேற் பறையில் அமர்ந்திருந்ததை பேர்லி னில் வாழும் இலங்கையர்கள் சிலர் அவதானித்துள்ளனர்.

இவர்களின் கலந்துரையாட லின் போது இலங்கையின் நல்லி ணக்க மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அதற்கான நடைமுறைகள், அவற் றின் முன்னேற்றம் என்பன குறித்து ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

அருட்தந்தை இம்மானுவேல் அடிகளார் கடந்த 1997ம் ஆண்டு தொடக்கம் ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் பெற்று வாழ்ந்து கொண்டி ருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக் கது என்றும் குறித்த செய்தியில் தொட ர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ)

# வீதியில் கண்டெடுத்த பணம் கௌரவத்துடன் கையளிப்பு



உடுவில் தெற்கு புதுமடத்தைச் சேர்ந்த எஸ்.தினேஸ் என்பவர், 3670 ரூபா பணத்துடன் வங்கி அட்டை கள் சாரதி அனுமதிப்பத்திரம், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் அவரது கைப்பையை மருதனார் மடம், மானிப்பாய் வீதியில் தவற விட்டார். அதனை உடுவில் தெற்கு சத்தியபுரத்தைச் சேர்ந்த பீதாம்பரம் ஜேவிந்தன் கண்டெடுத்து தேசிய அ.அ.யிலுள்ள முகவரியூடாக ஜே/ 182 பிரிவைச் சேர்ந்த கிராம சேவை யாளர் ஊடாக உரியவரை அடை யாளம் கண்டு உறுதிப்படுத்திய பின் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகத்தினர் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் பலர் முன்னிலையில் பணப்பையை உரியவரிடம் ஒப்ப டைத்தார். அதற்குப்பிரதிபலனாகதினேஸ் என்பவரால் ஜேவிந்தனுக்கு மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார். இத்தகைய ஜேவிந்தனின் நேர்மையு ள்ள செயலை அங்குள்ள மக்கள் வியந்து பாராட்டினார்கள். (இ)

# சட்டவிரோத பணப்பரிமாற்றத்தை தடுப்பதே வர்த்தமானி அறிவித்தலின் நோக்கமாகும்

## நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

வெளிநாடுகளிலுள்ள இலங்கை யர்களால் இலங்கைக்கு அனுப்ப ப்படும் பணம் தொடர்பாக எந்தக் கேள்விகளும் கேட்கப்படமாட்டாது என நிதியமைச்சர் ரவி கருணாநாய க்க உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பான மத்திய வங்கி யின் வர்த்தமானி அறிவித்தல் 27 ஜனவரி 2016 என திகதியிடப்பட்டு தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் வெளியானது.ஆனால் ஆங்கில மொழியில் 27 ஜனவரி 2015 என பிரசுரமாகியுள்ளது.இதில் 2இலட் சம் ரூபாவுக்கு அதிகமான பணம் இலங்கைக்கு அனுப்பப்படுமாயின் அது எங்கிருந்து வருகிறது பற்றிய விபரங்கள் வங்கிக்கு அறிவிக்கப்பட வேண்டும் என கோரப்பட்டிருந்தது. இது தொடர்பாக நிதியமைச்சர் தெரி விக்கையில்,

மேற்படி வர்த்தமானி அறிவித் தல் மூலம் அந்நியச்செலாவணி இலங்கைக்குள் வருவது தடுக்கப்ப டுகிறது. உண்மையில் அந்நியச் செலாவணி இலங்கைக்குள் வருவ தற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை.

வர்த்தமானி அறிவித்தலின் நோக் கம் சட்டவிரோத பணப்பரிமாற்ற ங்களைத் தடுப்பதும் பயங்கரவாத த்திற்கு நிதியுதவியளிப்பதை தடுப் பதுமாகவே இருந்தது.

ஊடக சுதந்திரம் காட்டுக் கழுதை யின் சுதந்திரமாக மாறுவதற்கு இடம ளிக்க முடியாது.இவ்வாறான விடய ங்களை எழுதுவதற்கு அனுமதிக்க முடியாது.

இதுவிடயம் தொடர்பாக மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்தி ரனைத் தொடர்பு கொண்டபோது தான் சீனாவுக்கு விஜயம் மேற் கொண்டுள்ளதாகவும் மேற்படி வர் த்தமானி அறிவித்தல் தொடர்பில் தனக்குத் தெரியவில்லை என்று அவர் கூறியதாகவும் நிதியமைச்சர் கூறினார்.

மேற்படி பத்திரிகையாளர் மாநா ட்டில் கருத்துத் தெரிவித்த மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரி வின் பணிப்பாளர் எச்.அமரதுங்க வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு பணம் அனுப்பப்படுவது தொடர் பாக வர்த்தமானியில் எதுவும் குறிப் பிடப்படவில்லை.கூட்டு வாக்கியங் களில் ஏற்பட்ட குழப்பநிலை காரண மாகவே இது இடம்பெற்றதாக அவர் கூறியுள்ளார். (3)

# மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வும் முதியோர் பத்திரிகை வெளியீடும்

இலங்கை முதியோர் சுகவாழ் வுக் கழகத்தின் வடமாகாண அமை யத்தின் பெப்ரவரி மாத ஒன்றுகூடல் நிகழ்வானது நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அரச திணைக்களங்களின் வங் கிகளின், தனியார் நிறுவனங்களின் கூட்டுறவுச் சங்கங்களின் ஓய்வூதி யர்களும் அவர்களின் குடும்பங்கள் சார்ந்த முதியோர்களும் ஒன்றி ணைந்து நடத்தும் முதியோர் மாதா ந்த ஒன்றுகூடல் நிகழ்வின் வரவேற் புரையை இணைச் செயலாளர் வீ.ஸ்ரீசக்திவேலும் தலைமையுரை யினை தலைவர் க.கணேசமூர்த்தி யும் நிகழ்த்தவுள்ளனர். (இ)







யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த ஆங்கில தின விழா கடந்த திங்கட்கிழமை யாழ்.கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆங்கில மொழி ஆசிரிய நிலைய சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.சரவணபவ ஐயர், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக்கல்வி திணைக்கள (ஆங்கிலம்) மேலதிக பணிப்பாளர் ஐ.செல்வராசா, கௌரவ விருந்தினராக ஆங்கில மொழி ஆசிரிய நிலைய முன்னாள் தலைவர் எஸ்.சுந்தரேஸ்வரன் மற்றும் ஆசிரிய மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# சம்பூரில் கடற்படை முகாம் அகற்றப்படுவது உறுதி!

## பிரதியமைச்சர் அஜித் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

**சம்பூரில் காணப்படும் பிரதான மூன்று கடற்படை முகாம்களில் ஒன்றை மட்டுமே அரசாங்கம் இடமாற்றம் செய்ய திட்டமிட்டுள்ளது. அந்தவகையில் குறித்த இடமாற்றம் காரணமாக எமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் ஏற்படப் போவதில்லை என பிரதியமைச்சர் அஜித். பி. பெரேரா உறுதியளித்தார்.**

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேலும் தெரி வித்தார்.

சம்பூரில் மூன்று பிரதானமான கடற்படை முகாம்கள் உள்ளன. இவற்றில் ஒரு முகாம் மாத்திரமே இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

குறித்த முகாமை இடமாற்றம் செய்வதற்கு அங்குள்ள கடற்படையினர் பூரண ஒத்துழைப்பை எமக்கு வழங்க தயாராக இருப்பதாக தெரிவித்தனர்.



எனவே தற்போதுள்ள முகாமிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் புதிய முகாமினை நிர்மாணிக்க தீர்மானித்தோம்.

மேலும் யுத்தத்தின் போது இடம்பெயர்ந்தவர்கள் மீளவும் சம்பூரில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குறித்த திட்டத்தை செயற்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

மேலும் இங்கு நாம் பயணித்த போது புதிய பிரச்சினைகள் ஏற்படுவதற்கான எந்தவொரு சாத்தியக் கூறும் தென்படவில்லை.

ஆகவே சம்பூர் கடற்படை முகாம் இடமாற்றம் செய்வதனூடாக தேசிய பாதுகாப்புக்கு எவ்விதமான அச்சுறுத்தலும் ஏற்படாது என்றார்.

அதேவேளை, சம்பூர் அனல் மின் நிலையத்தினை நிர்மாணிப்பதற்கான புதிய ஒப்பந்தம் இந்தியாவு டனை கைச்சாத்திடப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# எக்னெலிகொட வழக்கு சட்டத்தரணியை அச்சுறுத்தும் வகையில் சுவரொட்டிகள்

(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட வழக்கின் அரச சட்டத்தரணியை அச்சுறுத்தும் வகையிலான சுவரொட்டிகள் அவரது வீட்டின் அருகில் ஒட்டப்பட்டுள்ளன.

சிங்கள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் போகச்செய்யப்பட்ட வழக்கின் அரச தரப்பு சட்டத்தரணியான திலீப பீரிஸ், சந்தேக நபர்களுக்கு எதிராக கடுமையான முறையில் சட்டப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றார்.

அத்துடன் இந்த வழக்கின் முறைப்பாட்டாளர் சந்தியா எக்னெலிகொட மற்றும் வழக்கை விசாரிக்கும் ஹோமாகம நீதிமன்றம் ஆகியவற்றுக்கும் அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்தில் பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை விளக்கமறியலுக்கு அனுப்பும் விடயத்திலும் திலீப பீரிஸ் முன்னின்று செயற்பட்டிருந்தார்.

இந்நிலையில் ஹோகந்தரை பிரதேசத்தில் உள்ள திலீப பீரிஸின் இல்லத்தினருகிலும், அப்பிரதேசம் முழுமையாகவும் அவரை அச்சுறுத்தி, கேவலப்படுத்தும்வகையிலான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணையின் போது பொலிஸார் சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள சீசீடிவி கருவிகளை பரிசோதித்துப் பார்த்த போது சுவரொட்டிகள் ஒட்டியவர்கள் தொடர்பான எந்தவொரு காணொலிப் பதிவும் அவற்றில் பதிவாகி இருக்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

சுவரொட்டிகளை ஒட்டியவர்கள் அந்தளவுக்கு மிகவும் சூட்சுமமான முறையில் அவற்றை ஒட்டியிருப்பது பொலிஸாரை ஆச்சரியப்படுத்தியுள்ளது.சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ)

# புதிய கட்சியை அமைக்க மகிந்தவினால் முடியாது

## துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சவால் விடுக்கும் வகையில் புதிய கட்சி அமைக்க முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு முடியாது என கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மேலுமொரு ஆட்டோ கட்சி யொன்றைத் தவிர, சுதந்திரக் கட் சிக்கு சவால் விடுக்கும் புதிய கடசியொன்றை குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவினால் உருவாக்கிட முடியாது.

கட்சியின் மொத்த உறுப்பினர்களை ஆட்டோ ஒன்றில் ஏற்றிச் செல்லக் கூடிய வகையிலான அரசியல் கட்சிகள் டசின் கணக்கில் நாட்டில் காணப்படுகின்றன.

எனினும் இவ்வாறான கட்சிகளினால் ஸ்ரீல்ங்கா சுதந்திரக் கட்சிக்கோ ஐக்கிய தேசியக் கட்சிக்கோ சவால் ஏற்படுத்த முடியாது.

மகிந்த ராஜபக்ஷவிற்கு தேவையென்றால் தங்களது குடும்ப உறுப்



பினர்களைக் கொண்டு புதிய ஆட்டோ கட்சியொன்றை உருவாக்க முடியும்.

ராஜபக்ஷ குடும்பத்துடன் தொடர்புடையவர்கள் இந்தக் கட்சியில் இணைந்து கொண்டாலும், சுதந்திரக் கட்சியுடன் தொடர்புடைய எவரும் இணைந்து கொள்ளப் போவதில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் என்ற காரணத்தினால் மகிந்தவினால் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளை வகிக்க முடிந்தது.

எனினும், மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக களமிறங்கி ஜனாதிபதியாக தெரிவாகியிருந்தார். இன்று அவரே எமது தலைவர் என துமிந்த திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# புகையிரதப் பாதைக்குப் பச்சைக்கொடி! 2000குடும்பங்களுக்கு சிவப்புக்கொடி

களனிவெளி புகையிரத மார்க்கத்தில் கொழும்புக் கோட்டைக்கும் கொட்டாவைக்கும் இடைப்பட்ட பகுதியை இரட்டை புகையிரத பாதைகளுடன் மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகளில் போக்குவரத்து அமைச்சும், மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சும் இணங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த இரட்டை புகையிரத பாதையின் நிர்மாணத்துக்காக பாதையின் இருமருங்கிலும் வசிக்கும் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் அப்புறப்படுத்தப்படுமெனவும், அவர்களுக்கான மாற்று வசிப்பிடங்கள் பெற்றுத் தரப்படுமெனவும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

விசேடமாக ஹைலெவல் பாதை உட்பட அதனை அண்மித்த பெருந்தெருக்களில் ஏற்பட்டுள்ள கடும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகவே இந்த இரட்டை ரயில் பாதைத் திட்டம் முன் னெடுக்கப்படவுள்ளதாகவும் அப்பாதைகான ஆரம்பப்பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார். (இ)

# வீடு திடீர் தாழ் இறக்கம் பத்து பேர் இடப்பெயர்வு



ஹற்றன், வட்டவளை பகுதியில் ஒரு வீடு நேற்று விடியற்காலை முதல் திடீர் தாழ் இறங்கி வருவதால் அந்த வீட்டில் இருந்த 10 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வட்டவளை நகர பகுதியில் இந்த வீடு ஒரு அடி அகலத்தில் திடீரென நிலம் தாழ் இறங்கியுள்ளது.

இதனால் அருகிலுள்ள வீடுகள் மண்ணில் புதையலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த வீட்டிலிருந்த 3 குடும்பங்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக வேறு இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளதாக வட்டவளை பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இடர் முகாமைத்துவ மைய அதிகாரிகளும் நிலச்சரிதவியல் அதிகாரிகளும் இது தொடர்பாக அறிவித்துள்ளதாக வட்டவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உடுகம மேலும் தெரிவித்தார். (இ)

# 2 ஆயிரத்து 700 பாடசாலைகளில் இணையத்தள தொடர்புகள் துண்டிப்பு

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான "ஸ்கூல் நெட்" எனப்படும் இணையத்தள வசதிக்கான கட்டணங்கள் செலுத்தப்படாததால் நாடெங்குமுள்ள சுமார் 2 ஆயிரத்து 700 பாடசாலைகளில் இணையத்தளத் தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் அச்சங்கம் மேலும் குறிப்பிடுகையில்,

இணையத்தள வசதிக்காக ஒவ்வொரு பாடசாலையும் மாதாந்தம் 7 ஆயிரம் ரூபா முதல் 9 ஆயிரம் ரூபா வரை கட்டணமாகச் செலுத்த வேண்டும் என ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகை அசாதாரணமானது எனவும், மாதாந்தம் 1,500 ரூபாவே நியாயமான கட்டணம் எனவும் அண்மையில் கல்வியமைச்சர் கருத்து தெரிவித்திருந்தார். 1,500 ரூபா கட்டணத்துக்கு அமைவாக புதிய ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்படவுள்ளதாக அவர் தெரிவித்திருந்த போதிலும் அது நிறைவேறவில்லை.

அத்துடன், மாதாந்தம் 7,000 9,000 ரூபா வரை கட்டணம் செலுத்துவதற்காக செய்யப்பட்டிருந்த பழைய ஒப்பந்தம் மோசடியானது எனவும், அது தொடர்பில் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் கல்வியமைச்சர் தெரிவித்திருந்தார். எனினும் அந்த விசாரணையும் நடைபெறவில்லை.

எவ்வாறாயினும் இந்த இணையத்தளத் தொடர்பு துண்டிக்கப்பட்டிருப்பதால் இலட்சக்கணக்கான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். எனவே, இவ்விடயத்தில் கலவியமைச்சு உடனடியாகத் தலையிட்டு உரிய தீர்வுகளை வழங்க வேண்டும்? - என்று இலங்கை ஆசிரியர் சங்கம் அவசர வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது. (இ)

# பிள்ளைகளின் ஆளுமையை எப்படி விருத்தி செய்யலாம்?

பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்வது எப்படி என்று நோக்குவதற்கு முன் ஆளுமை என்றால் என்ன? ஏன் ஆளுமையை விருத்தி செய்ய வேண்டும்? எப்படி விருத்தி செய்ய வேண்டும்? பிள்ளைகளின் ஆளுமையை விருத்தி செய்வதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை? போன்ற வினாக்கள் இவ் வினாக்களுக்குள்ளே பொதிந்து கிடக்கின்றன.

அந்தவகையில் ஆளுமை என்றால் என்ன? என நோக்கும் போது மேலெழுந்தவாரியாக ஒருவரின் தோற்றம், உருவம், பேச்சு, இயல்புகள், பிரயாணமுறை போன்ற வெளிப்புற இலட்சணங்களே சாதாரண வழக்கில் ஆளுமை என கருதப்படுகிறது. அதாவது மற்றவர்களிலும் பார்க்க ஒரு தெளிவான தோற்றம் ஒருவரிடம் காணப்படும் போது சிறந்த ஆளுமை காணப்படுகிறது எனப் பரவலாகக் கருதப்படுகிறது. இது ஆளுமையின் குறுகிய கருத்தாகும்.

குறிப்பிட்ட ஒரு கொள்கையின் அடிப்படையில் என்பது ஆளுமை பற்றிய கருத்துக்களிலிருந்து தெரிகிறது.

ஆளுமை என்பதன் ஆங்கில பதம் Personality என்பதாகும். இது Persona என்ற இலத்தீன் சொல்லிலிருந்து திரிபடைந்ததாகும். இப் persona என்னும் சொல்லான இலத்தீன் மொழியின் கருத்தின் படி முகமூடி என்பதற்கு பயன்படுத்தப்பட்டது.

அதை அணிபவர் நடிக்கும் பாத்திரத்தையும் பின்னால் நடிப்பவரையும் அறிமுகம் செய்வதற்கு இச் சொல் பரந்த கருத்தில் பாவிக்கப்பட்டது. இதே போன்றே Persona வில் இருந்து திரிபுபட்ட சொல்லான Personality என்னும் ஆங்கிலப் பதமும் மேற்குறித்த பரந்த கருத்தே துலக்குகின்றது.

ஆளுமை வளர்ச்சி மீது தாக்கம் செலுத்தும் காரணிகள் என்று நோக்கும் போது மிக முக்கியமாக இரண்டு காரணிகளைச் சொல்ல முடியும்.

I.பரம்பரை காரணிகள்
II.உயிரியல் காரணிகள்

### சூழற்காரணிகளும் ஆளுமை விருத்தியும்

ஒரு பிள்ளையின் ஆளுமை விருத்தியில் பரம்பரைக் காரணி இருந்தாலும் மிகக் கூடுதலான பங்கு வகிக்கும் காரணியாக சூழற்காரணி காணப்படுகிறது. சமூக சூழல் ஆளுமை உருவாக்கத்திலும் விருத்தியிலும் அதிகம் செல்வாக்குச் செலுத்தும்.பிள்ளை சூழலுடன் நிகழும் இடையீடுச் செயல்களினால் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் ஆளுக்கு ஆள் வேறுபடும். ஒரு பிள்ளை வளரும் குடும்பத்தின் உட்கட்டுமான சூழலும் பல்வேறு காரணங்களால் வேறுபடக் கூடும். சமூகத்தின் பொருளாதார நிலைமை, அவன் சார்ந்த சமூக வகுப்பு, பிள்ளைகள் வளர்ப்பு முறைகள் இதை விட வழிபாடுகள், ஒழுங்குகளும் தண்டனைகளும், பெற்றோரின் கல்வி, பெற்றோரின் ஒழுக்கம் போன்ற பல காரணிகள் பிள்ளையின் ஆளுமை விருத்தியில் தாக்கம் விளைவிக்கின்றன.

சமூகக் கலாசாரக் காரணிகளாகக் கருதப்படும் இவ்விடயம் காலத்திற்குக் காலம் ,நாடுகளுக்கு நாடு, கலாசாரத்திற்கு கலாசாரம்,சமயத்திற்கு சமயம்,சமூகத்திற்கு சமூகம் , பிரதேசத்திற்கு பிரதேசம், இனத்திற்கு இனம் வேறுபடக் கூடியதாக இருக்கும்.

தொடர்புகள் வேறுபடுவதன் காரணமாக அவர்கள் பெற்றுக் கொள்ளும் அனுபவங்கள் ஆளுமை விருத்தியில் தாக்கம் ஏற்படுத்தும்.

இந்த வகையில் பிள்ளையின் ஆளுமை விருத்தியை எவ்வாறு விருத்தி செய்யலாம் என்று நோக்கின்.

### பெற்றோரின் பங்கு

பெற்றோர் என்பவர் பிள்ளைகளின் கண்ணுக்குப் புலனாகும் தெய்வங்கள். பெற்றோர், பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு முழுப் பொறுப்பானவர்கள் பெற்றோர், அதேபோல் பிள்ளைகளின் விருத்திக்கும் முழுப் பொறுப்பானவர்கள் பெற்றோர், குடும்பங்கள் சமூகத்தை உருவாக்குகின்றன. சமூக விரிவாக்கம் மற்றும் நீடித் திருத்தல் என்பதற்கு உதவும் வகையில் நிகழ்வது குடும்பங்கள் தான்.குழந்தைகளைப் பெற்று சமூகத்திற்கான மனித வளமாக வரலாறு முழுவதும் வழங்கி வருபவர்களும் பெற்றோர்கள் தான்.

எனவே தான் குழந்தைகளின் வாழ்வியல் மாதிரி, வாழ்வியல் விழுமியங்கள், வாழ்வியல் செயலாற்றல்கள் என்பவற்றைத் தீர்மானிப்பதில் பெற்றோர் ஒப்பிட முடியாத பெருமைக்குரியவர்கள்.

### வீட்டின் பங்கு

வீட்டில் இருக்கும் நடமாடும் நூலகங்கள் என்னும் அனுபவப் புத்தகங்களான முதியவர்கள்,இவர்கள் பிள்ளையின் ஆளுமை விருத்தியில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறார்கள் என்று நோக்கின் இவர்கள் அனுபவ வாயிலாக பல்வேறு விடயங்களைக் கற்றதோடு மட்டுமல்லாது புராண இதிகாசக் கதைகளையும் பிள்ளைகள் தவறி விழும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு தட்டிக்கொடுத்து நல்ல பாதையைக் காட்டிக் கொடுப்பவர்களாக இருப்பவர்கள். இவர்கள் பிள்ளையின் ஆளுமை விருத்தியில் திருகாணி இல்லாத தேரை சறுக்குக்கட்டை போட்டு எப்படி சரியான பாதையில் கொண்டு செல்கிறார்களோ அதேபோல்தான் இந்த முதியவர்கள் பிள்ளையின் ஆளுமை விருத்தியில் பங்குகொள்கிறார்கள்.

### ஆசிரியரின் பங்கு

இதேபோலத்தான் ஆசிரியர்கள தம்மிடம் வரும் பிள்ளைகளுக்கு கற்பிக்கின்ற போது அவனது திறன், திறன் இன்மைகளை இனங்கண்டு ஒவ்வொரு மாணவனையும் அவதானித்து கற்பிக்கின்றார்கள். இங்கு சில வேளைகளில் சில துர் அதிர்ஷ்டங்களும் நடைபெறுகின்றன என்பது மறுப்பதற்கல்ல. மாறாக ஆசிரியர் மாணவர்களின் குற்றம் களைந்து அவனது ஆளுமை விருத்தியை ஏற்படுத்தும் ஏணியாகத் திகழ்கின்றான்.

ஆசிரியன் இல்லை யென்றால் எந்த நாடும் அறிவு விருத்தியில்லாத இருண்ட தேசங்களாகவே காணப்படும். ஆசிரியன் என்பவன் வசதிப் படுத்துனராக இருந்து செயற்பட்டு மாணவர்களை அவர்களது சிந்தனையை கிளறி விடுவர்களாகத் திகழ வேண்டும். மாறாக புத்தகத்தில் இருப்பதை மட்டும் மனனம் செய்து பரீட்சையை எதிர் கொண்டு பரீட்சையில் சித்தியடைபவர்கள் தான் ஆளுமை விருத்தி உடையவர்கள் என்று கருத முடியாது. மாறாக பல் திறன் ஆற்றல் உடையவர்களாக மிளிர்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்திக்கொடுத்து பல்திறன் ஆற்றல் உடையவராக மிளிர்வதற்கேற்ற வசதிகளை செய்து கொடுக்கும் ஆசிரியர்களால் நிச்சயம் ஆளுமை உள்ள பிள்ளைகளை உருவாக்க முடியும்.

### பிள்ளையின் ஆளுமை விருத்தியை பாதிக்கும் காரணிகள்

பிள்ளைகளுக்கு வீட்டிலும் சரி, பாடசாலைகளிலும் சரி பொறுப்புக்களை முழுமையாக வழங்குவதில்லை. ஏனெனில் அவர்களை சிறுவர்கள், அவர்கள் சரியாக செய்ய மாட்டார்கள் என்ற எண்ணம் காணப்படுகின்றது. சிறு வயதான பிள்ளைகளின் கையில் அதிக பணப்புழக்கம். இது பிள்ளைகளை ஆளுமை விருத்தியை பாதிப்பதோடு மட்டுமின்றி அவனைப் பல்வேறு புறள்வான நடத்தைக்கு உட்படுத்துகின்றது.

சிறு பிள்ளைகளாக இருக்கின்ற போதே முதிர்வான எண்ணங்களை விதைத்தல், அதாவது பத்து வயதுப் பிள்ளைகளுக்கு பதினெட்டு, இருபது, முப்பது போன்ற வயதினருடன் நட்பு. இது ஒரு வகையில் ஆளுமை விருத்தியை ஏற்படுத்தினாலும் இது ஒரு ஆரோக்கியம் உள்ளதாக அமைய மாட்டாது.

இதனை எமது கிராமியப் பழமொழியில் வெம்பல் மாங்காய் போன்றது. என்பார்கள்.

முதியவர்களுக்கு கீழ்ப்படியாமை, ஆசிரியர்களுக்குக் கீழ்ப்படியாமை, விரைவு உணவுப்பழக்கம், அழகுசாதனப் பொருட்களின் மோகம், வீட்டிலும் சரி பாடசாலைகளிலும் சரி, பொது இடத்திலும் சரி வீண் பேச்சுப் பேசுதல், தொடர் நாடகத்திற்கு அடிமையாதல், சினிமா மோகம், போதைக்கு அடிமையாதல், பேஸ்புக் (Face Book), வைபர் (Viber), போன்றவற்றிற்கு அடிமையாதல், பணபலம் போன்ற காரணங்களைக் கூறலாம்.

இன்று பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள் என்று நோக்கின் ஆளுமை விருத்தியில் ரோபோக்களை போல செயற்படுகின்றவர்களைத் தான் காணமுடிகிறது. அதாவது ரோபோ எவ்வாறு நிகழ்ச்சிநிரல் தயாரிக்கப்பட்டு அந் நிரலுக்கேற்ப செயற்படுகின்றதோ அப்படித்தான் இன்று பிள்ளைகளும் நிகழ்ச்சி நிரல் படுத்தப்பட்டவர்கள் போல ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். உதாரணமாக கடைக்குச் சென்று 1Kg சீனி வாங்கி வாருங்கள் என்று தாயாரால் குறித்த கடைக்கு அனுப்பினால் கடைக்காரன் 1/2 Kg தான் இருக்கிறது என்றால் அந்த சீனியை வாங்காமல் வருபவர்களாகத் தான் இருக்கிறார்கள். அதேபோல மோட்டார் வண்டி செலுத்துகிறார்கள். திடீரென ஏதாவது சிறு பிழை ஏற்பட்டால் அதனைச் சரி செய்ய முடியாமல் பல கிலோமீற்றர் தூரம் உருட்டிச் சென்று திருத்தும் இடத்திற்கு கொண்டு செல்பவர்களாகத் தான் இருக்கிறார்கள்.



ஆசிரியர்
பரமநாதன்
விஜிந்தன்
யா/மானிப்பாய்
சென்ற்.ஆன்ஸ்.
றோ.க.த.க.பாடசாலை

முன்னைய காலங்களில் எல்லாம் குடும்ப வறுமையை உணர்ந்து செயற்படுகின்ற பிள்ளைகளை காணலாம். ஆனால் இன்று விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் தான் அவ்வாறு. பாடசாலைகளிலும் மாணவர் தலைவர்களாக தெரிவானவர்கள் கூட ஆசிரியர்களால் சொன்னதை மட்டும் செய்பவர்களாகவும் சிலர் எனக்கென்ன போச்சு என்ற நிலைதான் அதிகரித்துக் கொண்டு வருகின்றது.

வசதிவாய்ப்புக்கள் அதிகரித்துக் கொண்டு வரவர பிள்ளைகள் உடல் மட்டும் வளரும் நிலைதான் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

இது ஆரோக்கியம் அல்ல, ஆளுமை விருத்தி அல்ல, இந்த நிலைமை நீண்டு கொண்டு செல்லுமாயின் ஏற்கனவே அழிந்து வரும் தமிழ் இன அடையாளங்கள் இன்னும் அழிந்து செல்லும். எமது சமூகக்கலாசாரம் கட்டியெழுப்பப்படாமல் எம்மை நாமே அழித்தவர்களாகவும் தொலைத்தவர்களாகவும் ஆவோம்.

தமிழனாய்ப் பிறந்து தமிழ் தெரியாத தமிழ்ச் சமூகம் ஒன்று பனை தெரியா வடலிகளாக புலத்திலும் சரி, புலம்பெயர்ந்தும் சரி வாழ்ந்து வருகிறது. இவற்றுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு நாம் எமது பிள்ளைகளை எமது கலா சாரத்தோடு ஆளுமை மிக்க பிள்ளைகளாக உருவாக்க வேண்டும்.

வெறுமனே பட்டம் பெற்றால்போதும் என்ற நிலையை மாற்றி பட்டத்திற்கேற்ற பட்டறிவும் ஆளுமை மிக்கவர்களையும் உருவாக்க வேண்டும்.

இதில் நாம் எல்லோரும் உறுதி எடுத்து வாழ்வோமாக.

# உள்ளூராட்சி எல்லை நிர்ணயம் குறித்து 1000இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்

உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை நிர்ணயம் தொடரபில் மக்களின் முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளை கண்டறியும் ஐவர் கொண்ட குழுவிற்கு 1000 இற்கும் அதிகமான முறைப்பாடுகள்முன்வைக்கப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், தேர்தல்கள் கண்காணிப்பு குழு மற்றும் மக்களிடம் இருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

1000 இற்கும் அதிகமான பிரிவுகளில் இருந்து 2000 ற்கும் அதிகமான முறைப்பாடுகள் குறித்த குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இதுவரையில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

விசாரணைகளின் முடிவுகள் தொடர்பான அறிக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் குறித்த அமைச்சிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் நடத்துவதை இலக்காக கொண்டே இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படடுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. (இ)

# ரோசியின் அடிப்படை உரிமை மனு மார்ச் மாதம் 16ம் திகதி பரிசீலனை



(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரோசி சேனநாயக்கவின் அடிப்படை உரிமை மீறல் மனு அடுத்த மாதம் 16ஆம் திகதி பரிசீலனை செய்யப்படவுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது கொழும்பு மாவட்ட விருப்பு வாக்குகள் மீள எண்ணப்பட வேண்டுமெனக் கோரி ரோசி சேனநாயக்க இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

நேற்று முன்தினம் இந்த மனு உச்ச நீதிமன்றில் எடுக்கப்பட்ட போது, மனுவை பரிசீலனை செய்வது குறித்து 16ஆம் திகதி தீர்மானிக்கப்படும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அப்போதைய தேர்தல் ஆணையாளர், ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், கொழும்பு மாவட்ட தெரி வத்தாட்சி அதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் 11 வேட்பாளர்கள் நாடாளுமன்றிற்கு தெரிவாகியதுடன், விருப்பு வாக்கு அடிப்படையில் ரோசி சேனாநாயக்க 12ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

65320 விருப்பு வாக்குகளை தாம் பெற்றுக்கொண்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் அதனை விடவும் கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டு மெனவும் ரோசி மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு கிடைத்த விருப்பு வாக்குகள் வேறு நபர்களின் விருபு வாக்குகளுடன்இணைக்கப்பட்டுள்ளதாக மனுவில் மேலும் தெரிவித்துள்ளார்.(இ)


## 13 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
1939
01
30

மறைவு
2003
02
19



அமரர் கா. சந்திரரசா S.L.A.S

பிரதேச செயலர் (ஓய்வுநிலை) வலி மேற்கு, சங்கானை

நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் U.N.H.C.R

திதி : 2016.02.25

ஆண்டுகள் பதின்மூன்று ஆகியே சென்றுமப்பா
ஆற்ற முடியாதாம் உம் பிரிவை என்றும் எம்மால்
நானிலத்தார் போற்ற நன் மகனாய் வாழ்ந்தீர்கள்
நாமும் வாழ்வதற்கு நல் வழிகள் காட்டி வைத்தீர்
நாளும் உமை மறவோம் மறவோமே அப்பா
நாராயணனை போற்றுகின்றோம் நற்கதிக்கே.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பறளாய் வீதி, சுழிபுரம். (3686) குடும்பத்தினர்



## யாரிடம் பேசுவது?

யார் என்னை புரிந்து கொள்வார்? நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்? நான் என்ன தவறு செய்தேன்? என்னால் ஒன்றுமே முடியாது! நான் என்ன செய்வது?

எம்முடன் பேசுங்கள்

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தினந்தோறும் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 1 மணி வரை

- மத சார்பற்றது
- ரகசியம் பேணப்படும்

021 222 8117 077 900 8776

Sponsored by enlightenment circle an arm of Saiva munnetta sangam UK

(C-3808)



## காணி தேவை

A9க்கு அண்டிய பகுதியில் கைதடி, நுணாவிலுக்கு இடைப்பட்ட இடத்தில் 30 - 50 பரப்புக்கு உட்பட்ட வெறுங்காணி சிறு தொழிற்சாலை அமைப்பதற்கு குறைந்த விலையில் தேவை. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு :
0775925088,0779131735



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கணபதிப்பிள்ளை இராசையா

மேலதிக கணக்காய்வுப் பரிசோதகர்
Sri Lanka Telecom Colombo



பிறப்பு
1949
01
27

இறப்பு
2016
01
26

எமது குடும்பத்தலைவர் பிரிவுற்றமையினால் துயருற்ற வேளையில் மரணச்சடங்கில் கலந்து கொண்டோர்க்கும் தொலைபேசியூடாக ஆறுதல் வார்த்தைகள் கூறியவர்களுக்கும் நன்றியை தெரிவித்து கொள்வதுடன் 25.02.2016 இன்று வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாமியன் அரசடி, கரவெட்டி மத்தி
கரவெட்டி

(சி-3826)

தகவல்:- குடும்பத்தினர்
தொ.பே:-021-226 4747


## இராசி பலன்

25.02.2016

(மாசி 13, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
திருதியை பின்னிரவு 5.21 மணிவரை
உத்தரம் நண்பகல் 12.02மணிவரை
சுபநேரம் 7.59-9.29மணிவரை
இராகுகாலம் 1.59-3.29 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம்,சதயம் | | |
| புத சுக் | | | குரு ராகு |
| | சனி | செவ் | சந் |

**மேடம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், பகைவர்கள் விலகுவர், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**இடபம்:** வியாபார விருத்தியுண்டு, பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்லபெயர் கிடைக்கும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**கடகம்:** குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள், பயணங்களால் பலன் கிடைக்கும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி:** ஆன்மீக சிந்தனை அதிகரிக்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** குடும்ப ஒற்றுமை கூடும் நாள் செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்:** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

# ஆப்கான் தற்கொலைப்படை தாக்குதலில் 13பேர் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் ஆதிக்கம் செலுத்தி வருகிற தலிபான் தீவிரவாதிகள் சமீபகாலமாக தங்களது தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றனர். அவர்கள் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரை குறிவைத்து தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இதில் அப்பாவி மக்களும் கொன்று குவிக்கப்படுகின்றனர்.



இந்த நிலையில், நேற்று முன்தினம் பர்வான் மாகாணத்தில் உள்ள சந்தைப்பகுதி மற்றும் வைத்திய சாலைக்கு அருகே தலிபான் தீவிரவாதிகள் தற்கொலைப்படை தாக்குதலை நடத்தினர். பொலிஸ் அதிகாரி ஒருவரை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் உள்ளூர் பொலிஸார் 4 பேரும், அப்பாவி மக்கள் 9 பேரும் கொல்லப்பட்டனர்.

குறிவைக்கப்பட்ட பொலிஸ் அதிகாரி உட்பட 19 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் அனைவரும் மீட்கப்பட்டு, வைத்திய சாலை அனுமதிக்கப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (இ)

# குஜராத் கடலில் கைவிடப்பட்ட படகு ஆயுதத்துடன் கண்டுபிடிப்பு

குஜராத் கடற்பகுதியில் கைவிடப்பட்ட பாகிஸ்தான் படகு ஆயுதத்துடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் எல்லை ஒட்டிய கட்ச் மாவட்டம் ஹாராமி நாலாவில், கடற்பகுதியில் கைவிடப்பட்ட பாகிஸ்தான் படகு ஆயுதத்துடன் எல்லை பாதுகாப்பு படையால் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. ஹாராமி நாலாவின் அருகே கண்டுபிடிக்கப்பட்டுள்ள படகு பாகிஸ்தானை சேர்ந்தது என்பது தெரிய வந்துள்ளது. படகில் துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது தொடர்பாக ரோந்து படையிடம் தகவல் தெரிவித்து உள்ளோம். இதுதொடர்பாக விசாரணையானது தீவிரமாக நடைபெற்று வருகிறது, என்று எல்லைப் பாதுகாப்பு படை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள துப்பாக்கியானது வேட்டைக்கு பயன்படுத்துவது போலுள்ளது. படகில் இருந்தவர்கள், எல்லைப் பாதுகாப்பு படையினர் ரோந்து பணிக்கு வந்ததை பார்த்து தப்பி ஓடியிருக்கலாம் என்று அரசு தரப்பு தகவல்கள் தெரிவித்து உள்ளன. கட்ச் பகுதியில் முன்னதாக எல்லைப் பாதுகாப்பு படை ஒரு மீன்பிடி கப்பலை பறிமுதல் செய்தது, படகில் செல்போன்கள் மற்றும் பிற மீன்பிடி உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தியா - பாகிஸ்தான் எல்லைப்பகுதியில் தொடர்ச்சியாக கைவிடப்பட்ட பாகிஸ்தான் படகுகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. கடந்த 4 மாதங்களில் மட்டும் எல்லைப் பாதுகாப்பு படையால் 5ஆவது படகு கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. (இ)

# பரபரப்பான வீதியில் விழுந்து நொறுங்கிய குட்டி விமானம்



கலிபோர்னியாவில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் பரபரப்பாக இயங்கும் வீதி ஒன்றில் குட்டி விமானம் ஒன்று விழுந்து நொறுங்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் Pacoima பகுதியில்தான் இந்த அதிர்ச்சி தரும் சம்பவம் நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகிறது. Pacoima பகுதியின் பரபரப்பான வீதியின் மீது பறந்து கொண்டிருந்த போது விமானியின் கட்டுப்பாட்டினை இழந்த குட்டி விமானம் நிலை தடுமாறியுள்ளது.

இதனையடுத்து அந்த வீதியில் அந்த விமானம் விழுந்து விபத்துக்குள்ளாகியது, இந்த விபத்தில் இருந்து விமானி அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பியுள்ளார்.

நிலைதடுமாறி விழுந்த விமானம் அந்த வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களின்மீது மோதி நொறுங்கியதாக கூறப்படுகிறது.

அந்த வீதியில் சென்றுகொண்டிருந்த வாகன சாரதிகள் சிலர் இந்த விபத்தில் சிக்கி காயமின்றி தப்பியுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தகவலறிந்து விரைந்து வந்த மீட்பு குழுவினர் மற்றும் மத்திய விமான போக்குவரத்து நிர்வாக அதிகாரிகள் துரித நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் மீது விமானம் விழுந்து நொறுங்கியுள்ளதால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (இ)

# சூரியமின்சக்தியில் இயங்கும் உலகின் முதல் பாராளுமன்றம்

## பாகிஸ்தான் சாதனை



(இஸ்லாமாபாத்)

உலகில் முதன்முதலாக முழுவதும் சூரிய மின்சக்தியை மட்டும் பயன்படுத்தும் நாடாளுமன்றம் என்ற பெருமையை பாகிஸ்தான் பாராளுமன்றம் பெற்றுள்ளது.

2014ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டமானது நேற்று முதல் செயற்பாட்டுக்கு வந்துள்ளது. சீனா 55 மில்லியன் டொலர் நிதி உதவியோடு பாராளுமன்றக் கட்டடம் முழுவதும் சூரிய மின்சக்தி வசதி செய்யப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத்தில் நடந்த எளிமையான விழாவில் பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்த வசதியைத் தொடக்கி வைத்தார். இந்த விழாவில் பேசிய பிரதமர் ஷெரீப் பொதுத்துறை அலுவலகங்களும், தனியார் நிறுவனங்களும் இதனை முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு சூரிய மின்சக்திக்கு மாற வேண்டும். மேலும் இந்த திட்டம் பாகிஸ்தான் - சீனாவுககு இடையிலான உறவை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று தெரிவித்தார். (இ)

## நேபாள மலைப்பகுதியில்

# 21 பயணிகளுடன் சென்ற விமானம் திடீரென மாயம்

(காத்மண்டு)

நேபாளத்தில் 21 பேருடன் சென்ற சிறியரக விமானம் ஒன்று மலைப் பகுதியில் நேற்று காலை மாயமானது.

மேற்கு நேபாளத்தில் இரண்டு வெளிநாட்டவர்கள் உட்பட 21 பேருடன் சென்ற விமானமானது காணாமற் போனது என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போகாராவில் இருந்து 18 பயணிகள் மற்றும் விமான பணியாளர்களுடன் ஜோம்சோம் சென்ற விமானம் மலைப்பகுதியில் மாயமாகியது. விமானத்தை கண்டுபிடிக்கும் பணியானது முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. விமானத்தை தேடும் பணியில் இரண்டு ஹெலிகொப்ர்கள் களமிறக்கப்பட்டு உள்ளன.

இதுவரையில் விமானமானது கண்டுபிடிக்கப்படவில்லை, என்று போகாரா விமானநிலைய அதிகாரி யோகேந்திர குமார் கூறியுள்ளார். இவ்விவகாரம் தொடர்பாக முழுமையான தகவல்கள் வெளியாகவில்லை.



விமானம் புறப்பட்டு சென்ற சுமார் 18 நிமிடங்களில் விமான நிலைய கட்டுப்பாட்டை இழந்து மாயமாகியுள்ளது. விமானம் செல்லும் இரண்டு விமான நிலையங்கள் இடையே எந்தவொரு விமான இறங்குதளமும் கிடையாது. ஹெலிகொப்டரில் விமானத்தை தேடும் பணியானது முழு வீச்சில் நடைபெற்று வருகிறது, இருப்பினும் மோசமான வானிலையின் காரணமாக பணியில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விமானம் விபத்துக்குள் சிக்கியிருக்கலாம் என்ற அச்சமும் எழுந்து உள்ளது. (இ)

# புகலிடம் தேடி வந்த அகதிகள் விரட்டியடிப்பு

(எதென்ஸ்)

உள்நாட்டுப்போர் நடந்து வரும் ஆப்கானிஸ்தான், சிரியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து துருக்கி வழியாக கிரீசுக்கு அகதிகள் வந்தவண்ணம் உள்ளனர். அங்கிருந்து அவர்கள் பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கு செல்கின்றனர்.

ஆனால் மாசிடோனியா அதிகாரிகள், அகதிகளை கடந்த சில நாட்களாக கட்டுப்படுத்துகின்றனர். அகதிகளிடம் கடவுச்சீட்டு உள்ளிட்ட ஆவணங்கள் கேட்டு அவர்கள் கெடுபிடி செய்கின்றனர்.

இந்த நிலையில் கிரீஸ் மாசிடோனியா எல்லையில் சுமார் ஆயிரத்து 200 அகதிகள் குவிந்தனர். ஆப்கானிஸ்தானை சேர்ந்த அவர்கள் அங்குள்ள இடோமெனி பகுதியில் உள்ள புகையிரத பாதைகளில் அமர்ந்திருக்கிற பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது.

புகலிடம் கேட்டு வந்த அவர்களை கிரீஸ் பொலிஸ் படையினர் நேற்று முன்தினம் விரட்டியடிக்க தொடங்கினர். இது அகதிகள் மத்தியில் மிகுந்த வேதனையை ஏற்படுத்தியுள்ளது. (இ)

# வின்ஸ்டன் புயலால் 36 பேர் உயிரிழப்பு



பிஜி தீவை கடந்த சனிக்கிழமை கடும் புயல் சூறையாடியது. வின்ஸ்டன் என்ற இந்த புயலுக்கு இதுவரை அங்கு 36 பேர் உயிரிழந்து உள்ளனர். பசிபிக் பெருங்கடலின் தென்பகுதியில் சுமார் 300 தீவுகளைக் கொண்ட பிஜி நாட்டில் மணிக்கு 230 முதல் 325 கிலோ மீற்றர் வேகத்தில் வீசிய சூறாவளி காற்றால் மரங்கள், மின்கம்பங்கள் சாய்ந்தன. நூற்றுக்கணக்கான வீடுகள் தரைமட்டமாகிப் போய் கிடக்கின்றன. மேலும் பல இலட்சம ஏக்கரில் விளைவிக்கப்பட்டிருந்த உணவுப் பயிர்களும் நாசமடைந்தன.

ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து உள்ளனர். அவர்கள் அனைவரும் நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் தேங்கி நிற்கும் அசுத்த நீரில் இருந்து உருவாகும் நோய்க்கிருமிகளால் மக்களுக்கு தொற்றுநோய்கள் பரவாதபடி, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் சுகாதாரத்துறை பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். (இ)

# ஆஸியிலிருந்து வந்த 16 இலங்கையர்கள் கைது

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா சென்றமையால் அந்நாட்டு விசேட விமானத்தின் மூலம் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட 16 இலங்கைப் பிரஜைகளை, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வு அதிகாரிகள், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள், கடந்த 2012ஆம் ஆண்டு சட்டவிரோதமான முறையில் படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர்.

வாழைச்சேனை, உடப்பு, மட்டக்களப்பு, சிலாபம், வென்னப்புவ, களுவாஞ்சிக்குடி மற்றும் ஆண்டிமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 29, 33 மற்றும் 40 வயதுக் குட்பட்டவர்களே இவ்வாறு அவுஸ்திரேலியாவிலிருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

# நுகர்வோர் விலைச்சுட்டெண் 1.1 சதவீதத்தினால் வீழ்ச்சி

இவ்வாண்டு ஜனவரி மாதத்துக்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் கடந்த மாதச் சுட்டெண்ணுடன் ஒப்பிடுகையில் 1.1 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது என தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தொகை மதிபபு புள்ளிவிபரத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே.சத்தரசிங்ஹ வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கான தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் 112.0 என மதிப்பிடப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாத நுகர்வோர் விலைச் சுட்டெண் பெறுமதியானது 113.2 ஆக மதிப்பிடப்பட்டது. எனவே கடந்த மாதத்துடன் ஜனவரி மாதச் சுட்டெண்ணை ஒப்பிட்டு நோக்கும் போது 1.1 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது.

இது உணவுப் பொருட்களின் 1.03 சதவீத மற்றும் உணவல்லா பொருட்களின் 0.02 சதவீத வீழ்ச்சியினாலேயே ஏற்பட்டதொன்றாகும். இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் மரக்கறி, பச்சை மிளகாய், பெரிய வெங்காயம், தேசிக்காய், உருளைக்கிழங்கு, தேங்காய், அரிசி, சின்ன வெங்காயம், பால்மா, என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே உணவுப் பொருட்களின் பெறுமதி வீழ்ச்சிக்கு காரணமாகும்.

எனினும் மீன், கருவாடு, சீனி, முட்டை, மைசூர் பருப்பு, மாம்பழம், வாழைப்பழம், தேங்காய் எண்ணெய், மிளகாய்த்தூள், என்பவற்றின் விலைகளில் கடந்த மாதத்துடன் ஒப்பிடும்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த டிசெம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், 2016 ஜனவரி மாதத்துக்கான உணவல்லா பொருட்களின் பெறுமதி 0.02 சதவீத வீழ்ச்சியினை காட்டுகின்றது. இதற்கான பிரதான காரணமாக போக்குவரத்து கொள்ளப்படுகின்றது.

கடந்த மாதத்துடன் ஒப்பிடும் போது விமானக் கட்டணத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக போக்குவரத்து பிரிவில் வீழ்ச்சி ஏற்பட்டது. அற்கோல் பானங்கள், புகையிலை, மற்றும் போதைவஸ்து மற்றும் உடையும் காலணியும் பிரிவில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்படுகிறது எனவும் அவ் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. (இ)

# இரண்டு நூல்களின் வெளியீடு

மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் வெளியீடுகளான ஸ்ரீலேகா பேரின்பகுமாரின் நாடக எழுத்துருக்கள் அடங்கிய கிணற்றங்கரையும், சிறுவர் கதையான மயில் இறகு ஆகிய இரண்டு நூல்களின் அறிமுக நிகழ்வானது மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவர் சு.சுந்தரசிவம் தலைமையில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (28.02. 2016) பி.ப.4 மணியளவில் பண்டத்தரிப்பு காலையடி, மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் உள்ளரங்கில் நடைபெறவுள்ளது. (இ

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-24.02.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.33 | 146.35 |
| பவுண்ட் | பிரிட்டன் | 198.26 | 205.32 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 155.66 | 161.87 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 142.40 | 148.33 |
| டொலர் | கனடா | 102.46 | 106.62 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 101.43 | 106.21 |
| டொலர் | சிங்கப்பூர் | 100.69 | 104.56 |
| ரூபா | இந்தியா | 2.0973 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6572 |
| குவைத் | டினார் | 480.8498 |
| ஓமான் | ரியால் | 373.7466 |
| கட்டார் | ரியால் | 39.5135 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3693 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1757 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## தமிழ்நாட்டில் இலங்கைப் போராளிகள் கைது 114

இந்த மோதலில் பவான், சிவனு ஆகிய தமிழீழ விடுதலைப்புலிகள் மரணம் அடைந்தனர். 3 பேர் காயம் அடைந்தனர்.

மேற்கண்ட தகவலைச் சென்னையில் உள்ள தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் இயக்கம் தெரிவித்தது.

இந்த நிகழ்ச்சி பற்றி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருந்ததாவது:-

தமிழ்நாட்டில் சென்னையில் பொலிசார் தமிழீழ விடுதலைப்புலி இயக்கங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினால் ஊக்கம் பெறப்பட்ட இலங்கை இராணுவத்தினர் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

விடுதலைப்புலிகள் மீது நடத்தப்படும் தாக்குதலைத் தீவிரப்படுத்த வேண்டாம் என்று இலங்கை அரசுக்கு இந்தியா விடுத்த எச்சரிக்கையை உதாசீனப்படுத்துவதாகவும் உள்ளது.

இவ்வாறு அந்த இயக்கம் கருத்து தெரிவித்துள்ளது.

**இராணுவத்தினர் சாவு**

திருகோணமலை வட்டாரத்தில் விடுதலைப்புலிகளின் முகாம்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர். ஓர் இடத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) நடத்திய எதிர்த் தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பெங்களூரில் நடந்த தெற்கு ஆசிய தலைவர்கள் மாநாட்டில் (சார்க்) கலந்துகொண்ட பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி முக்கிய பேச்சு நடத்தினார்கள். இது தொடர்பாக எம்.ஜி.ஆருடன் ஆலோசனை நடத்துவதற்காக அவருக்கு ராஜீவ் காந்தி அவசர அழைப்பு அனுப்பினார். எம்.ஜி.ஆர். தனி விமானத்தில் பெங்களூர் விரைந்தார்.

தெற்கு ஆசிய தலைவர்கள் மாநாடு, 1986 ஆம் ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி பெங்களூரில் தொடங்கியது.

இதில் பிரதமர் ராஜீவ் காந்தி, ஜெயவர்த்தனா (இலங்கை ஜனாதிபதி), ஜுனேஜோ (பாக்.பிரதமர்), கையூம் (மாலைதீவு ஜனாதிபதி), எர்ஷாத் (வங்காளதேச ஜனாதிபதி), வாங்சுக் (பூட்டான் மன்னர்), பிரேந்திரா (நேபாள மன்னர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**ஜெயவர்த்தனவுடன் பேச்சு**

ஜெயவர்த்தனா பெங்களூர் வந்ததுமே அவரை விமான நிலையத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி 1 1/2 மணி நேரம் பேச்சு நடத்தினார்.

பிறகு ஜெயவர்த்தனா தங்கியிருந்த விண்ட்சர் மானர் ஓட்டலில் இருவரும் இரண்டாவது முறையகச் சந்தித்து பேசினார்கள்.

**எம்.ஜி.ஆருக்கு அழைப்பு**

ஜெயவர்த்தனவுடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றிய விவரங்களை முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்குத் தெரிவிக்க ராஜீவ்காந்தி விரும்பினார்.

ஏற்கனவே இலங்கை அனுப்பிய சமரசத் திட்டம் பற்றி இலங்கைத் தமிழ் போராளி தலைவர்களுடன் எம்.ஜி.ஆர். பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அப்போது விடுதலைப் புலிகள் தெரிவித்த கருத்துக்களையும் அறிய ராஜீவ் காந்தி விரும்பினார்.

எனவே, எம்.ஜி.ஆரை அழைத்துப் போக, பெங்களூரில் இருந்து தனி விமானம் அனுப்பப்பட்டது.

எம்.ஜி.ஆர். தன்னுடன் உணவு அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரனையும் பெங்களூருக்கு அழைத்துச் செல்ல விரும்பினார். பண்ருட்டி ராமச்சந்திரன் சில நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள திருச்சி சென்றிருந்தார். முதலமைச்சரிடம் இருந்த தகவல் வந்ததும் அவர் சுற்றுப் பயணத்தை ரத்து செய்தார்.

பெங்களூரில் இருந்து அனுப்பப்பட்ட தனி விமானம் முதலில் திருச்சிக்குச் சென்று பண்ருட்டி ராமச்சந்திரனை அழைத்துக்கொண்டு சென்னை வந்தது. பிறகு காலை 8.15 மணிக்கு அதே விமானத்தில் எம்.ஜி.ஆரும் பண்ருட்டி ராமச்சந்திரனும் பெங்களூர் சென்றனர்.

**சிதம்பரம்**

பெங்களூர் சென்றதும் எம்.ஜி.ஆரை மத்திய வெளிநாட்டு இலாகா இணை அமைச்சர் நட்வர்சிங், உள்நாட்டு இலாகா இணை அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோர் சந்தித்தனர். மூவரும் ஒரு மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

சமரசத் திட்டம் பற்றி போராளி தலைவர்களின் கருத்துக்களை மத்திய மந்திரிகளிடம் எம்.ஜி.ஆர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சு வார்த்தையின்போது பண்ருட்டி ராமச்சந்திரன் உடன் இருந்தார்.

**3 ஆவது சந்திப்பு**

இதற்கிடையே நந்திமலையில் தங்கியிருந்த ஜெயவர்த்தனவைப் பகல் உணவுக்குப் பிறகு ராஜீவ்காந்தி சந்தித்துப்பேசினார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி, கடந்த 2 நாட்களில் இவர்கள் சந்திப் பது இது 3 ஆவது முறையாகும்.



(தொடரும்)

# சபாநாயகருக்கு மரண அச்சுறுத்தல் விசாரணையை இடைநிறுத்தியது ஏன்?

## வாசுதேவ எம்.பி.கேள்வி



(கொழும்பு)

**சபாநாயகருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பாக விசாரணைகள் ஏன் இடைநிறுத்தப்பட்டுள்ளன? அச்சம்பவத்துடன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் அவரது நண்பரும் தொடர்புபட்டுள்ளமை கண்டறியப் பட்டுள்ளமைதான் அதற்கான காரணமாவென பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சபையில் கேள்வியெழுப்பினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினராகிய நாம் எமது சுயாதீனமான செயற்பாட்டுக்கு அங்கீகாரம் வழங்க வேண்டும். எம்மை ஏற்றுக்கொள்ள வேண்டுமென சபாநாயகராகிய உங்களிடம் கோரிக்கை விடுத்த போது உங்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக அறிவித்தீர்கள்.

அதன்போது எமது சகபாடியான டலஸ் அழகப்பெரும எம்.பி. தங்களுக்கு விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு இந்த சபையில் அதனுடன் தொடர்புபட்டவர்கள் யார் என்பதை பகிரங்கப் படுத்தப்பட வேண்டுமெனக் கோரினார்.

ஆனால் தற்போது வரையில் அது தொடர்பிலான எந்த விதமான விசாரணைகள் நடைபெறுகின்றன. யார் தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்பது பகிரங்கப்படுத்தப்படவில்லை.

தங்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலானது முழுப் பாராளுமன்றத்திற்கும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகவே நாம் பார்க்கின்றோம். அவ்வாறிருக்கையில் தற்போது வரைவில் ஏன் அச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை பகிரங்கப் படுத்தாது இருக்கின்றீர்கள்?.

தாங்கள் அச்சுறுத்தலுக்கு மன்னிப்பளித்து விட்டதாகவும் பத்திரிகைச் செய்தியொன்று உள்ளது.

இதன்போது குறுக்கீடு செய்த சபாநாயகர், இல்லை அவ்வாறான தகவல் தவறானது. நான் யாருக்கும் மன்னிப்பு அளிக்கவில்லை என்றார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட வாசுதேவ எம்.பி நீங்கள் அவ்வாறு மன்னிப்பளிக்கவில்லை என்றால் ஏன் விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அந்தச் சம்பவத்துடன் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தொடர்புபட்டுள்ளமையாலா? அவ்வாறு விசாரணைகளை இடைநிறுத்தியுள்ளீர்கள்? என்றும் கேள்வியெழுப்பினார். (இ)

# அரசியல் அமைப்பு மறுசீரமைப்பில் ஐ.தே.க-சு.கவுக்குள் முரண்பாடு

## ஜே.வி.பி.சுட்டிக்காட்டு

அரசியலமைப்பு மறுசீரமைப்பு ஊடாக பிரதமருக்கு அதிகூடிய அதிகாரங்களை வழங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஏனைய கட்சிகளின் எம்.பிக்களும் எதிர்ப்பு தெரிவித்ததாலேயே அரசியலமைப்பு மறுசீரமைப்புப் பணிகளில் ஐ.தே.க. அரசு பின்வாங்கியது என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பை கையிலெடுத்து நாட்டின் முக்கிய பிரச்சினைகளை அரசு தீர்க்காது காலங்கடத்துகின்றது என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு பேரவையாக மாற்றுவதற்கான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்து குற்றஞ்சாட்டிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

“பிரதமருக்கு தன்னிச்சையான அதிகாரங்களை வழங்கக்கூடிய வகையில் அரசமைப்பு மறுசீரமைப்பை அரசு செய்ய முயற்சித்தது. இதற்கு ஏனைய (ஐ.தே.க. தவிர்ந்த) எம்.பிக்களும், அரசிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவித்ததால் அரசமைப்பு மறுசீரமைப்புப் பணிகளில் இருந்து அரசு (ஐ.தே.க.) பின் வாங்கியது. அரசியலமைப்பு மறுசீரமைப்பில் அரசின் முழு இணக்கப்பாடும் இல்லை என்பது எமக்கு இதனூடாக தெரிகிறது.

அரசியலமைப்பு மறுசீரமைப்பு என்ற விடயத்தைக் கையில் எடுத்துக்கொண்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாமல் அரசு பிற்போடுகின்றது. மேலும் உள்ளூராட்சி சபைத தேர்தலையும் பிற்போடுகின்றது. இது முழு தவறாகும்.

புதிய அரசியலமைப்பு தேசிய சமத்துவம், ஒருமைப்பாடு, சமய நல்லிணக்கம் என்பவற்றை ஏற்படுத்தக் கூடிய அத்தியாயங்களை உள்வாங்க வேண்டும்.

தற்போதைய அரசியலமைப்பில் சிங்களம் அரசகரும மொழி. தமிழும், ஆங்கிலமும் அரசகரும மொழியாகக் கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழும் அரசகரும மொழி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ”மும்“ என்ற வார்த்தையினூடாக அந்த (தமிழ்) மக்கள் இரண்டாம் தரத்தவராக எண்ணுகின்றனர். எனவே, புதிய அரசமைப்பில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் அரசகரும மொழிகள் என்று உள்வாங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (இ)

# பௌத்தத்தை போன்றே எமக்கு இந்து மத நம்பிக்கையும் உண்டு

## டிலான் பெரேரா தெரிவிப்பு



பௌத்த மதத்தைப்போனறே எமக்கு இந்து மத நம்பிக்கையும்காணப்படுகின்றது என இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்தத்தைப் போன்றே இந்து மதத்தையும் வழிபடுகின்றோம். இதன் காரணமாகவே பந்துல குணவர்தன உள்ளிட்டவர்கள் இந்து ஆலயத்திற்கு சென்று தேங்காய் உடைத்தார்கள்.

இந்த நாட்டில் அனைத்து இன மதங்களுக்கும் பொருந்தக்கூடிய அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

அடிப்படைவாத கருத்துக்களை வெளியிடும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியின் ஊடாக தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்கள். சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டிருக்கா விட்டால் அவர்களுக்கு முகவரியிருந்திருக்காது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படுவதற்கு எடுக்கும் முயற்சியின் போது முன்னொருபோதும் இல்லாத வகையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படக்கூடிய வகையில் அரசியல் அமைப்பு காணப்பட வேண்டும்.

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவது குறித்து டலஸ் அழகப்பெரும கருத்து வெளியிட்டிருந்தார். இது நாடாளுமன்ற ஹென்சார்டிலும் காணப்படுகின்றது.

மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் நாலந்த எல்லாவலவும் தமிழில் தேசிய கீதம் பாடப்பட வேண்டுமென கனவு கண்டார்.

இம்முறை தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடப்பட்டது என டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## மற்றவர்களின் நேரம்

நம் நேரத்தை வீணாக்க நமக்கு உரிமை இருக்கிறது. ஆனால்,அப்படி மற்றவர்களின் நேரத்தை வீணாக்க உரிமை கிடையாது.எனவே நம் நேரத்தை விட மற்றவர்களின் நேரம் பொன்னானது.

தெருவிலாகட்டும், பொது இடங்களில் ஆகட்டும், வீட்டில் ஆகட்டும் எங்கும் சுருக்கமாகவும் உடனடியாகவும் விடயத்திற்கு வருவது போலவும் பேச வேண்டும்.அப்போதும் கூட நீங்கள் பேச எடுத்துக் கொளளும் நேரத்தைக்காட்டிலும் எதிராளிக்கு அதிகம் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.அப்படி ஒரு வாய்ப்பை நீங்கள் தொடர்ந்து அளிப்பீர்களானால், உங்களை அனைவரும் விரும்பத் தொடங்குவார்கள். உயர்வாக எண்ணுவார்கள் உதவுவார்கள்.

கால்மணி நேரம் அதிக பட்சமாக அரைமணி நேரம் அதற்கு மேல் சுவாரஸ்யமாக என்ன பேசிவிட முடியும்?போய்வருகிறேன் என்று சொல்லிப் பாருங்கள்.உடனே அவர்கள் முகத்தில் புன்னகை மலர்ந்தால், ஏதோ பயங்கரப்பிராணியிடம் இருந்து தப்பித்ததைப் போன்ற உணர்ச்சி வெளிப்பட்டால், நீங்கள் எப்பொழுது போய்வருகிறேன் என்று சொல்லுவீர்கள் என்பது அவர்களது மனப் பூர்வமான ஆசையாக இருந்திருக்கும்.மாறாக இருங்கள் போகலாம் என்றால் மட்டுமே நீங்கள் மேலும் சற்று நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மணிக்கணக்கில் எவ்வளவு சுவாரஸ்யமான விடயங்களை அன்று பேசிக் கொண்டிருந்தாலும் , மறுநாள் காலை நீங்கள் அந்தப் பக்கமாகப் போனால்,அவர்கள் உங்களைப் பார்த்துவிட்டுக் காத தூரம் ஓடும் அளவிற்கோ உங்கள் பார்வையில் பட்டுவிடக்கூடாதே என்று அவர்கள் கவலைப்படும் அளவிற்கோ தான் நிலைமை நிலவும்.

நான் உங்களது நேரத்தை வீணடிக்கிறேனா? உங்களுக்கு ஏதும் அவசரமா? என்பன போன்ற கேள்விகளை நாம் இடை இடையே கேட்டுக் கொள்ள வேண்டும்.இத்தகைய கேள்விகள் நாம் மற்றவர்களைத் தொல்லைப்படுத்துவதை விரும்பவில்லை என்பதை உரியவர்களுக்கு உணர்த்துவதோ? மேலும் ஒரு நன்மையையும் தருகிறது. அதாவது ,அவர்கள் இல்லை ஆமாம் என்று சொல்வதன் முகக் குறிப்பையும் வேகத்தையும் வைத்து ,நாம் ஒரு முடிவுக்கு வந்து விரைவில் கழற்றிக் கொள்ள வசதியாக இருக்கும்.

ஒருவர் வீட்டிற்குப் போய் நாம் தங்க வேண்டி வருகிறது என்று வைத்துக் கொள்வோம். நம்முடைய வரவால் அவருடைய வழக்கமான வாழ்க்கைப் பொழுது வீணாகக் கூடாது என்பதிலும் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமானால் மற்றவர்களின் நேரத்தை அவர்களது பயனுக்காக -அவர்களது நன்மைக்காக நீங்கள் எடுத்துக் கொள்ளலாம் .ஆனால் உங்கள் நன்மைக்காக எடுத்துக் கொள்ளக் கூடாது.

இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் உங்களை அவர்கள் வரவேற்கும் முறை வாங்க வாங்க......அல்லது ஹலோ... ஹலோ... ஹலோ... என்று தடபுடலாக இருக்கும். இல்லையென்றால்-அவர்களது வரவேற்பு வரவேற்பாக இருக்காது. மாறாக, வெறுப்பின் பிரதிபலிப்புக் கலந்த சம்பிரதாயமான வரவேற்பாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

# கோவில் உண்டியலை உடைத்து பணம் திருடிய இருவர் கைது

(கொழும்பு)

கோவில் உண்டியலை உடைத்து பணம் திருடிய 15 வயது சிறுவன் மற்றும் 20 வயது இளைஞன் ஒருவனையும் தலவாக்கலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேலும் இவர்கள் தலவாக்கலை பிரதேசத்திலுள்ள நான்கு கோவில்களின் உண்டியல்களை உடைத்து இவ்வாறு பணம் திருடியுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்ததாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்த திருட்டு சம்பவத்துடன் குறித்த 15 வயது சிறுவனின் தந்தையும் தொடர்புபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களால் வழங்கப்பட்ட இந்த முறைப்பாட்டிற்கு அமைய குறித்த சிறுவனையும்,மேலும் 20 வயதான மற்றுமொரு இளைஞனையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, குறித்த சிறுவனின் தந்தை அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(இ)



# சிறுவர் அரங்கம்

1367

## நோ.. நோ.. மயிலக்கா!

...தன்னுடைய தந்திரம் பலிக்காததை அறிந்த குள்ள நரி, புறாவைப் பார்த்து, "அழகான புறாவே! உனக்கு இந்த ரகசியத்தைச் சொன்னது யார்?" என்று கேட்டது.

குள்ளநரியினால் இனி தன்னை ஒன்றும் செய்ய முடியாது என்பதைப் புரிந்துக் கொண்ட புறா, சந்தோஷ மிகுதியால் கொஞ்சமும் யோசிக்காமல், "அதோ நிற்கிறதே, அந்த மயில் தான் சொல்லிக் கொடுத்தது!" என்று கூறியது.

உடேன குள்ளநரி, மயிலைப் பழி தீர்த்துக் கொள்ளும் நோக்கில் அதன் அருகே சென்று, "அழகான மயிலே! புறாவு க்கு இப்படியொரு திட்டத்தை நீ கூறியுள்ளாய், உன்னுடைய அறிவுக் கூர்மையை நான் மிகவும் பாராட்டுகிறேன்," என்று பேச்சை ஆரம்பித்தது.

அப்போது...!

திடீரென்று சுழற்காற்று வீசியது. காற்றில் புழுதி பறந்தது. புழுதி தன் கண்களில் விழாமல் இருக்க, குள்ளநரி முகத்தை வேறு



பக்கம் திருப்பிக் கொண்டது. சற்று நேரத்தில் காற்று நின்று, புழுதியும் ஓய்ந்து விட்டது.

அப்போது மயிலின் அருகே சென்ற குள்ளநரி, "அழகான மயிலே! இதுபோல, காற்றில் புழுதி வீசும் வேளையில், நீ என்ன செய்வாய்?" என்று கேட்டது.

"என் முகத்தை இறக்கைகளின் அடியில் புதைத்துக் கொள்வேன்," என்று மயில் கூறியது. "அப்படியா? அது எப்படி முடியும்? உன் இறக்கைகளுக் கும் முகத்திற்கும் இடையில் இடைவெளி அதிகம் இருக்கி றதே," என்று சொல்லி ஆச்ச ரியத்துடன் கூறியது நரி.

"செய்து காட்டட்டுமா? என்ற கூறியவாறே, மயில் அவ்வாறு செய்யத் தொடங்கியது. மயில் தனது முகத்தை இறக்கைகளுக்குள் புதைக்கும் போது, அதனைக் கவ்விப் பிடிக்கக் குள்ளநரி சமயம் பார்த்து நின்றுகொண்டிருந்தது.

அப்போது-

அங்கே உருவாகப் போகும நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த புறா, "மயிலக்கா! அப்படிச் செய்யாதீங்க. நரி உங்களைக் கவ்விப் பிடிக்கத் திட்டம் போட்டுள்ளது... அதோ அங்கே காட்டு நாய்கள் ஓடி வருவதைப் பாருங்கள்," என்று கத்தியது.

காட்டு நாய்கள் என்ற குரல காதில் விழுந்த அடுத்த நிமிடம்... தப்பித் தோம், பிழைத்தோம் என்று அங்கிருந்து ஓட்டம் எடுத்தது குள்ள நரி. தனது உயிரைக் காப்பாற்றியும், தனது முட்டாள் தனத்தைத் தனக்கும் உணர்த்திய புறாவுக்கு நன்றி சொல்லிவிட்டு, அங்கிருந்து புறப்பட்டது மயில். (முற்றும்)

## பாட் போய் சூரியன்!

முன்னொரு காலத்தில் ஒரு தாய் தன் இரு மகன்களுடன் ஒரு காட்டின் அருகில் வசித்து வந்தாள்.

மூத்த மகன் சூரியன் மிகவும் சுறுசுறுப்பாகவும், துடுக்காகவும் இருப்பான்.

இளையவனோ நிதானமாகவும், அமைதியாகவும் இருப்பான்.

சூரியன் தன் தம்பியைச்



சீண்டி விட்டும், சிரமம் கொடுத்தும் விளையாடி மகிழ்ந்தான்.

சூரியனுடைய விளையாட்டை சிரித்த முகத்துடன் ஏற்று, சந்திரன் அண்ணனிடம் அன்பாக இருப்பான்.

சூரியன் வெளியில் சுற்றச் சென்றுவிடுவான். வீட்டைப் பற்றி கவலைப்பட மாட்டான்.

ஆனால், சந்திரனோ தன் அன்னைக்கு உதவியாக இருப்பான்.

ஒருநாள் சந்திரன் தன் தாயின் விருப்பப்படி வீட்டை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டான்.

வேலைகள் செய்த அவன் உடலில் அழுக்கு படிந்து விட்டது. வேலைகள் முடிவுறும் சமயம் வெளியே அலைந்து திரிந்த சூரியன், வியர்வை கொட்ட வீட்டிற்கு வந்தான்.

அன்னை இருவரையும் அருகில் இருந்த குளத்திற்குச் சென்று குளித்துவிட்டு வருமாறும், வந்ததும் சாப்பிடலாம் எனக் கூறினாள்.

அத்துடன் சூரியனிடம், "உன் தம்பி சந்திரன் வீட்டு வேலைகள் செய்ததால் உடலில் அழுக்கு படிந்துள்ளது. அவனை நன்றாக தேய்த்து சுத்தமாக குளிப்பாட்டி அழைத்து வா!" என்று தெரிவித்தாள்.

சகோதரர்கள் இருவரும் குளத்திற்கு குளிக்கச் சென்றனர். சூரியன் குளத்தில் குதித்து விளையாடிய பின்னர் சந்திரனிடம்,... (தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

02.2016
25

- 1797 - வில்லியம் டேட் தலைமையிலான 1000-1500 போர் வீரர்களைக் கொண்ட படைகள் தமது பிரித்தானியா மீதான கடைசிப் படையெடுப்பை அடுத்து சரணடைந்தனர்.
- 1836 - சாமுவேல் கோல்ட் சுழல் துப்பாக்கிக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1837 - தோமஸ் டெவன்போர்ட் மின்சாரத்தில் இயங்கும் மோட்டாருக்கான அமெரிக்கக் காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1921 - ஜோர்ஜியாவின் தலைநகர் திபிலீசி ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் படைகளினால் கைப்பற்றப்பட்டது.
- 1925 - சோவியத் ஒன்றியத்திற்கும் ஜப்பானுக்கும் இடையில் தூதரக உறவு ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் குடியுரிமையைப் பெற்றார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: துருக்கி ஜேர்மனி மீது போரை அறிவித்தது.
- 1948 - செக்கோசிலவாக்கியாவின் ஆட்சியை அந்நாட்டு கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றியது.
- 1956 - சோவியத் தலைவர் நிக்கிட்டா குருசேவ் ஜோசப் ஸ்டாலினின் ஆட்சிக்கால நிர்வாகத்தைக் கண்டனம் செய்தார்.
- 1980 - சூரினாமில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.
- 1986 - பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பேர்டினனட் மார்க்கோஸ் மக்கள் புரட்சியை அடுத்து ஆட்சியைக் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார். கொரசோன் அக்கீனோ ஜனாதிபதியானார்.
- 1988 - மாதிரி அணுவாயுதத்தைச் சுமந்து சென்ற இந்தியாவின் முதல் ஏவுகணை பிருதிவி ஏவப்பட்டது.
- 2006 - உலகின் மக்கள் தொகை 6.5 பில்லியனைத் தாண்டியது.
- 2007 - ஈசாவின் ரோசெட்டா விண்ணுளவி (Rosetta Space Probe) முதன் முதலாக செவ்வாய்க் கோளை 150 மைல் உயரத்தில் மிக அருகே சுற்றிவந்து அதன் சுழல்வீச்சில் (Mars Fly-by) அப்பால் எறியப்பட்டது.

**பிறப்புகள்**

- **1915 - எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் (இ. 2006)**

**இறப்புகள்**

- 1950 - ஜோர்ஜ் மினோட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1885)
- 1971 - தியோடர் சிவெட்பேர்க், நோபல் பரிசு பெற்ற சுவீடன் வேதியியலாளர் (பி. 1884)
- 1999 - கிளென் சீபோர்க், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாளர் (பி. 1912)
- 2004 - நாகிரெட்டி, இந்திய திரைப்பட தயாரிப்பாளர், பத்திரிகையாளர் (பி. 1912)

# இவ்வருட மத்தியில் 'எட்கா' ஒப்பந்தம்

## அதிர்ஷ்டமுள்ள குழந்தையே பிறக்கவுள்ளது–பிசாசு அல்ல

(கொழும்பு)

**இந்திய அரசுடனான எட்கா ஒப்பந்தம் இவ்வருட மத்தியில் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும், இரகசியமாக எந்த ஒப்பந்தமும் இடம்பெற மாட்டாது என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.**



இறுதி ஒப்பந்த வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு சகல தரப்பினரினதும் கருத்துக்கள் பெறப்படும் என்றும் பிரதமர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்திய குழுவுடன் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இறுதி வரைபு தயாரிக்கப்படும் புதிய ஒப்பந்தம் குறித்து பாராளுமன்றத்தை அறிவூட்டவிருக்கிறோம். பிறக்காத குழந்தையின் ஜாதகத்தை குறை கூறுவது நியாயமல்ல. தாம் கற்பனையாக உருவாக்கிக் கொண்ட பிசாசைக் காண்பித்து மக்களை ஏமாற்றுவது உகந்ததல்ல. ராஜயோகம் உள்ள குழந்தையையே நாம் பிரசவிக்கவுள்ளோம்.

இறுதி ஒப்பந்த வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் மக்கள் பார்வையிடக்கூடிய பொதுவான ஆவணமாக அமையும். இந்த ஆவணத்தை ஆராய்ந்து கருத்துக்களை முன்வைக்குமாறு கோருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பிக்குகளை இழிவுபடுத்தும் பிரதியமைச்சர் ராமநாயக்க

## சிசிர எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, உடுவே தம்மாலோக்க தேரர் உள்ளிட்ட பௌத்த பிக்குகளை இழிவுபடுத்தி ஊடகங்களில் கருத்து வெளியிட்டு வருகின்றார் என நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறு ஊடகங்களில் பௌத்த பிக்குகளை தரக்குறைவாக பேசுவதும் இழிவுபடுத்துவதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

பௌத்தர் அல்லாத ரஞ்சன் ராமநாயக்க இவ்வாறு பௌத்த பிக்குகளை இழிவுபடுத்துவது வருத்தமளிக்கின்றது.

ரஞ்சன் ராமநாயக்கவிற்கு இன மத பேதம் பாராட்டாது பௌத்தர்களும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்திருந்தனர்.

இந்த விடயத்தை ரஞ்சன் ராமநாயக்க மறந்து விடக் கூடாது.

இதற்கு முன்னரும் களனி பொல்லேகல மானேவல்வத்த விஹாரையை அண்டிய தியான கூடமொன்றிற்குள் பிரவேசித்து ரஞ்சன் ராமநாயக்க குழப்பம் விளைவித்திருந்தார்.

பௌத்த பிக்குகள் மற்றும் பௌத்தர்களுக்கு எதிராக செயற்படுவதனை இத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டுமென ரஞ்சன் ராமநாயக்கவிடம் கோருகின்றேன் என சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார். (இ)

# சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியைக் கோரும் கூட்டு எதிர்க்கட்சி

சுதந்திரக் கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாப்பதாயின் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி கூட்டு எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கூட்டு எதிர்க் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு தொடர்ந்தும் தெரிவித்துள்ளதாவது,

கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாப்பதாயின் சுதந்திரக்கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளில் இரண்டில் ஒரு கட்சியின் பொதுச் செயலாளர் பதவி கூட்டு எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும்.

தற்போதைக்கு கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பெயரை இதற்காக தெரிவு செய்து இரண்டொரு தினங்களில் ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்யவுள்ளோம்.

சுதந்திரக் கட்சி பிளவுபட்டால் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது அது கட்சிக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தி விடும். அதனைத் தடுக்கும் வகையில் கட்சியின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை கூட்டு எதிர்க்கட்சியினரால் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு முன்னதாக கட்சியின் பொதுச் செயலாளர் பதவியைப் பெற்று இணைந்து செயற்பட கூட்டு எதிர்க்கட்சியினர் தயாராக இருப்பதாவும் குறித்த முக்கியஸ்தர் மேலும் தெரிவித்துளளார். (இ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 643

Search for people, places and things   Nagendram   Home

ராம்ஜிநாத்




பிரசாந்த்




அருள்ராஜ்



ஜீவி




பிரகாஷ்




நவநீதன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பொறுப்புக்கூறல் மட்டுமே பழைய வடுக்களை ஆற்றும்





(நேற்றைய தொடர்ச்சி...)

ஆனால் நாங்கள் சந்தித்த சில தமிழ் மக்கள், விடுதலைப் புலிகள் தோற்கடித்த தைத் தொடர்ந்து சிங்களவர்களால் போர் வெற்றி கொள்ளப் பட்டமை தொடர்பாக அதிருப்தியடைவதாகத் தெரிவித்தனர்.

தேசிய மீளிணக்கப் பாட்டை விட, முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும் புலிகள் அழிக்கப்பட்ட பின்னர் தமிழ் மக்கள் மீது சித்திரவதை களைக் கட்டவிழ்ப்ப தையே நோக்காகக் கொண்டு செயற்பட்ட னர்.

தமிழர் வாழிடங் களில் இராணுவத்தி னர் எண்ணற்ற பல சோதனைச் சாவடி களை அமைத்துள்ள னர். தமிழ் மக்களின் அன்றாடச் செயற்பாடு களைக் கண்காணிப் பதற்காகவே இவ்வா றான சோதனைச் சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளன.

தாங்கள் பலவந்த மாகக் கைதுசெய்யப்பட் டும் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டு விடுவோமோ என்கின்ற அச்சத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்தனர்.

வெள்ளைவான்கள் மூலம் புலிச் சந்தேக நபர்கள் கடத்தப்பட்டதாக வும் பொது மக்களின் வாகனங்கள் படை களால் பயன்படுத்தப்பட்ட தாகவும் மக்கள் தெரி வித்தனர். கைதுசெய் யப்பட்டு தடுத்து வைக் கப்பட்ட தமிழர்கள் பலர் மிகவும் கொடூரமாக சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் எம்மிடம் தெரிவித்தனர்.

போரின் போது இறந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூருவதற்கும் தடைவிதிக்கப்பட்டது.

இராணுவத்தினர் இறந்த தமது படை யினரை நினைவுகூரும் அதேவேளையில், நாங்கள் போரின் போது இறந்த எமது உறவு களை நினைவுகூரு வதற்குத் தடைவிதிக்கப் பட்டமை மிகவும் கொடு மையானது' என தமிழ்ப் பெண்மணி ஒருவர் தெரிவித்தார்.

போரால் சிதைவுற்ற தேசத்தைக் கட்டியெழு ப்புவதற்கான சிறந்த வரலாற்று முக்கியத் துவம் மிக்க வாய்ப்பை அரசாங்கம் தற்போது பெற்றுக் கொண்டுள்ளது.

ஆனால் அரசாங்க மானது பழைய போர் வடுக்களுக்குப் பொறுப் புக கூறும் பட்சத்திலேயே நாட்டை ஒன்றுபடுத்து வதற்கான முயற்சி வெற்றிபெறும்.

இலங்கையின் தமிழ் சமூகத்தைத் தவிர்ந்த ஏனைய சமூகங்கள் மத்தியில் மகிந்த ராஜபக்ஷவின் நடவடிக் கையானது அவரது செல்வாக்கின் மீது தாக்கத்தைச் செலுத்த வில்லை என்பது இங்கு நிச்சயமானது.

26 ஆண்டுகால யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டு வந்த ஆட்சியா ளர் என்ற வகையில் அவர் இலங்கையைப் பல ஆண்டுகள் ஆட்சி செய்திருக்கலாம்.

ஆனால் இவரது அரசாங்கமானது பல் வேறு ஊழல் மோசடி களில் ஈடுபட்டது. அத் துடன் அதிகாரத்துவ ஆட்சியையும் மேற் கொண்டது. இதனா லேயே ஜனவரி 2015 இல் இடம்பெற்ற ஜனாதி பதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியுற் றார். இவரது முன்னாள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மகிந்தவை எதிர்த்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட் டார்.

தற்போதைய ஜனாதி பதி கடந்த ஆட்சியில் இடம்பெற்ற பல மீறல் களைக் குறைத்துள் ளார். அத்துடன் இரா ணுவச் சோதனைச் சாவடிகளையும் இராணு வப் பிரசன்னங்களை யும் குறைத்துள்ளார்.

மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசாங்கத்தை விமர்சிப்போர் போன்ற வர்கள் மீது அரசு தலையீடு செய்வதானது தற்போது குறைந்துள்ள தாக உள்ளூர் சிவில் சமூக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

எவ்வித பிடியாணை கள் மற்றும் முன்னறி வித்தலும் இன்றி 'சட்ட ரீதியற்ற செயற்பாடுகளு க்கு' கைதுசெய்வதற் கான அனுமதியை வழங்கும் பயங்கரவா தத் தடுப்புச் சட்டத்தின் மூலம் கைது செய்யப் பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்களின் வழக்குகளை ஆராய்ந்து தீர்வெடுப் பதற்கான நடவடிக்கை யையும் அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

புனர்வாழ்வை நிறைவு செய்த சிலரை யும் இலங்கையின் தற்போதைய அரசாங் கம் விடுவித்துள்ளது. நவம்பர் 2015 இல், காணாமற் போதல்கள் தொடர்பான இரண்டு முக்கிய அரசாங்க ஆணைக்குழுக்களால் வெளியிடப்படாத அறிக் கைகள் வெளியிடப்பட் டன.

கடந்த ஆண்டின் இறுதியில், இலங்கைப் பிரதமர் மற்றும் அமை ச்சரவை உறுப்பினர் களைச் சந்திப்பதற்கான அழைப்பு மனித உரிமை கள் கண்காணிப்பகத் திற்கு விடுக்கப்பட்டது டன் அரசாங்கத்தால் நடத்தப்படும் தொலைக் காட்சி சேவையால் நேர்காணலும் மேற் கொள்ளப்பட்டது.

கடந்த பல ஆண்டு களில் முதற்தடவையாக, வடக்கு மற்றும் கொழும் பைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டா ளர்களை மனித உரிமை கள் கண்காணிப்பகம் சுதந்திரமாகச் சந்திப்ப தற்கான சூழல் உருவாக் கப்பட்டது.

நாங்கள் வடக்கிற்குப் பயணித்த போது எங் களை எவரும் நிறுத் தவோ அல்லது விசா ரணை செய்யவோ இல்லை.

அரசாங்க அலு வலகம் ஒன்றில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படும் போது அரசாங்கப் பணியாளர் கள் எழுந்து நிற்பதை நாம் அவதானித்தோம். முன்னைய ஆட்சியில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருந் தது.

இவ்வாறான முன் னேற்றங்கள் காணப் படுகின்ற போதிலும், வேதனையளிக்கின்ற சில சமிக்ஞைகள் இன்னமும் காணப் படுகின்றன.

போரின் போது மனித உரிமை மற்றும் போர் மீறல்கள் தொடர் பில் இன்னமும் பொறுப் பளிக்கப்படவில்லை என்பது மிகப்பாரிய பிரச்சினையாகக் காண ப்படுகிறது.

இவ்வாறான மீறல் களைத் தீவிரமாக விசா ரிப்பதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் மறுத்தது. போரின் போது பூச்சியப் பொதுமக்கள் இழப்புக் கைக்கொள்ளப்பட்டதாக மகிந்த ராஜபக்ஷ அறி வித்தார்.

உள்ளூர் மற்றும் அனைத்துலக மனித உரிமைக் கண்காணிப் பாளர்கள் தமிழீழ விடு தலைப் புலிகளின் ஆதர வாளர்கள் என மகிந்த அரசாங்கம் குற்றம் சுமத்தியது.

மீறல்கள் தொடர்பில் பொறுப்பளிக்க வேண் டும் என்பதை வலியுறுத் தும் அமெரிக்கா தலை மையிலான ஐக்கிய நாடுகள் மனித உரிமை கள் சபையின் இரண்டு தீர்மானங்களையும் ராஜபக்ஷ அரசாங்கம் நிராகரித்தது. 2015 இன் இறுதிப்பகுதியில், மனித உரிமைகள் சபையால் இலங்கை மீது பிறிதொரு தீர்மானம் முன்வை க்கப்பட்டது.

இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவ தாக இலங்கையின் புதிய அரசாங்கம் உறுதியளித்தது. இத்தீர்மானமானது ஒக்ரோபர் 1, 2015 இல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தீர்மானத்தில் போர்க்கால மீறல்களை விசாரணை செய்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கு வதற்கான நீதிப் பொறி முறை ஒன்று உரு வாக்கப்பட வேண்டும் என அழைப்பு விடுக் கப்பட்டது.

இதில் அனைத் துலக நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்கள் உள்ளடக்கப்பட்ட நீதிப்பொறிமுறை உருவாக்கப்பட வேண் டும் என அறிவிக்கப் பட்டது.

இதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்த போதிலும், ஜனவரி 21 இல் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவால் பி.பி.சி செய்திச் சேவை க்கு வழங்கிய நேர் காணலில், 'அனைத் துலக சமூகத்தின் தலையீடு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது' எனத் தெரி வித்திருந்தார்.

20 ஆம் பக்கம் பார்க்க...

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அணுகுமுறைகளை மாற்றவேண்டும்

## நிறைவேற்று உத்தியோகத்தர்கள் சங்கம் கோரிக்கை

கடந்த வாரம் பல்கலைக்கழகங்களின் தொழிற் சங்கங்கள் மேற்கொண்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கமும் இணைந்து கொண்டிருந்தது. இந்நிலையில் பல்கலைக்கழக மட்டங்களில் பொதுவாக ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் கவனயீர்ப்பாக நடைபெற்ற இப் போராட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் தனிப்பட்ட பல்கலைக்கழக மட்டத்திலான பிரச்சினைகளையும் இடைச்செருகிக் கொண்டு தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். ஊழியர்கள் தமது உரிமைகளுக்காக போராடுவதற்கு முற்றிலும் உரித்துடையவர்கள். அவர்களுக்கு தீர்க்கப்படவேண்டிய ஏராளமான பிரச்சினைகள் உண்டு என்பதும் உண்மை. இருந்தும் போராட்டங்களின் போது பின்பற்றப்படும் அணுகுமுறைகள் ஒருபோதும் அநாகரிகமாகவிருந்து விடக்கூடாது. இது பிரச்சினைகளை மேலும சிக்கலுக்குள் தள்ளுவதுடன் தீர்வுகளுக்கான காலங்களையும் பின்னோக்கித் தள்ளும். இது யதார்த்தமான உண்மை. இதனை ஊழியர்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகின்றோம்.

இந் நிலையில் பதிவாளர் அலுவலகம் முன்பாக திரண்டு அலுவலக நேரத்தில் கோஷமிட்டதும் அநாகரிகமான வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபட்டமையும் கண்டிக்கத்தக்கது. எந்தக் கோரிக்கைகளை முன்வைத்து பதிவாளர் அலுவலகம் முன் திரண்டார்கள் என்பது முற்கூட்டி பதிவாளருக்கு தெரியப்படுத்தப்படவில்லை. உரிய அவகாசமும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் முன்னோக்கிய சிந்தனைகளுடன் பல்கலைக்கழக நிர்வாகத்தை நகர்த்த வேண்டிய தருணத்தில் ஊழியர்கள் இவ்வாறு நடந்து கொள்வது வேதனையைத் தருகின்றது. பரஸ்பர நட்புணர்வுடன் பிரச்சினைகளை அணுகித் தீர்வுகளைக் காண வேண்டிய இன்றைய முகாமைத்துவ சூழலில் எதிர்ப்புக் கோஷங்களை முன்வைத்தும் காட்டமான வார்த்தைகளை எழுத்திலும் பேச்சிலும் தொனித்தும் செயற்படுவது ஆரோக்கியமானதாகவிருக்கமாட்டாது.

பல்கலைக்கழகம் எனும் சமூக நிறுவனம் பலரின் ஒத்துழைப்புடனும் அர்ப்பணிப்புடனுமே இயங்கி வருகின்றது. மிகப்பெரிய பிராந்திய கல்வி நிறுவனமாக இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான ஊழியர் படையைக் கொண்டுள்ள நிறுவனத்தில் உள்ளக முரணபாடுகளும் பிரச்சினைகளும் எழுவது சாதாரணமானது. எனவே இவற்றை தீர்த்துக் கொள்ள தொழிற் சங்கங்கள் மென்போக்கை பின்பற்றுவது பொருத்தமானதாகவிருக்கும். அத்துடன் கடமைகளில் இருந்து ஒதுங்கிக் கொள்ளும் போது உரிமைகளில் இருந்தும் ஒதுக்கப்படுவீர்கள் எனும் மாற்ற முடியாத சிந்தனையையும் மனதில் இருத்த வேண்டியது அவசியம். அத்துடன் பொதுப் பிரச்சினைகள் பற்றி பேசும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட ரீதியில் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு ஏனைய பல்கலைக் கழகங்களில் இருந்து வேறுபட்டு வழங்கப்படுகின்ற சலுகைகள் குறித்தும் அவர்கள் சிந்திக்க வேண்டும். அது போன்றே காழ்ப்புணர்ச்சி அற்று அத்தனை ஊழியர்களினதும் முன்னேற்றத்திலும் தொழிற்சங்கங்கள் அக்கறை எடுக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

வரும்காலங்களில் ஊழியர்களின் வினைத்திறனை அதிகரிக்கவும் அவர்களின் பிரச்சினைகளை இயன்றளவு விரைவாக தீர்க்கவும் இணைந்து பணியாற்றுவோம் என்பதுடன் ஊழியர்களும் தமது அணுகுமுறைகளை மாற்றி எமது சமூகநன்மை கருதி பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு தமது அறிவு திறன் சார்ந்து உச்சப் பங்களிப்பை நல்கவேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் என யாழ்.பல்கலைக்கழக நிறைவேற்று உத்தியோகத்தர்கள் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மோடியை மிரட்டிய பாக்.நடிகை!



பாகிஸ்தானை சேர்ந்த தொலைக்காட்சி நடிகை காந்தீல் பலோச் என்பவர் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு வீடியோ மூலம் மிரட்டல் விடுத்துள்ளார்.

அந்த தொலைக்காட்சி நடிகை காந்தீல் பலோச், மோடியை கிண்டல் செய்தும், மிரட்டியும் வீடியோ ஒன்றை வெளியிட்டுள் ளார.

அந்த வீடியோவில், "மோடி, உங்க டீ வியாபாரம் எல்லாம் எப்படி போகிறது. உங்களுக்கு நான் ஒன்றை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நாங்கள் பாகிஸ்தானியர்கள் அன்பு, ஒற்றுமை ஆகியவற்றை நம்புபவர் கள். இதனால் எங்களுக்கு வெறுப்பு மீது நம்பிக்கை இல்லை.

இந்நிலையில் எங்களை கோபப்படுத்தி பார்க்காதீர்கள. பிறகு நாங்களும் கோபப பட்டால் உங்களால் தாங்க முடியாது. உங்களை எச்சரிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார். (இ)

# செய்தித்துளிகள்

## நீரில் மூழ்கி ஜேர்மன் பிரஜை பலி

(கொழும்பு)

கொஸ்கொட - இதுருவ - யாலேகம கடற்பகுதியில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

64 வயதான குறித்த நபர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர் எனத் தெரிய வந்துள்ளது.

சடலம் தற்போது பலபிடிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனைகள் நேற்று இடம்பெற்றன. (இ)

## யாழ்ப்பாண நினைவுகள்-2 அறிமுகவிழா ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

வேதநாயகம் தபேந்திரனின் யாழ்ப்பாண நினைவுகள்-2 எனும் நூலின் அறிமுக விழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மட்டக்களப்பு பொ்து நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபையின் அனுசரணையுடன் நிகழும் இந்நூல் அறிமுக விழாவிற்கு மொழித்துறை கிழக்குப் பல்கலைக்கத்தின் தலைவர் திருமதி ரூபி வலென்ரீனா பிரான்சிஸ் தலைமை தாங்கவுள்ளார். மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மா.உதயகுமார் முன்னிலையில் இந் நிகழ்வு நிகழவுள்ளது. (இ)

## ஸ்னேகர்ஸ் சொக்லேட்டை மீளப்பெறுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

பிரபல சொக்லேட் தயாரிப்பு நிறுவனம் ஒன்று இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு விற்பனை செய்த, தமது தயாரிப்புக்களை மீளப பெறவுள்ளன.

மாஸ் மற்றும் ஸ்னேகர்ஸ்(Mars and Snackers) சொக்லேட்களையே இவ்வாறு மீளப் பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஜேர்மன் நாட்டில், நுகரப்பட்ட ஸ்னேகர்ஸ் சொக்லேட் பாரில் சிவப்பு நிற பிளாஸ்டிக் துண்டு காணப்பட்டமையே இதற்குக் காரணம் என தெரியவந்துள்ளது.

இதன்படி இலங்கை உள்ளிட்ட 55 நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட மில்லியன் கணக்கான சொக்லேட் பார்கள் பாதுகாப்பு அற்றவையாக இருக்கலாம் என கூறப்படுகின்றது.

இதேவேளை, உண்மையில் என்ன நடந்தது என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக, நெதர்லாந்தின் மார்ஸ் கூட்டுறவு விவகார இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (இ)

## மனித எலும்புக்கூடுகள் அடங்கிய உரப்பை மீட்பு

ஜா-எல, எகல பொல சந்தியில் மனித எலும்புக்கூடுகள் அடங்கிய உரப்பை ஒன்று,நேற்று புதன் கிழமை காலை மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த எலும்புகள், ஒரு நபருடையதா அல்லது பல நபர்களுடையதா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## மாணவனின் பிளேட் வீச்சில் நால்வர் காயம்

கம்பஹா, ஹேனேகம பாடசாலையொன்றைச் சேர்ந்த மாணவனொருவன், சக மாணவர்கள் மீது பிளேட் ஒன்றினால் கீறியதில், நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த மாணவர்களில் மூவர் கம்பஹா வைத்தியசாலையிலும் மற்றையவர் ரதாவான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினையொன்று காரணமாகவே, மேற்படி மாணவன் இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் வசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## முதியோர் சங்கப் பொதுக்கூட்டம்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு முதியோர் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இக் கூட்டம் தலைவர் பொன்னையா இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



**நெற்றியில் -**

பெண்களின் நெற்றியில் இடது பக்கத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் ஏழையாக உண்ண,உடுக்க வகையின்றி தவிப்பாள்.

பெண்களின் நெற்றியில் வலது பக்கத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் தங்கள் கணவர்க்கு அடங்கிய அன்புநிறைந்த மனைவியராக இருப்பார்கள்கணவர் அலுவல் பெருட்டு வீட்டிலிருந்து வெளியே சென்றால் வீட்டுக்கதவைத் தாழிட்டுக் கொண்டு உள்ளேயே இருக்கும் இயல்புடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் மிகவும் பாக்கியமும் புகழும் கொண்டவர்களாகத் திகழ்வார்கள். வாழ்க்கைக்குத் தேவையான சகல சுகங்களையும் அனுபவிப்பாள்.

நெற்றியின் நடுவில் மச்சம்,அதுவும் அது சிவப்பாக இருந்தால் அவள் பட்டத்துராணியாகவோ பெரிய செல்வந்தரின் மனைவியாகவும் இருப்பாள்.

நெற்றியில் உள்ள மச்சம் சிவப்பு நிறமாக இருந்தால்,அவ்வாறு இருக்கப் பெற்ற பெண்கள் கோபக்காரராக இருப்பார்கள்.

நெற்றியில் உள்ள மச்சம் மாநிறமாக இருந்தால் அவ்வாறு இருக்கப்பெற்ற பெண்கள் மிகவும் கொடியவர்களாக இருப்பார்கள்.கொலை, களவு, முதலிய கெட்ட குணங்கள் அவ்களிடம்அமைந்திருக் கும்.

நெற்றியில் இடதுபுறம் மச்சம் சிவப்பாக இருந்தால் நல்லவள்.அதுவே கறுப்பாக இருந்தால் துஷ்ட சுபாவம் கொண்டவள்.

நெற்றியில் புருவங்கள் இரண்டும் சேரும் இடத்தில் மச்சம் இருந்தால் அவள் உலகையாளும் அரசனின் பட்டத்தரசியாகத் திகழ்வாள்.அது வலது பக்கமாக கன்னத்தில் இருந்தால் வாழ்க்கைக்குத் தேவையான சகல போகங்களும்நிறைந்தவளாகஇருப்பாள்.

**தலையில்**

பொதுவாக பெண்களுக்குத் தலையில் மச்சம் இருந்தால் அதுதீய பலன்களையே குறிக்கும்.தலையில்மாநிறமான மச் சமோ,அல்லது சிவப்பு நிறமானமச்சமோ இருந்தால் அத்தகைய பெண்கள் துர்க்குணவதியாவாள்.

தலையில் மச்சம் உடைய பெண்களில் சிலர் முன்கோபம் உடையவர்களாக இருப்பார்கள்.சிலர் மிகவும் சோம்பேறிகளாக நீண்டநேரம் உறங்குபவர்களாக இருப் பார்கள்.சிலர் மனவலிமை இல்லாதவர்களாக இருப்பார்கள்.

(தொடரும்...)

# தமிழ் சினிமா வரலாறு

## 105 72-வது வயதில் ஏவி. மெய்யப்ப செட்டியார் காலமானார் (12-08-1979)

**எம்.ஜி.ஆர் மரியாதை**

தகவல் அறிந்ததும், முதலமைச்சர் எம்.ஜி.ஆர், மனைவி ஜனாகி அம்மாளுடன் வந்து, மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். அப்போது அவர் கண்கள் கலங்கின.

நடிகர் சிவாஜி கணேசன், மனைவி கமலா அம்மாளுடன் வந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்.

தி.மு.கழகத் தலைவர் கருணாநிதி, அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன், நடிகர்கள் கமல்ஹாசன், சிவகுமார், ரஜினிகாந்த், முத்துராமன், விஜயகுமார், மேஜர் சுந்தர்ராஜன், பாலாஜி, அசோகன், நாகேஷ், வி.கே.ராமசாமி, பி.எஸ்.வீரப்பா, எம்.கே.ராதா, டி.ஆர்.ராமச்சந்திரன், சாரங்கபாணி, பிரேம் நசீர், மனோகர், வி.எஸ்.ராகவன், நடிகைகள் பண்டரி பாய், கே.ஆர்.விஜயா, மஞ்சுளா, சவுகார் ஜானகி, ஜெயசுதா, மனோரமா, ஜெயா, விஜயகுமாரி, குட்டி பத்மினி, ஜமுனா ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தினர்.

டைரக்டர்கள் கே.பாலசந்தர், பாரதிராஜா, பி.மாதவன், திருலோகசந்தர், எஸ்.பி.முத்துராமன், கே.சங்கர், புல்லையா, கிருஷ்ணன், பஞ்சு, ஐ.வி.சசி, ப.நீலகண்டன், பஞ்சு அருணாசலம், வலம்புரி சோதநாதன், மகேந்திரன், வின்சென்ட், பாட அதிபர்கள் நாகி ரெட்டி, ஜெமினி பாலன், கே.ஆர்.ஜி, வேலுமணி, ஜி.உமாபதி, அரங்கண்ணல், ஜேப்பியார், இசை அமைப்பாளர் எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா, கே.வி.மகாதேவன், சங்கர்- கணேஷ், கங்கை அமரன், வசன கர்த்தா ஆரூர்தாஸ். பின்னணி பாடகர்கள் டி.எம்.சவுந்தரராஜன், பி.பி.சீனிவாஸ், பாடகி எஸ்.ஜானகி உட்பட பலர் இறுதி மரியாதை செலுத்தினர்.

**இறுதி ஊர்வலம்**

மறுநாள் பிற்பகல் 4 மணிக்கு மைலாப்பூர் எட்வர்ட் எலியட்ஸ் ரோட்டில் (இன்றைய ராதாகிருஷ்ணன் சாலை) உள்ள ஏவி.எம். வீட்டில் இருந்து இறுதி ஊர்வலம் புறப்பட்டது.

ஏவி.எம். உடலை அவரது மகன்கள் முருகன், குமரன், சரவணன், பாலசுப்பிரமணியம் மற்றும் மேஜர் சுந்தர்ராஜன், வி.கே.ராமசாமி, திருலோகசந்தர், எஸ.பி. முத்துராமன் ஆகியோர் தோளில் சுமந்து வந்து அலங்கரிக்கப்பட்ட மலர் தேரில் வைத்தனர்.

ஊர்வலம் புறப்படுவதற்கு முன், ஏவி.எம். உடல் மீது சிவாஜி கணேசன் மலர் மலை வைத்து வணங்கினார்.

ஊர்வலத்தில் அமைச்சர்கள் ஆர்.எம்.வீரப்பன், சவுந்தர் ராஜன், நடிகர்கள் முத்துராமன், சிவகுமார், ரஜினிகாந்த், மெஜர் சுந்தர்ராஜன், வி.கே.ராமசாமி, பாலாஜி, அசோகன், டைரக்டர்கள் கிருஷ்ணன்- பஞ்சு, பி.மாதவன், கே.பாலசந்தர், திருலோக சந்தர், இசை அமைப்பாளர் எம்.எஸ்.விசுவநாதன் நடிகை பண்டரிபாய் ஆகியோர் உட்பட திரை உலகப் பிரமுகர்கள் பலர் நடந்து சென்றனர்.



ஏவி.எம் குடும்பப்படம்

**தகனம்**

ஊர்வலம், ஐ.ஜி.அலுவலகம் பின்புறம் உள்ள மயானத்தை அடைந்தது.

அங்கு தகனம் நடந்தது. சிதைக்கு ஏவி.எம்.மின் மூத்த மகன் பழனியப்பன் தீ மூட்டினார். இவர் மெய்யப்ப செட்டியாரின் முதல் மனைவியின் மகன்.

**சாதனைகள்**

தமிழ்ப்பட உலகில் பல திருப்பு முனைகளை ஏற்படச் செய்தவர் ஏவி.எம்.

குறிப்பாக குறைந்த செலவில் தரமான படங்களை எடுக்க வழி காட்டியவர். சினிமாவில் பின்னணிப்பாடும் முறையை அறிமுகம் செய்தவர். புதுமுகங்களைக் கொண்டு வெற்றிப்படங்களைத் தயாரித்தவர். வைஜயந்திமாலா, டி.ஆர்.மகாலிங்கம், டைரக்டர்கள் ப.நீலகண்டன், எம்.வி.ராமன் ஆகியோர் இவரால் பட்டை தீட்டப்பட்டவர்கள்.

படத்தொழிலுக்கு சம்பந்தமே இல்லாத குடும்பத்தில் இருந்து படத் தொழிலுக்கு வந்தவர், ஏவி.எம்.

(தொடரும்)

# பொறுப்புக்கூறல்...

(18 ஆம் பக்கக் கட்டுரையின் தொடர்ச்சி)

'எமது உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான போதியளவு வல்லுனர்கள், நிபுணர்கள் மற்றும் துறைசார் அறிவாளிகளை நாம் அதிகளவில் கொண்டுள்ளோம்' என சிறிசேன தனது நேர்காணலில் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஜனாதிபதியின் இக்கூற்றானது இணை அனுசரணை வழங்கப்பட்ட ஐ.நா தீர்மானத்தை நேரடியாகத் தாக்குகிறது. மைத்திரிபால சிறிசேனவின் நேர்காணலை அடுத்து அதற்குப் பதிலளிக்கும் முகமாக, ஜனவரி 28 அன்று இலங்கையின் முன்னணி வல்லுனர்கள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த 144 பேரைக் கொண்ட குழுவானது கடிதம் ஒன்றை அனுப்பியது.

இக்கடிதத்தில், போர்க் கால மீறல்கள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவில் சுயாதீன வெளிநாட்டு வல்லுனர்கள், நீதிபதிகள், சட்டவாளர்கள் போன்றவர்களும் உள்ளடக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட சமூகத்தினர்கள் முற்றிலும் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையானது நம்பகத்தன்மையற்றது எனக் கருதுகின்றனர்' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் இன்றும் மனவடுக்களுடனேயே வாழ்கின்றனர். காணாமற் போன தமது உறவுகள் மீண்டும் வந்துவிடுவார்கள் என குடும்பத்தினர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

காணாமற் போன தமது உறவுகளை மீட்டுத் தருமாறு இவர்களது குடும்பத்தினர் காணாமற் போனவர்கள் தொடர்பான அதிகாரிகள் மற்றும் ஆணைக்குழுக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான பாதிக்கப்பட்ட சமூகத்திற்கு உடனடியாக உதவிகள் வழங்கப்படுவதுடன் உளவள ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும். போரில் காயப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும்.

'கால்கள், கைகள், கண்கள் போன்ற அவயவங்களை இழந்து பலர் தவிக்கின்றனர்' என மனித உரிமைச் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார்.

போரின் போது தனது கணவனை இழந்த, காணாமற் போன மற்றும் தடுத்து வைக்கப்பட்டவர்களின் மனைவியர் தமது குடும்பங்களைத் தலைமை ' தாங்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இவர்கள் தமது அன்றாடச் செலவுகளைக் கூடச் சமாளிக்க முடியாது திணறுகின்றனர்.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டும் போதுமானதல்ல. இவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். மீறல்களுக்குப் பொறுப்புக் கூறப்பட வேண்டும்.

தனது கணவன இராணுவத்திடம் சரணடைந்து ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் தற்போதும் அவர் காணாமற் போனோர் பட்டியலிலேயே உள்ளதாக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

'மக்களின் படுகொலைகளுக்குக் காரணமான அடிப்படைக் காரணங்களை அரசாங்கம் கண்டறிய வேண்டும். எமது நிலங்களை இலங்கை இராணுவம் தற்போதும் ஆக்கிரமித்துள்ளன.

மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றனர். எமக்கு நீதி கிடைக்க வேண்டும். எமது வாழ்வாதாரங்கள் மேம்படுத்தப்பட வேண்டும்' என அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

போரால் பிளவுபட்ட தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரலாற்று வாய்ப்பை அரசாங்கம் பெற்றுள்ளது. ஆனால் பழைய வடுக்களை ஆற்றக்கூடிய மீறல்கள் தொடர்பான பொறுப்புக் கூறல்கள் இடம்பெறும் பட்சத்தில் மாத்திரமே இது வெற்றியளிக்கும்.

இலங்கைக்கு அண்மையில் பயணம் செய்த ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசைன, இனவாதம் போன்றன நாட்டிலிருந்து களையப் பட வேண் டும் எனத் தெரிவித் திருந்தார்.

போரின் போது காயமடைந்த மற்றும் இறந்த குடும்பங்களுக்காக மன்னார் மாவட்டத்தின் கணேசபுரம் கிராமத்தில் 71 வீடுகள் ஒதுக்கப்பட்டன.

இந்தக் கிராமத்தை அடைவதற்கு நாங்கள் இராணுவ முகாமைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. வாழ்க்கை என்பது மிகவும் கடினமானது என பெண்மணி ஒருவர் தெரிவித்தவாறு தனது மரக்கறித் தோட்டத்தைப் பெருமையுடன் காண்பித்தார்.

இவரது தோட்டத்தைப் போலவே இன்று இலங்கையில் காணப்படும் நம்பிக்கை அறிகுறிகள் பொய்த்துப் போகாது நீடித்து நிலைத்து நிற்கத்தக்க வகையில் செயற்படுத்தப்பட வேண்டும். (முற்றும்)

தமிழீழத்தை பேரினவாதிகள் வெள்ளித் தட்டத்தில் வைத்துத் தரப்போவதில்லை.
-தந்தை செல்வா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழர்களின் ஒற்றுமையில்தான் எதிர்காலம் தங்கியுள்ளது

தமிழ் மக்களுக்கு நல்லாட்சி தரக்கூடிய தீர்வு என்ன என்பது இந்த ஆண்டுக்குள் தெரிந்துவிடும்.

2016 ஆம் ஆண்டுக்குள் தீர்வு என்பதில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் பரிபூரண நம்பிக்கையோடு உள்ளார்.

இவை எல்லாம் நடந்தேறுமா? என்பதைப் பார்ப்பதற்கு இன்னமும் பத்து மாதங்கள் போதுமானவை.

நம்மை பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் இலங்கை அரசாங்கம் எதனையும் தரப்போவதில்லை என்பதே உண்மை.

காலகாலமாக எங்களை ஏமாற்றி வந்த ஆட்சியாளர்கள் இப்போது கூட்டுச் சேர்ந்து ஏமாற்றப் போகின்றனர். ஜனாதிபதி மைத்திரி – பிரதமர் ரணில் என்ற தேசிய அரசாங்க சாயல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சாதகமானதாக இருந்த போதிலும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் எவ்வாறு காலம் கழிப்பது என்பது பற்றியே தேசிய அரசு கூடி ஆராயும் என்பது தான் உண்மை.

இலங்கை அரசாங்கத்தை நம்பி எங்கள் பிரச்சினை தீரும் என்று யாரேனும் நம்பினால் அதைவிட மடமைத்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது. இதை நாம் கூறும்போது, அப்படியானால் இனப்பிரச்சினைக்கு தீர்வே இல்லையா? என்ற கேள்வி உங்களிடம் எழுவது நியாயமானதே.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமாயின் அதற்கான ஒரேவழி இலங்கை அரசுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுப்பதாகும்.

சர்வதேச அழுத்தம் என்பது இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதன் ஊடாக அமைய வேண்டும்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடக்குமாக இருந்தால், இலங்கை அரசு தமிழர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு தானாக முன்வரும்.

அதேநேரம், இனப்பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படக் கூடாது என கோஷமிடும் பேரினவாதிகளும் தங்கள் கொக்கரிப்பை கைவிட்டு பெட்டிப்பாம்பாகி விடுவர்.

எனினும் சர்வதேச விசாரணை என்பதை எங்கள் தமிழ்த் தலைமை இலங்கை அரசுக்காக விட்டுக்கொடுத்து விட்டமைதான் எங்கள் இனத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பு.

சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் மெத்தனப்போக்கை கொண்டிருந்த போது, இலங்கை ஆட்சியாளர்கள் கூறிய முதல் வாசகம் மின்சார நாற்காலியில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை காப்பாற்றினோம் என்பதுதான்.

அப்படியானால், சர்வதேச விசாரணை நடந்திருந்தால் முன்னாள் ஜனாதிபதிக்கு மின்சார நாற்காலியில் இருத்தி தண்டனை வழங்கப்படும் என்பது இன்றைய ஆட்சியாளர்களின் கூற்றில் இருந்து நிரூபணமாகிறது.

எனினும், இதுபற்றி எங்கள் தமிழ்த் தலைமை அலட்டிக்கொள்ளாமல் இருப்பதுதான் தமிழ் மக்கள் செய்த பாவச்சுமை எனலாம்.

எது எப்படியாயினும் இன்று இருக்கக் கூடிய சூழ்நிலையில் தமிழ் மக்களின் ஒற்றுமை ஒன்றுதான் எங்களுக்கான தீர்வைப் பெற்றுத்தரக்கூடிய சக்தியாக உள்ளது.

இருந்தும் தமிழ் மக்களின் ஒற்றுமை, அரசியல்வாதிகளின் சுயநலப்போக்கினால் அடிபட்டுப் போகிறது. இத்தகைய அரசியல்வாதிகளின் துரோகத்தனத்தை அரங்கேற்றி வைப்பதில் அரசியலில் நுழைந்து பதவி பெறத்துடிக்கும் சிலர் கடுமையாகப் பாடுபடுவதுதான் மிகப்பெரும் கொடுமைத்தனம்.

இத்தகைய கொடுமைத்தனத்தை வேரறுக்க தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்பட திடசங்கற்பம் பூணவேண்டும். அப்போதுதான் சுயமைத்தனங்கள் அடிபட்டு உரிமை கிடைக்க வழியேற்படும்.

# ஹர்த்தாலினால் வடமராட்சி ஸ்தம்பிதம்

(வவுனியா)

வவுனியாவில் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பள்ளிச் சிறுமியின் கொலையைக் கண்டித்து நடத்தப்பட்ட ஹர்த்தால் நடவடிக்கையால் வடமராட்சிப் பகுதி ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டது.

இலங்கை போக்குவரத்துச்சபை பேருந்துகள் மட்டும் சேவையில் ஈடுபட்டிருந்தன.

மற்றும் வங்கிகள், தபாலகங்கள் முழுமையாகச் செயற்படாமலும் இயங்கின. விரல் விட்டு எண்ணக்கூடிய தேநீர் சாலைகள் மட்டுமே ஓரிரு இடங்களில் திறக்கப்பட்டிருந்தன.

அதுதவிர வர்த்தக நிலையங்கள், வாகனத் திருத்தகங்கள், சந்தைகள் அனைத்தும் பூட்டப்பட்டுக் காணப்பட்டன.

பாடசாலைகளுக்கு அதிபர், ஆசிரியர்கள் வருகை தந்த போதிலும் மாணவர்களின் வரவு மிகக் குறைவாகவே காணப்பட்டன. இதனால் கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. மேலும் சில பாடசாலைகளில் ஓரிரு மாணவர்களே வருகை தந்துள்ளதாக தெரிய வருகிறது.

வீதிகள் எங்கும் வெறிச்சோடிக் காணப்பட்டதுடன் சில இடங்களில் மட்டுமே ஆங்காங்கே சனநடமாட்டம் காணப்பட்டது.

இலங்கை போக்குவரத்துசபை பேருந்து சேவை இடம் பெற்ற போதிலும் பயணம் செய்வோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே காணப்பட்டது.

வடமராட்சியில் குறிப்பிடத்தக்க அமைப்புக்கள் எவையும் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்காத போதிலும் வவுனியா வன்முறைகளுக்கு எதிரான அமைப்பினால் விடுக்கப்பட்ட ஹர்த்தால் அழைப்பினை ஏற்றுக்கொண்டு சிற்றூர்தி சங்கங்கள், வர்த்தகர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள் என அனைவரும் இக் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-60)

# தென்மராட்சிக்கு இரண்டு பிரதேச செயலகங்கள் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரும்

தென்மராட்சி பிரதேச செயலகத்தை சாவகச்சேரி பிரதேச செயலகம் மற்றும் கொடிகாமம் பிரதேச செயலகம் ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களாக உருவாக்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் எதிர்வரும் அமைச்சரவைக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதோடு அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்படும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சர் விஜித அபயரத்தின தெரிவித்துள்ளார்.

இது விடயம் தொடர்பான சந்திப்பு நேற்றுக் கொழும்பில் அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராஜா, தென்மராட்சி கிழக்கு அபிவிருத்தி ஒன்றியத்தலைவர் க.கனகேஸ்வரன், கொடிகாமம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர், கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் க.அருட்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது 60 கிராம அலுவலர் பிரிவுகள் கொண்ட சாவகச்சேரி பிரதேச செயலகத்தை 28 கிராம அலுவலர் பிரிவுகள் கொண்ட கொடிகாமம் பிரதேச செயலகப் பிரிவாகவும் 32 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவாகவும் இரு பிரதேச செயலகங்களை உருவாக்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இதே வேளை மேற்படி தென்மராட்சி பிரதேச செயலகத்தை இரண்டு பிரதேச செயலகப் பிரிவுகளாக உருவாக்குமாறும் இதன் மூலம் பொது மக்கள் தமது தேவைகளை இலகுவில் பூர்த்தி செய்யவும் காலம், பண விரயங்களை தவிர்க்க உதவும் என்றும் தெரிவித்து சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனால் தொலைநகல் ஒன்று உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு நேற்று முன்தினம் அனுப்பப் பட்டிருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது. (3-19)

# முல்லை.கல்வி வலய தொண்டராசிரியர் விபரப்பட்டியல் மாகாண கல்வியமைச்சுக்கு

(தண்ணீரூற்று)

வன்னி மாவட்ட தொண்டராசிரியர்களின் நியமனங்கள் தொடர்பாக வடக்கு மாகாண கல்வியமைச்சினால் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பெயர்ப்பட்டியலின்படி முல்லைத்தீவு கல்வி வலய தொண்டராசிரியர்களின் சுய விபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டு கல்விப்பணிமனையில் இருந்து கடந்த 23 ஆம் திகதி மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என வன்னி மாவட்ட தொண்டராசிரியர் ஒன்றியத்தின் செயலாளர் எஸ். தர்சன் தெரிவித்துள்ளார். (2-292)

# ஆசிரியரின் வீட்டில் மோ.சைக்கிள் திருட்டு

(இருபாலை)

கல்வியங்காடு ஞான பாஸ்கர வீதியில் அமைந்துள்ள ஆசிரியரின் வீட்டில் கடந்த ஞாயிறு நள்ளிரவு வேளை திருடர்களால் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

இதுகுறித்து மறுநாள் காலை உரிமையாளர் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். (இ-136)

# மெய்வல்லுநர் போட்டி இன்று

(இருபாலை)

கோப்பாய் வடக்கு றோ.க.தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று 25ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு வித்தியாலய முதல்வர் திருமதி பி. ஜெயரட்ணராஜா தலைமையில் புனித சூசையப்பர் கோவில் மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக, சட்டத்தரணியும் வடமாகாண உறுப்பினருமான கேசவன் சயந்தன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் பங்குத்தந்தை அன்ரன் மத்தாயஸ், யாழ். வலய ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி மைதிலி தேவராஜாவும், கௌரவ விருந்தினராக கோப்பாய் கிராம அலுவலர் க.அனுஜனும் பாடசாலை நலன்விரும்பி பா.தவரேந்திரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-136)

# சத்திய தரிசனம்



## நல்லதை மட்டும் பார்

❖ கைலாயத்திலும், வைகுண்டத்திலும் மட்டும் கடவுள் இல்லை. அவர் நம்முடைய இதயத்தில் குடியிருக்கிறார்.

❖ மனதில் அன்பு இல்லாத மனிதன் பாலை நிலத்துக்கு சமமானவன். அவனை மிருகம் என சொன்னாலும் பொருந்தும்.

❖ கடவுள் அவரவர் தகுதிக்கேற்பவே அருள்கிறார். ஆனாலும், நமக்கு எது வேண்டுமோ, அதை அவரிடம் கேட்டும் பெறுவதில் தவறில்லை.

❖ மற்றவரைப் பற்றி தவறாகப் பேச வேண்டாம். அவர்களிடமுள்ள நல்ல பண்புகளை மட்டும் பார்க்கப் பழகுங்கள்.

# மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வட மாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்

அந்தவகையில் 26.02.2016 வெள்ளி யாழ்.பிரதேசத்தில் அச்செழுப் பிரதேசம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் சாம்பல் தோட்டம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## தெய்வங்களுக்கு வாழைப்பழம் படைப்பது ஏன் என்று தெரியுமா?

எல்லா தெய்வங்களுக்கும் தவறாமல் வாழைப்பழம் படைக்கிறார்கள். மற்ற எந்தப் பழமாக இருந்தாலும் சாப்பிட்டுவிட்டு, கொட்டையை எறிந்தால் மீண்டும் முளைக்கும்.

ஆனால், வாழைப்பழத்தை உரித்தோ, முழுமையாகவோ வீசினாலும் கூட மீண்டும் முளைப்பதில்லை. இது பிறவியற்ற நிலையாகிய முக்தியைக் காட்டுகிறது.

எனது இறைவா! மீண்டும் பிறவாத நிலையைக் கொடு! என வேண்டவே நாம் நமது கடவுளுக்கு வாழைப்பழம் படைக்கிறோம். அதுபோல் தேங்காய்க்கும் அந்த குணம் உண்டு. அது மட்டுமல்ல தேங்காய் , வாழைப்பழம் இரண்டும் நமது எச்சில் படாதவை.

மாம்பழத்தை நாம் சாப்பிட்டுவிட்டு, கொட்டையைப் போட்டால் அந்த விதையிலிருந்து மாமரம் உருவாகிறது. ஆனால், தேங்காயை சாப்பிட்டுவிட்டு ஓட்டைப் போட்டால் அது முளைக்காது. முழுத் தேங்காயிலிருந்து தான் தென்னைமரம் முளைக்கும்.

அது போல, வாழைமரத்திலிருந்து தான் வாழைக்கன்று வரும். பழம் கொட்டை என்பது கிடையாது. அப்படி நமது எச்சில்படாத இவற்றை இறைவனுக்கு உகந்ததாக நமது முன்னோர்கள் படைக்கும் மரபினை உருவாக்கினார்கள். நாமும் இந்த மரபினைப் பின்பற்றிவருகிறோம்.

# ஏ.பி. வி.கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான கிரிக்கெட் போட்டி

## கார்மேல் போய்ஸ் வெற்றி





ஏபிவிளையாட்டுக்கழகம்வடமாகாண ரீதியாக நடத்தி வரும் 11 பேர் 16 பந்து பரிமாற்றம் கொண்ட கிரிக்கெட் போட்டிகளில் லீக் ஆட்ட ங்களில் பங்குபற்றுவதற்கு கார் மேல் போய்ஸ், கலை ஒளி, ஞானம்ஸ், ஈகிள்ஸ், கிளிநொச்சி ஆகிய 5 அணிகள் தகுதி பெற்றன.

இதில் முதற்போட்டியில் கார்மேல் போய்ஸ் எதிர் கலை ஒளி அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய கலை ஒளி சகல இலக்குகளையும் இழந்து 76 ஓட்டங்களை பெற்றது. இதில் அதிக பட்சமாக மோகன்ராஜ் 25 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் உதயா 4 இலக்குகளையும் துசாந் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் 5 இலக்குகளை இழந்து 10 ஆவது பந்து பரிமாற்றத்தில் வெற்றி இலக்கை அடைந்தது. அஜன் 25, அலன் 20, அனோஜன்20 ஓட்டங்களை பெற்றனர். ஆட்ட நாயகனாக உதயா தெரிவானர்.

இரண்டாது லீக் ஆட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர் கொண்ட கார்மேல் போய்ஸ் களத்தடுப்பில் ஈடுபட்டது. ஞானம்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 86 ஓட்டங்களை பெற்றது. அவ் அணி சார்பாக பிரகாஸ் 25 ஓட்டங்களை பெற்றார். கார்மேல் போய்ஸ் அணி சார்பாக பந்து வீச்சில் துசாந் 4, உதயா3 ,பிரதி2 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல் போய்ஸ் 6 இலக்குகளை இழந்து 9 ஆவது பந்து பரிமாற்றத்தில் வெற்றி இலக்கை அடைந்தது. அஜன் 35, செல்ரன் 15, அலன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்ட நாயகனாக அஜன் தெரிவு செய்யப்பட்டார். இதனால் புள்ளிப்பட்டியலில் கார்மேல் போய்ஸ் முதல் இடத்தை பெற்றுள்ளது. (க)

# கொழும்புத்துறை அதிரடியை வீழ்த்தி சம்பியனாகியது காந்திஜீ சுப்பர் கிங்ஸ்




சரஸ்வதி இளைஞர் கழகம் நடத்திய 18 வயதிற்குட்பட்ட அணிகளுக்கிடையிலான துடுப்பாட்ட போட்டியில் கொழும்புத்துறை அதிரடி அணியினை வீழ்த்தி சம்பியனாகியது கொக்குவில் காந்திஜீ சுப்பர் கிங்ஸ் அணி. (க)

# புண்ணியமூர்த்தி ஞாபகார்த்த மென்பந்து சுற்றுத் தொடர்

## இறுதிப்போட்டியில் சைனிங்ஸ் வி.கழகம்



(யாழ்ப்பாணம்)

நேதாஜி விளையாட்டுக்கழகத்தை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம். கா.புண்ணியமூர்த்தி ஞாபகார்த்த மென்பந்தாட்ட தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் சைனிங்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நேதாஜி விளையாட்டுக்கழகம் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நேதாஜி விளையாட்டுக்கழகம் 10 ஓவர்களில் 57 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் 9 ஓவர்களில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (க)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# கற்சிலைமடு பரந்தாமனை வீழ்த்தி மாங்குளம் மின்னொளி வி.கழகம் சம்பியன்

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான வருடாந்த மென்பந்து துடுப்பாட்ட போட்டியில் மாங்குளம் மின்னொளி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியனாகியது.

பதின் மூன்று கழகங்கள் பங்குபற்றிய இப்போட்டியானது கற்சிலைமடு மகாவித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இறுதிச்சுற்றுக்கு மாங்குளம் மின்னொளி விளையாட்டுக்கழகமும் கற்சிலைமடு பரந்தாமன் விளையாட்டுக்கழகமும் தெரிவாகியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பரந்தாமன் விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அவ்வணி நிர்ணயிக்கப்பட்ட பத்து பந்துப்பரிமாற்றங்களில் எட்டு இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மாங்குளம் மின்னொளி விளையாட்டுக்கழகம்9.5 பந்துப்பரிமாற்றங்களில் 77 ஓட்டங்களை பெற்று சம்பியானது. (க-281-301)

# பருத்தித்துறை பிரதேச செயலக உதைபந்து வல்வை அணி அரையிறுதிக்கு தெரிவாகியது



பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் வருடந்தோறும் நடத்தி வரும் விளையாட்டுப் போட்டிகளின் வரிசையில் உதைப்பந்தாட்ட சுற்றுத் தொடர் இன்று நெற்கொழு விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் வல்வை விளையாட்டுக்கழகம் அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

நடைபெற்ற முதல் போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கழுகுகள் விளையாட்டுக்கழகம் மோதியது. இப்போட்டியில் வல்வை விளையாட்டுக்கழகம்2:0 என்றகோல்கணக்கில்வெற்றிபெற்றது.

காலிறுதிப் போட்டியில் பலம் வாய்ந்த பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை அணி மோதியது இந்த ஆட்டத்தில் 1:0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. (க)



அகில இலங்கை ரீதியில் மாவட்டங்களுக்கு இடையில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்டோருக்கான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி சம்பியனாகி கடந்த சனிக்கிழமை அன்று உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிக்காக இந்தியா சென்றுள்ளது. அவ்வணியினை படத்தில் காணலாம்.






கொத்மலை சொக்ஸ் தேசிய மட்டத்தில் நடத்திய 19 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட தொடரில் முதல்முறையாக சம்பியன் பட்டத்தை பெற்றுக்கொண்ட இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி வீரர்கள் மற்றும்(most popular university sports star-2015) எனும் விருதினை வென்ற செபமாலைநாயகம் ஞானரூபன் (ஞானம்) ஆகியோருக்கான பிரமாண்டமான வரவேற்பு நிகழ்வு நேற்றுமுன் தினம் நடைபெற்ற போது...

# அமெரிக்க துணை உயர்ஸ்தானிகருடன் சீ.வீ.கே தலைமையில் மூவர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க துணை உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட 4 பேர் கொண்ட குழுவினருக்கும் வட மாகாண சபையின் அவைத்தலைவர் ச.வி.கே. சிவஞானம் தலைமையிலான 3 பேர் கொண்ட குழுவினருக்கிடையில் சந்திப்பொன்று நேற்றையதினம் கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாணசபை அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக வட மாகாணசபை அவைத தலைவரை தொடர்பு கொண்டு கேட்டபோது, அவர் தெரிவிக்கையில்,

புதிய அரசியல் யாப்பு தொடர்பாக வட மாகாண சபையின் கருத்துக்கள் மற்றும் எதிர பார்ப்புக்கள் தொடர்பாகவும் வடக்கின் தற்போதையநிலை எவ்வாறு உள்ளது என்றும் எமது கருத்துக்களை கேட்டறிவதற்காக அவர்கள் வருகை தந்திருந்தனர்.

எமது அரசியல் விடயங்களில் அமெரிக்காவின் வகிபாகம் மிகவும் முக்கியமாக இருப்பதை நாம் அறிகிறோம். அந்த வகையில் எமது நலனில் அக்கறை கொண்டு எமது கருத்துக்களை கேட்டறிவதற்காக அவர்கள் வருகை தந்திருந்தமை நன்மை அளிக்கும் என நம்புகிறேன். எமது கருத்துக்களை கூறுவதற்கு இது ஒரு வாய்ப்பாக எமக்கு அமைந்துள்ளது.

தமிழ் மக்களுக்கான நல்ல ஒரு அரசியல் தீர்வை பெற்றுக் கொள்வதற்கான சிறந்த வாய்ப்பாக இப் புதிய அரசியல் யாப்பை பயன்படுத்தி அதற்கான முயற்சிகளை அனைவரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசியல் தீர்வு தொடர்பாக நல்ல தீர்வை பெறுவதற்கு அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளை தொடர்ச்சியாக ஊக்குவிக்க வேண்டும் எனவும் அவர்கள் எமக்கு தெரிவித்திருந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் வட மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன், எஸ்.சயந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (செ-9)

## சங்கடஹர சதுர்த்தி நாளை



(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மாசி மாத சங்கடஹர சதுர்த்தி விரத உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி வசந்த மண்டப பூசை இடம்பெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வரும் நிகழ்வும் இடம்பெறும். (செ)

# வலம்புரியின் செய்திக்கு பாடசாலை அதிபர் விளக்கம்

24-02-2016 ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் 'பாடசாலைக் கட்டடத்தின் கூரை உடைந்த நிலையில்' எனும் தலைப்பில் வெளிவந்த செய்தி தொடர்பில் பாடசாலையின் அதிபர் அனுப்பியுள்ள பத்திரிகைக் குறிப்பை இங்கு பிரசுரிக்கின்றோம். மேற்படி செய்தி அதிபரோடு கலந்துரையாடப்படாது வெளியிடப்பட்டுள்ளது.

கற்பித்தல் செயற்பாடுகள் அற்ற கைவிடப்பட்ட இக் கட்டடத்தை அகற்றி அவ்விடத்தில் புதிய கட்டிடத்தை அமைத்துக் கொடுக்க கொழும்பு மியுசியஸ் கல்லூரியின் பெண்கள் சாரணிய உறுப்பினர்கள் முன் வந்துள்ளனர்.

கட்டடத்தை அமைக்க காலதாமதம் ஏற்படலாம் எனக் கருதி என்னாலும் பாடசாலைக்காக நியமிக்கப்பட்ட பாடசாலை அபிவிருத்திக் குழுவின் வலயப் பிரதிநிதியாலும் தனித்தனியான எழுத்து மூல கோரிக்கைக் கடிதம் கடந்த 17.02.2016 ஆம் திகதி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு முன்வைக்கப்பட்டு உடனடியாகவே அவரால் அதற்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. தொடர் நடவடிக்கையாக கட்டடத்தை அகற்றுவதற்கான நிர்வாக தேவைப்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

விளையாட்டு மைதானம் சொந்தமாக எமக்கென இல்லை. நாம் பல தனியார் காணிகளிலும் அண்மைக்காலமாக பாடசாலைக்கு அருகாமையில் உள்ள ஆலயக் காணியிலும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டு விளையாட்டுப் போட்டியை நடத்தி வந்தோம். அத்தோடு ஒன்றுவிட்ட ஒரு வருடம் சிறப்பாக விளையாட்டுப் போட்டியை நடத்துவதென்ற அடிப்படையில் 2013 ஆம் ஆண்டும் 2015 ஆம் ஆண்டும் நடத்தியிருந்தோம். இவ் வருடம் (2016)விளையாட்டுப் போட்டியை நடத்துவது எமது நிகழ்ச்சி நிரலில் இல்லாத படியால் நாம் ஆலய நிர்வாகத்திடம் அனுமதி எதுவும் கோரவில்லை.

எமது பாடசாலையின் மொத்த மாணவர் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் வரவு வீதம் உயர்வாக உள்ளதை பாடசாலைக்கு வருகை தரும் உரிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபரினால் இவ் விளக்கம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (செ)

# நியூசிலாந்து பிரதமருடன் சந்திப்பு ஒப்பந்தங்கள் சில கைச்சாத்து



பொதுநலவாய நாடுகளான இலங்கை மற்றும் நியூசிலாந்துக்கு இடையில் நீண்ட கால தொடர்பு மற்றும் சக்தி மிக்க இணைப்பு காணப்படுவதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நியூசிலாந்துப் பிரதமரை சந்தித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையில் சில ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளது.

விஷேடமாக நியூசிலாந்து விவசாய நாடாக புதிய தொழில்நுட்ப உத்திகளுடன் முன்னோக்கி செல்வதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டின் பால் தொழிற்துறைக்கு அந்த தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக் கொளளும் வகையிலான, பயிற்சி வேலைத் திட்டங்களை செயற்படுத்துவது குறித்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் பொருளாதார, வர்த்தக மற்றும தொழில்நுட்ப அறிவு பறிமாற்றம் உள்ளிட்ட சில ஒப்பந்தங்களிலும் கையெழுத்திட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (செ-12)

# வடக்கு முழுவதும் நேற்று ஸ்தம்பி...



ளப்பட்ட ஹர்த்தால் நடவடிக்கை காரணமாக வவுனியா மாவட்டம் முற்றாக செயலிழந்தது.

சமூக வன்முறைக்கு எதிரான மக்கள் அமைப்பு விடுத்த ஆதரவு வேண்டுகோளுக்கு அமைய வவுனியா மாவட்டத்தில் சிங்கள பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களை தவிர அனைத்து தமிழ் முஸ்லிம் வர்த்தகர்களும், வர்த்தக நிலையங்களை பூட்டி நீதிகோரும் எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

இதேவேளை தனியார் பேருந்துகள், முச்சக்கர வண்டிகள், வவுனியா இ.போ. சாலை பேருந்துகள் சேவையில் ஈடுபடாத நிலையில் ஏனைய மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட இலங்கை பேருந்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் சேவையில் ஈடுபட்டமையை அவதானிக்க முடிந்தது.

தனியார் மற்றும் அரச வங்கிகள் வழமைபோல் இயங்கியதுடன், அரச திணைக்களங்களில் குறைந்தளவான ஊழியர்களே பிரசன்னமாகியிருந்தனர். பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்த போதிலும் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கான சங்கீத, நாடக, நடன செயன்முறை பரீட்சைகள் நடைபெற்றன.

**மன்னார்**

நேற்றுக் காலை 6 மணிமுதல் மன்னார் தனியார் பேருந்து சங்கத்தில் இருந்து உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களுக்கான சகல விதமான போக்குவரத்து சேவைகளும் நிறுத்தப்பட்டன.

இதனால் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மடு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளுக்கு போக்குவரத்தும் பாதிப்படைந்தது.

உள்ளூர் சேவைகளும் இடம்பெறாமையினால் தூர இடங்களில் இருந்து பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள் தாமதித்த நேரத்திலேயே பாடசாலைக்கு சென்றதை அவதானிக்க முடிந்தது.

மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் சில மூடப்பட்டும் சில திறந்த நிலையிலும் வியாபார நடவடிக்கைகள் அங்கு இடம்பெற்றன.

மேற்படி 5 மாவட்டங்களை தழுவியதாக இடம்பெற்ற ஹர்த்தாலுக்கான நடவடிக்கைகளினால் வடக்கின் இயல்புநிலை பாதிக்கப்பட்டிருந்தது.

வன்முறைகள் எதுவும் நிகழாத வண்ணம் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தால் அனுஷ்டிப்பு மூலம் ஹரிஸ்ணவியின் படுகொலைக்கு நீதிகோரிய வலுப்படுத்தல்கள் நேர்பட அமைந்துள்ளமையை எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4-9-11-12)

# நேபாள விமானம் விபத்து; பயணிகள் அனைவரும் உயிரிழப்பு




(காத்மண்டு)

நேபாள நாட்டின தலைநகரான காத்மண்டுவில் இருந்து சுமார் 200 கிலோமீட்டர் மேற்கேயுள்ள சுற்றுலாத்தலமான போக்காராவில் இருந்து ஜாம்சான் நகருக்கு புறப்பட்டுச் சென்ற தனியாருக்கு சொந்தமான சிறியரக விமானம் நேறறு காலை விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்துள்ளனர்.

போக்காரா நகரில் இருந்து புறப்பட்டு 20 நிமிடங்களுக்குப் பின்னர் கட்டுப்பாட்டு அறையுடனான தொடர்பை இழந்த தாரா ஏர் நிறுவனத்துக்கு சொந்தமான அந்த விமானத்தில், இரு வெளிநாட்டினர், இரு குழந்தைகள் உட்பட 20 பயணிகள் இருந்தனர்.

அத்துடன் விமானி மற்றும் ஊழியர்களுடன் சேர்த்து 23 பேர் பயணித்த குறித்த விமானம், ஒரு மலைப்பகுதியில் விழுந்து நொறுங்கிக் கிடப்பது கண்டறியப்பட்டதுடன் பயணித்த அனைவரும் உயிரிழந்ததாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. (செ-11)

# சுதந்திர கட்சி...

தப்படும் பொலிஸ் விசாரணைகள் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளை நிறுத்தினால், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்துகூட ஓய்வுபெற தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியிடம் கூறியபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ ஆட்சியில் குற்றம் செய்தவர்களை சட்டத்திற்கு முன் கொண்டு வருவதாக கூறி ஆட்சிக்கு வந்த தான், அந்த செயற்பாடுகளுக்கு தடையேற்படுத்துவதைவிட ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவது பொருத்தமானது எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டுக்கு அமைய கடந்த 17 ஆம் திகதி கொழும்பில் கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பிரதிநிதிகள், கட்சி இரண்டாக பிளவுபட்டாலும் ஜனாதிபதியின் கொள்கைக்கு ஆதரவு வழங்குவது என தீர்மானித்துள்ளனர்.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷவின் இந்த செயற்பாடுகள் காரணமாக இறுதியில் உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகளுக்கு போவதற்கு இடமில்லாது போய்விடும் எனவும் சிரேஷ்ட உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த காலங்களில் கிராம மட்டத்தில் நடந்த ஊழல், மோசடிகளில் தொடர்புடையவர்கள் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கி வரும் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள் குழுவில் முன்னிலையில் இருப்பதாகவும் அவர்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும் நிலைமையானது கவலைக்குரியதாக இருக்கும்எனவும் அவர்கள் கூறியுள்ளனர். (செ-12)

## வடக்கு முழுவதும்...

வவுனியா மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்ட பூரண ஹர்த்தாலுக்கு எந்த பொது அமைப்புக்களோ, அரசியல் கட்சிகளோ பகிரங்க அழைப்பு எதுவும் விடுவிக்காத நிலையில் பொதுமக்கள் தாமாக முன்வந்து எவ்வித வன்முறையும் அற்று பூரண ஹர்த்தாலை முன்னெடுத்திருந்தனர்.

பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்கு செல்லாது சக மாணவிககாக நீதிகோரிய ஹர்த்தாலுக்கு வலுச்சேர்த்ததோடு, தனியார் பேருந்து உரிமையாளர் சங்கமும் தமது போக்குவரத்து சேவைகளை முழுமையாக புறக்கணித்து பூரண ஆதரவு வழங்கியிருந்தது.

இதனால் ஹர்த்தால் எவ்வித இழுபறியும் இன்றி கடைப்பிடிக்கப்பட்டது.

குழப்பமான அறிவித்தல்கள் சில விடுக்கப்பட்டிருந்த போதும் யாழ். நகர வர்த்தகர்கள் தாமாகவே முன்வந்து முழு நாள் கடையடைப்பினை மேற்கொண்டதனை அவதானிக்க முடிந்தது.

சில நகைக்கடைகள், புடைவைக் கடைகள், உணவகங்கள் என்பவற்றைத் தவிர ஏனையவை மற்றும் பலசரக்கு வியாபார நிலையங்கள், மின்சாதன விற்பனை நிலையங்கள், கட்டிட பொருள் விற்பனை நிலையங்கள் என்பன உட்பட அனைத்து வர்த்தக நிறுவனங்களும் வவுனியா மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி முழு நேர கடையடைப்பில் ஈடுபட்டன.

அனைத்து தரப்பும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவினை வழங்கிய போதிலும், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் வழமையான சேவையில் ஈடுபட்டதோடு, யாழ்.நகரில் உள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கமும் தமது வழமை போன்ற சேவைகளை முன்னெடுத்ததை அவதானிக்க முடிந்தது.

நேற்றைய தினம் க.பொ.த சாதாரண தர மாணவர்களின் செயல்முறை பரீட்சை நடைபெற்ற போதிலும் தனியார் பயணிகள் பேருந்தின் பகிஷ்கரிப்பால் மாணவர்கள் வரவு குறைவாகவே இருந்ததாக பரீட்சை நிலைய பொறுப்பதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும் நேற்றையதினம் நடைபெற்ற பரீட்சைக்கு தோற்ற தவறிய மாணவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து கொடுக்கப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கம், தனது முழுமையான ஆதரவினை மேற்படி மாணவியின் நீதிக்கான ஹர்த்தாலுக்கு வழங்கியிருந்தது.

இதன்படி பாடசாலைகளில் மாணவர்கள் வரவு மிகக்குறைவாக காணப்பட்டதால் எந்த பாடசாலைகளிலும் நேற்றையதினம் கற்றல் கற்பித்தல் நடைபெறவில்லை என அறிய முடிகின்றது.

யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறை, உரும்பிராய், சித்தன்கேணி, மானிப்பாய், சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி என அனைத்து பிரதான நகர்களும் நாளாந்த நடவடிக்கைகள் இன்றி வெறிச்சோடியே காணப்பட்டன.

ஒரு சிலரினால் ஹர்த்தால் தொடர்பில் சிறு குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும், மக்கள் தாமாகவே முன்வந்து ஹர்த்தாலை வன்முறையின்றி முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை வடக்கின் ஏனைய மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் இயல்பு நிலை ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டது, ஐந்து மாவட்டங்களிலும் உள்ள பொது வைத்திய சாலைகளிலும் அவசர சிகிச்சை பிரிவுகளுக்கே நோயாளர் வருகை காணப்பட்டது.

இது தவிர வீதிகளில் மக்களின் நடமாட்டம் என்பது மிக குறைவாகவே காணப்பட்டது.

**கிளிநொச்சி**

நேற்றுக்காலை தொடக்கம் கிளிநொச்சியிலுள்ள அனைத்துக் கடைகளும் மூடப்பட்டதோடு தனியார் பேருந்து சேவையும் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

இருப்பினும் இலங்கை போக்குவரத்துச் சபையின் ஒரு சில பேருந்துகள் சேவையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது.

கிளிநொச்சி வணிகர் சங்கத்தினர், தனியார் வங்கிகள் மற்றும் கிளிநொச்சி தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் என பலதரப்பட்ட அமைப்புக்கள் மேற்படி ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கியிருந்தன.

கிளிநொச்சியிலும் மாணவர்களின் வரவு பாதிப்படைந்த நிலையல் பாடசாலைகளில் கற்றல் கற்பிதல் செயற்பாடுகள் நடைபெறவில்லை.

**முல்லைத்தீவு**

வவுனியா மாணவியின் மரணத்திற்கு நீதிகோரும் வகையில் வடமாகாணத்தில் நடைபெற்ற ஹர்த்தால் நடவடிக்கை நேற்று முல்லைத்தீவு மாவட்டத்திலும் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக் காலை முதல் முல்லைத்தீவில் உள்ள அனைத்து கடைகளும் மூடப்பட்டிருந்தன. தனியார் பேருந்து சேவை, பாடசாலைகள் முற்றாக செயல் இழந்து காணப்பட்டன.

**வவுனியா**

மாணவி ஹரிஷ்ணவியின் படுகொலையை கண்டித்து நேற்று மேற்கொள்

23ஆம் பக்கம் பார்க்க....

## 12 மணிநேர...

கொள்வதற்காக நேற்று புதன் கிழமை பரோலில் வெளியே வந்துள்ளார்.

தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டம் அம்பலவாணபுரத்தில் வசித்து வந்த நளினியின் தந்தையான ஓய்வுபெற்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கர நாராயணன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உடல்நலக் குறைவால் தனது 91-வது வயதில் காலமானார்.

இந்நிலையில், தந்தையின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்க நளினியை 3 நாள் வெளியில்வர அனுமதிக்க வேண்டும் என்று சென்னையில் உள்ள சிறைத துறை தலைவர் மற்றும் வேலூர் பெண்கள் சிறை கண்காணிப்பாளர ஆகியோருக்கு நளினியின் தாயார் பத்மாவதி நேற்று முன்தினம் மனு ஒன்றை கையளித்திருந்தார்.

இதையடுத்து தந்தையின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வதற்காக நளினிக்கு 12 மணி நேரம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 6.50 மணிக்கு நளினியை 7 துப்பாக்கி ஏந்திய பொலிஸார் சென்னைக்கு அழைத்து சென்றுள்ளனர்.

தந்தையின் இறுதிச் சடங்குகள் முடிவடைந்த நிலையில் மீண்டும் நேற்று மாலையே அவர் சிறைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்.

ராஜிவ் காந்தி கொலை வழககில் நளினி தண்டனை பெற்று 25 ஆண்டு களாக வேலூர் பெண்கள் தனிச்சிறையில் ஆயுள் தண்டனை கைதியாக உள்ளார் என்பதும், கடந்த 25 வருடங்களில் முதன்முறையாக நளினி சிறையில் இருந்து பரோலில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை மேற்படி இறுதிச் சடங்கில் பங்கேற்றிருந்த நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், பரோலில் வைத்திருந்த நளினியைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஹரிஸ்ணவிக்கு நீதிகோரி...

போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இக்கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுக்காலை 9.00 மணியளவில் வைமன் வீதியில் அமைந்துள்ள ஆறுதல் நிறுவனத்தினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நல்லாட்சி அரசே சிறுமிகள் கொல்லப்படுவதுதான் உன் நல் ஆட்சியா? சிறுமியை கொலை செய்த காமுகர்களை உடனடியாக கைது செய், எங்கள் பிள்ளைகள் சுதந்திரமாக நடமாடுவதற்கு வழியேற்படுத்து,

எங்களின் கல்வியை சீரழிக்காதே, மாணவிகளென்ன பாலியல் பொருட்களா? பாலகி ஹரிஸ்ணவியின் கொலைக்கு குரல் கொடுப்போம்.

சிறுவர் உரிமையை உறுதி செய் என எழுத்தப்பட்ட பதாகையை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.

இப் போராட்டம் சுமார் இரண்டு மனித்தியாலங்கள் நடத்தப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

இதேவேளை மாணவியின் படுகொலைக்கு நீதி கோரி நேற்றையதினம் வடக்கு மாகாணம் முழுவதும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டிருந்ததோடு,

இன்றையதினம் யாழ்.பல்கலைக்கழகம் உட்பட பல இடங்களில் மாணவியின் நீதிக்காய் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## அரசியல் கைதி...

அதனை மறுத்து தனக்கு புனர்வாழ்வு தேவையில்லை என்றும் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என கோரியிருந்தார். இந்த நிலையிலேயே சட்டமா அதிபர் திணைக் களத்தின் ஆலோசனைக்கமைய நேற்றையதினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேலும்ஏற்கனவேபிணையில் விடுவிக்கப்பட்டிருந்த 8 பேரும்நேற்றைதினம்அனைத்து வழக்குகளிலும் இருந்து நீதிமன்றால் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். (செ-9)

## தொடர் உண...

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். கரவெட்டி வடக்கு, கரணவாயைச் சேர்ந்த மதியரசன் சுலக்சன், நாவலப்பிட்டி, மக்கும்பரவைச் சேர்ந்த கணேசன் சந்திரன் மற்றும் புதிய மகசின் சிறைச்சாலையில் ஜே பிரிவில் உள்ள 13 ஆண் தமிழ் அரசியல் கைதிகளும், பெண்கள் பிரிவில் உள்ள ஒருபெண் தமிழ் அரசியல் கைதியுமாக பிரமசகாயம் உதயகுமார், சிவசுப்பிரமணியம் தில்லராஜ், நடேஸ் குகநாதன், மு.சிவநாதன், மா.நீதிநாதன், க.வேதநாயகம், ந.தர்மராஜா, சு.ஞானசீலன், தயாபரன், தி.மனோகரன், யோசப் செபஸ்ரியான், சுப்பிரமணியன் கபிலன், இராசதுரை திருவருள், இரவீந்திரன் மதனி ஆகியோரே உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இவர்கள் தமது விடுதலை குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வரையில் தாம் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை எனவும், நீண்ட காலமாக விசாரணைகளின்றி சிறைச் சாலைகளில் தங்கியிருந்து சொல்லெண்ணா துன்பங்களை அனுபவித்து வரும் நாம் விடுதலையை வலியுறுத்தி உயிரைத் துச்சமெனமதித்தே இப் போராட்டத்தை முன்னெடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

இவர்களது உடல்நிலை சோர்வடைந்தநிலையிலும் மருத்துவ வசதிகளை பெற்றுக் கொள்ளாமல் தமது போராட்டத்தை தொடர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-9)

## கைக்குண்டு...

விசேட அதிரடிப்படை முகாமுக்கு எதிராக உள்ள பகுதியில் நேற்றைய தினம் மாலை 5.00 மணியளவில் பழுதடைந்த நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

ஜம்போறி நிகழ்வுக்காக வருகை தந்துள்ள மாணவர்களுடைய கூடாரங்கள் அமைந்துள்ள பகுதியிலேயே குறித்த கைக்குண்டு காணப்பட்டதாக பொது மக்களால் படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

இத் தகவலை அடுத்து அப் பகுதிக்கு வந்த விசேட அதிரடிப் படையினர் அங்கிருந்து கைக் குண்டை எடுத்துச் சென்றுள்ளனர். (செ-9)

கிராம உத்தியோகத்தர்களுக்கான போட்டிப் பரீட்சை

இப் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புக்க்ள் அனுபவமிக்க விரிவுரையாளர்களினால் ஆரம்பமாக இருக்கின்றது.

காலம் : 27/02/2016

நேரம் : நண்பகல் 12.00 மணி

குறிப்பு :-( அச்சிடப்பட்ட குறிப்புக்கள் வழங்கப்படும் )

021 222 8148
077 314 4762

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-3829)




ENGLISH HALL

அரச அலுவலர்கள் பல்கலைக்கழக மாணவர்களுக்கான

Spoken English with Grammar

வகுப்புகள் ஆரம்பம்:
29.02.2016 (திங்கள்) மாலை 5.00 - 6.00 மணி
பதிவுகளுக்கு : பி.என்.சுதர்ஷன் (ஆசிரியர்)
T.P : 0773144527
(3688)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.